# வழுவிலா மணிவாசகர்

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை - 30

# வழுவிலா மணிவாசகர்

அ. மு. பரமசிவானந்தம்

(இதன் விற்பனை வருவாய் அனைத்தும் வள்ளியம்மாள்
கல்வி அறத்துக்கு உரியதாகும்)

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை - 30

உரிமைப் பதிப்பு—உரிமை ஆசிரியருக்கே.
பிப்ரவரி : 1985

இதை நடிக்க விரும்புவோர்
ஆசிரியர் இசைவினைப் பெறல் வேண்டும்.

விலை ரூ. 7-00

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

184, பிராடுவே : : சென்னை - 1.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

# புறவுரை

சமயம் வளர்த்து அச் சமயத்தால் சமுதாயத்தை வாழவைத்த அடியவர் பலர். அந்த ஆக்கப் பணிக்கு அவ்வடியவர் செய்த தியாகச் செயல்கள் அளவற்றன. பழியுற்றும் தம்மையே பறிகொடுத்தும் மெய்ச் சமயநெறியையும் சமுதாயத்தையும் வாழ வைத்த அடியவர்களில் மணிவாசகர் தலையாயவர்.

செய்யாத பழியினைச் சிவன் செயலெனத் தம்மேல் ஏற்று, அவனருளாலே அனைத்தையும் வென்றவர் மணிவாசகர். அவர் வரலாற்றை மாற்றியும் பிறழ வைத்தும் வேறுபடுத்தியும் அவ்வக்காலச் சூழலுக்கு அமையக் கதையாக எழுதி வைத்தனர் சிலர். எனினும் சமயநெறி நின்றும் மெய்அருள் நோக்கியும் ஆராயின் உண்மை புலனாகும். இதன் விளக்கத்தை முன்னுரையில் காட்டியுள்ளேன். இறைவனாரே 'வழுவிலாத பேர் மாணிக்கவாசகன்' என அழைத்த நல்ல பெருமைக்குரிய அடியவர் இவர்.

இறைவன் அழைத்த பெயராலேயே 'வழுவிலா மணிவாசகர்' என அமைகின்றது இந்நூல். நாடக அமைப்பில் உள்ளமையின் சிற்சில புதுமைகளும் மாற்றங்களும் கொண்டுள்ளது. அவையெல்லாம் நாடகப் போக்குக்கென அமைந்ததாகக் கொண்டு காணின் அடியவர் வரலாறு நன்கு விளக்கமுறும். இது

நாடகமாக நடிக்கும் வகையிலேயே ஆக்கப் பெற்றுள்ளது.

இவ் வரலாறு என் எண்ணத்தெழுந்த ஒன்று. இதுவே முடிந்த முடிபென நான் வாதிட வரவில்லை. அறிஞர் இத்துறையில் ஆராய்ந்து மணிவாசகரை 'வழுவிலாதவராக'வே ஆக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

இந்நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் என் நன்றி.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை - 30
30 - 4 - 66

பணிவுள்ள
**அ. மு. பரமசிவானந்தம்**

## இறைவன் பேரிட்டார்

**பழுதிலாத சொல் மணியினைப் பத்திசெய் தன்பு**
**முழுதுமாகிய வடத்தினுல் முறைதொடுத் தலங்கல்**
**அழுது சாத்துமெய் யன்பர்க்கு அகமகிழ்ந் தையர்**
**வழுவிலாத பேர் மாணிக்கவாசகன் என்றுர்.**

(பரஞ்சோதியார்)

# முன்னுரை

உலகம் தோன்றிய நாள்தொட்டு எத்தனையோ அறிஞர்களும் அறவோர்களும், சமயத் தலைவர்களும் பிற நல்லவர்களும் தோன்றி உலகை உய்விக்கப் பல்வேறு வகைகளில் பாடுபட்டு வருகிறார்கள். வரலாற்றுக்குமுற்பட்டகாலம் போக, வரலாற்று எல்லையில் நின்றே ஆராயுங்கால் நம்முன் காட்சியளிக்கும் நல்லவர் பலர். அவர்கள் பல்வேறு நாடுகளில் தோன்றிப் பல்வேறு மொழிகளைப் பேசி, பல்வேறு சமயங்களையும் கொள்கைகளையும் வகுத்தும் வளர்த்தும் பின் வரும் மக்களினம் வாழ வழிகாட்டிச் சென்றுள்ளார்கள். அவர்தம் பருஉடல் மறைந்தாலும் அவர்தம் அருள்நலம் சான்ற நுண்ணுடல் இன்னும் உலகில் நம்முடன் நமக்காக வாழ்கின்றது—அவர்கள் எழுதி வைத்த உணர்வு கலந்த உள்ளொளி பெருக்கும் நல்லெழுத்துக்கள் இன்றும் வாழ்கின்றன. அவர்தம் எழுத்துக்களே மனித சமுதாயத்தை உய்விக்கும் ஊன்றுகோல்.

தமிழ்நாட்டு வரலாற்றில் சமயம் முக்கிய இடம் பெற்றுள்ளது. சங்ககாலத்துக்கு முன் தொடங்கி இன்றுவரை நாட்டில், ஒருசில நூற்றாண்டுகள் தவிர்த்து, சைவம் வைணவம் என்ற இருபெரு சமயங்களுமே ஆட்சி செலுத்துகின்றன. இரு சமயங்களிலும் தோன்றிச் சமய நெறியையும் தமிழையும் ஒன்றி வளர்த்த செந்தண்மை பூண்டொழுகிய

அந்தணாளர் பலர். அவருள் சைவ உலகம் நால்வரையும் வைணவ உலகம் பன்னிருவரையும் பாராட்டிப் போற்று கின்றன. சைவ சமயக் குரவர் நால்வருள் சிறந்தவராகப் போற்றப்படுகின்றவர் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகர் திருவாசகப் பாடல்கள் உள்ளத்தை உருக்குவன; சைவர்களை மட்டுமின்றிப் பிற சமயம் சார்ந்தவர்களையும்கூட அப் பாடல்கள் பின்னிப் பிணைக்கின்றன. கிறித்தவ சமயம் வளர்க்க ஆங்கில நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த 'போப்' (Pope) பாதிரியார் திருவாசகத்தில் ஈடுபட்டுத் தம்மை மறந்தார்; திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். எனவே திருவாசகம் சமயங் கடந்து உள்ளம் கொள்ளைகொள்ளும் தெய்வ நூலாக அமைந்து விட்டது.

திருவாசகத்தைப் படித்துப் படித்துத் தம்மை மறந்த அடியவர் பலர். அவருள் சிவப்பிரகாசர் ஒருவர். அவர் தம் நான்மணி மாலையில் திருவாசகத்தின் உளந்தொடும் தன்மையை வியந்து வியந்து,

'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை உலகில் மற்றையோர் இலரே'

என்று பாராட்டித் திருவாசகம் உலக மக்கள் அனைவரையும் ஈர்க்கவல்லது எனக் காட்டுகின்றனர். அண்மையில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் அவரினும் ஒருபடி மேலே சென்று, மக்கள் மட்டுமன்றிப் பிற எல்லா உயிரினங்களுமே திருவாசகத்தில் தம்மை மறக்கும் எனக் காட்டுவர்.

'வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்

வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் எனில்இங்கு நானடைதல் வியப்பன்றே'

என்பது திருவருட்பா. அண்மையில் வாழ்ந்து இலக்கியம் பாடிய மனோன்மணீய ஆசிரியராகிய சுந்தரம்பிள்ளை அவர்கள்,

'மனம்கரைத்து மலங்கெடுக்கும்
வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக்
கண்மூடிக் கதறுவரோ'

என்று திருவாசகம் பயின்றோர், இறைவனை அடைய வேறு முயற்சிகள் செய்யவேண்டுவதில்லை எனக் காட்டி இதன் பெருமையை விளக்குகிறார். "திருவாசகத்துக் குருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகாதார்" என்பது நாடறிந்த நல்ல பழமொழி. இவ்வாறு பண்டுதொண்டு இன்றுவரை நல்லவர்களால் பாராட்டப்பெற்ற வாசகம் பாடிய மாணிக்கவாசகர் தம் வரலாறு நாட்டில் நன்கு விளக்கப்பெறவில்லை.

தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலகில் மக்களினம் வாழ அரும்பாடுபட்டவர்தம் வரலாறுகள் நன்கு வரையப்படவில்லை என்பது உண்மை. தம்மை உலகுக்கு விளம்பரப் படுத்திக்கொள்ளாது, தமது கடமை 'இது' என உணர்ந்தும் உணர்த்தியும் வாழ்ந்த பல பெரியவர்களைப்பற்றி நம்மால் அறியமுடியவில்லை. சிறப்பாகத் தமிழ் நாட்டில், தம்மை அறிவிக்காது தலையாய பணிசெய்த நல்லவர் வரலாறுகளை நாம் காண முடியவில்லை. ஊரும் பேருமற்ற வகையிலேயே தமிழ்நாட்டுப் பெரும் புலவர்கள் இன்றுவரை தத்தம் பாடல்களாலும் பண்புகளாலுமே வாழ்ந்துவருகிறார்கள். அத்தகைய வரிசையில் வைத்து எண்ணப்படத் தக்கவர் மாணிக்கவாசகர்.

மணிவாசகருடைய வாழ்க்கையைப்பற்றிய குறிப்பு ஒன்றுமே இல்லை என்றாலும் கவலை இல்லை, அவருடைய

வாழ்க்கையை ஒரு சில புராணங்கள் உணர்த்துகின்றன. அவ்வாறு உணர்த்தும்போது அவை அறிந்தோ அறியாமலோ அவர் வாழ்வில் பல கற்பனைகளைப் புகுத்தி, அவர்தம் தூய தொண்டு வாழ்வுக்கு இழுக்கைத் தேடிவிடுகின்றன. நம் இந்தியநாடு உரிமைபெற முயன்ற அண்ணல் காந்தி அடிகளார் முதலிய நல்லவர் மேற்கொண்ட தியாக வாழ்வையெல்லாம் திரித்து வரலாற்று நூலாக எழுதிப் பொதுமக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் பயில அனுப்பப்பெற்றன எனவும், அவற்றை மாற்றி அமைக்க வேண்டுமெனவும், இன்றைய அரசாங்கத்தார் பாடுபடுவதைக் காண்கின்ற நமக்கு, பல ஆண்டுகளுக்கு முன் நடந்த வரலாறுகளில் பொய்யும் வழுவும் எவ்வாறு புகுத்தப் பெற்றிருக்குமென உணர முடிகின்றதன்றோ? ஆளும் நிலையில் இருந்த ஆங்கிலேயர் தமக்கு மாசு உண்டாகா வகையில் உரிமைக்குப் பாடுபட்ட மற்றவரை இழித்தும் பழித்தும் வரலாறு எழுதினர். நல்ல வேளை நாம் இன்னும் சில ஆண்டுகள் உரிமை பெறாது மாற்றியெழுதும் நிலை உண்டாகா திருந்திருக்குமானால் அவையே வரலாற்று உண்மைகளாக நிலைபெற்றிருக்குமன்றோ? மாணிக்கவாசகர் வரலாறும் அத்தகையதே. பாண்டிய அரசனது ஆணைவழி அக்காலத்தவர் சிலர் மணிவாசகர் உண்மைத் தொண்டினை மறைத்து, மன்னவன் புகழ் பரவும் வகையில் கதை எழுதிவிட்டார்கள். அதுவே பின்னால் புராணங்களாக உருப்பெற்று இன்று நாட்டில் உலவுகின்றன.

மற்றும்-அக்காலத்தில் வாழ்ந்த மன்னரும் மற்றைய அமைச்சர்களும்-அவர் வாழ்க்கையை திருத்தியும், மாற்றியும் எழுதவேண்டிய தேவை அவர்களுக்கு உண்டாயிற்று. மணிவாசகர் தம் பண்பாலும் கடமை உணர்ச்சியாலும் தொண்டின் திறத்தாலும் நாட்டு மக்கள் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டார். வழிவழியாக அமைச்சராக இருந்தவருக்கும் மன்னவனுக்கும் அதனால் பொறாமை உண்டாயிற்று. இந்த நிலை இன்றும் நாட்டில் காண்கிறோம், நல்ல தொண்டு செய்து நாட்டுமக்கள் முன்னிலையில் பேரும் புகழும் பெற்று

உயர்ந்தவர் சிலரைக் கண்டு மற்றவர் பொறுமைக்கொண்டு, அவர்களுக்குக் குற்றம் கற்பித்து உலவுவதைக் காண்கின்றோம். எனவே மணிவாசகர் காலத்து மந்திரிகளும் மன்னனும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. பண்பாலும் தொண்டாலும் மக்கள் மனங்கவர்ந்த மணிவாசகர் மற்றொரு வகையிலும் நாட்டு மக்களால் பாராட்டப்பெற்றார். குதிரை வாங்கச் சென்ற விடத்தில் குருவினைக் கண்டார். எனவே தம் வசமிழந்தார்; அமைச்சர் பதவியைத் 'தூ'வென்று தள்ளினார். தாம் அதுவரையில் சேர்த்த பொருளை அரன் கோயிலுக்கென அர்ப்பணித்தார். மன்னவன் பணத்தைத் திருப்பிவிட்டார். கோயில் வளர்ந்தது; கூடவே மாணிக்க வாசகர் புகழும் வளர்ந்தது. இதைக் கண்டு மன்னவன் பொருமினான். ஆம். பாண்டிய நாட்டில் மட்டுமன்றித் தமிழ்நாடு முழுவதும் அவர் புகழ் ஓங்கியதைக் கண்டு மன்னவன் பொருமினான்; மந்திரிமார் சூழ்ச்சி செய்தனர். அந்தச் சூழ்ச்சியில் முகிழ்த்ததே இன்றைய கதை.

புகழ் பெற்ற வாசகருக்கு மாசு கற்பிக்க நினைத்தனர் மந்திரியும் மன்னனும். எனவே, அரசன் பணத்தைக் கொண்டுதான் கோயில் கட்டினார் எனப் பொய் வாதத்தை உண்டு பண்ணினார்கள் அவர்கள். மாணிக்கவாசகரை நாட்டில் பழிப்புக்கு ஒருவராக்க வேண்டுமென முனைந்தார்கள். மன்னன் அவர்தம் கூற்றுக்குச் செவி சாய்த்தான்—மதி மறந்தான். என்றாலும் அவன் செய்கை அவனது அறியாமையை விளக்குகின்றது. பெருந்துறையில் கோயில் கட்டியதை மன்னவன் அறியானா? 'ஒற்றொற்றித் தந்த பொருளை மற்றுமோர் ஒற்றினால் ஒற்றிக் கொளல்' என்ற வள்ளுவர்தம் அரசியல் வாழ்ந்த நாட்டில்—தன் நாட்டின் எல்லையில் தன் பணியாளர் ஒருவர் செய்யும் செயலை அறியத் திறமற்ற மதியில்லா மன்னனாக அவன் விளங்கினானா? மணிவாசகருடைய சுற்றத்தாரெல்லாம், அவர் பெற்ற பொருளையெல்லாம் கோயில் கட்டிச் செலவு செய்த தன்மையை,

தழுவிய கிளைஞர் நட்டோர்
சார்வுளோர் தக்க சான்ருேர்
குழுவினைக் காக்க வேண்டும்
குறிப்பிலீர் போலு நீவிர்
ஒழுகுறு செயலி ஞலே;
உம்செய லுமக்கே சால
அழகிது போலும்' (வாத. உப. படலம், 82.)

என்றும்,

'விரைசெறி தாராற் கின்று
வெம்பரி வருவ தாக
உரைசெய் தீர்நாளை நீவிர்
என்சொல வல்லீ ரையா?' (''81)

என்றும் வெளிப் படையாக அவர் பொருளைச் சுற்றத் தாருக்கும் மற்றவருக்கும் கொடுக்காது கோயில் கட்டிய நிலையையும், மன்னனுக்கு மறுநாள் பதில் சொல்லத் தெரியாது தடுமாற வேண்டிய நிலையையும் எடுத்துக் கூறும் போது மன்னன் மட்டும் இவற்றை உணராதிருந்தது வியப்பல்லவா?

கோயில் கட்டிய பொருள் மாணிக்கவாசகருடையதென் பதை மன்னன் உணர்வான். பாண்டியன் பொருளையெல் லாம் ஒட்டகத்தின்மேல் ஏற்றிப் பாதுகாவலோடு அனுப்பிய பிறகே தம் பொருளோடு கோயில் புகுந்து, சொக்கநாதர் முன்சென்று தமது பொருளையெல்லாம் அவன் திருப்பணிக் குச் செலவிட அருள் செய்யுமாறு வேண்டிப் புறப்படுகிருர் எனப் பரஞ்சோதியார் காட்டுகின்ருர்.

'ஒன்று வேண்டுமிப் பொருளெலாம்
உனக்குமைம் பொறியும்
வென்று வேண்டுநின் அன்பர்க்கு
மாக்குக வெள்ளி

மன்று வேண்டிநின் ருடிய
வள்ளலென் குறையீ(து)
என்று வேண்டிநின்று ஏத்துவார்க்
கிறைவன தருள்போல்

ஆதி சைவனும் அருச்சகன்
ஒருவன்நேர் அணைந்து
பூதி யீந்தனன் நமக்கிது
போலிலை நிமித்தம்
ஈது நன்னெறிக் கேதுவென்
றிருகையேற் றணிந்து
வேத நாதனை யிறைஞ்சினர்
விடைகொடு மீண்டார்'

(வாத. உப. படலம், 24-25)

என்று இறைவன் அருள்பெற்று, மதுரையிலிருந்து புறப்படுவதற்குமுன் தாம் அதுவரை வருந்திப் பெற்ற அமைச்சர் ஊதியமாகிய பெரும் செல்வத்தை ஆண்டவன் கோயிலுக்கே என்ற உறுதியுடன் புறப்பட்டுச் சென்றார். குதிரைகள் இருந்திருப்பின் அவற்றை வாங்கி அனுப்பிவிட்டு, பெருந்துறையிலேயே தங்கித் தம் பொருளால் கோயில் அமைக்கவேண்டும் என்ற திட்டத்துடனேயே அவர் புறப்பட்டுச் சென்றார். ஆனல், குதிரைகள் கிடைக்கவில்லை. எனவே, பணத்தைப் பாண்டியனுக்குத் திருப்பி அனுப்பிவிட்டுத் தம் பணிவழியே தலைநின்றார். அதற்கென ஆண்டவன் வலியவந்து ஆட்கொண்டு அருள் செய்தான்.

கோயில் வளர வளர அவர் புகழும் வளர்ந்தது. ஒரு வேளை மணிவாசகர் அனுப்பிய பொருள் அரசனிடம் சேரா வகையிலே இடையுள்ளார் சதி செய்திருக்கலாம்—அன்றி சேர்ந்தும் இருக்கலாம். ஆயினும், அவரது முன்னைய பண்பாட்டினிடைப்பட்ட தொண்டின் திறனும் அமைச்சியற்றன்மையின் சிறப்பும் தந்த புகழோடு கலைக் கோயிலாகத் திகழும்

பெருந்துறைக் கோயிலின் புகழும் நாடு முழுவதும் பரவவே அதற்கொரு முடிவு காணச் செய்யப்பட்ட ஏற்பாடுகளே கதையின் பிற்பகுதிகளாக அமைகின்றன.

இன்றும் நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறு வதைக் காண்கின்றோ மல்லவோ? ஒரு சிலர் தம் உழைப்பா லும் முயற்சியாலும் பேரும் புகழும் பெறுவதைக் கண்டு மற்ற வர் பொறாமைப்படுகின்றனர். அப் பொறாமையாளர்களிடம் அதிகாரமும் பதவியும் அமைந்துவிட்டால் சொல்லவேண்டிய தில்லை. அவருக்குத் துன் மந்திரிகளும் சேர்ந்துவிடுகின்றனர். இந்த நிலையில் தம் அதிகாரத்தைக் காட்டி, அந்த மெய்த் தொண்டருக்கு மாசு கற்பிக்கின்றனர். ஆனால், உண்மையில் அந்தப் பொறாமைக்காரர்களே அழிகின்றார்கள். அன்றைக் கும் இன்றைக்கும் ஒருவேறுபாடு மட்டும் காண்கின்றோம். அரசனாக அன்றிருந்தவன் ஆண்டவன் இடையீட்டால் அவனை அடித்து, அமைச்சர்தம் செருக்கடக்கி, துன்மந்திரி களையும் நொறுக்கியபின் உணர்வு வந்து, ஆண்டவனை வழிப் பட்டுத் தான் செய்த குற்றத்துக்குக் கழுவாய் தேடி மணி வாசகரையே பணிந்தான். இன்றைய அகங்காரம் பிடித்த அந்தப் பொறாமைக்காரர்கள் அவர்தம் தவற்றுக்காக அவரை நைய அடித்து ஆணவத்தை வேரறுத்தாலும் துன் மந்திரிகளை மாய்த்தாலும் அவர்தம் உறவினரை உருத் தெரியாமல் சிதைத்தாலும் கவலைப்படுவதில்லை. அதனாலேயே இக் கொடியவர்கள் அடியோடு நசுக்கப்படுகிறார்கள். எந்த அதிகாரம அவர்தம் கண்ணை மூடிற்றோ அது அழிய அழிய அடியோடு அழிகிறார்கள்.

இவ்வாறு மாணிக்கவாசகர் பழிசுமக்கும் நிலையில் கதை அமைகின்றது என்றாலும் சற்றே ஆழ்ந்து நினைக்கும்போது பல உண்மைகள் தோன்றும். மாணிக்கவாசகர் என்னதான் உருக்கமாகப் பாடினராலும் அவர் செயல் அவ்வாறு மற்றவர் பணத்தைக் கையாளும் நிலையில் அமைந்திருப்பின் —அப் பணி ஆண்டவன் பணியாகவே இருந்தாலும்—தவறு

தான். அந்தத் தவறு செய்தவர் பாடல்கள் இப்படிக் காலம் கடந்து—நாடு கடந்து—ஏன்?—சமயமும் கடந்து வாழும் என்று யாரே சொல்லவல்லார்? வேறு பொருள் பற்றிய பாடல்களாயினும் ஒருவாறு சிலகாலம் வாழலாம் என்பர். ஆனால், சமய அடிப்படைப் பாடல்கள் உளத் தூய்மையும் செயற்றூய்மையும் இல்லாதவர் பாடினால் நிச்சயம் அவை காலத்தை வென்று வாழமாட்டா! இன்று மட்டுமல்லாது எக்காலத்திலும் வாழும் வகையில்—தமிழ் அழிந்தாலும் வேற்று மொழியில் வாழும் வகையில்—மணிவாசகர் திருவாசகம் அமைந்துவிட்ட ஒன்றே அவர் தவறு செய்யாதவர் என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றதன்றோ? இறைவனே அவரை 'வழுவிலாதபேர் மாணிக்கவாசகன்' என அழைத்தமையாலும் அவர் குற்றமற்றவர் என்பது தெளிவுறுமன்றோ? இந்த அடிப்படைகளின்படியும், முன் அரசன், அமைச்சர் ஆகியோர் மனநிலை அடிப்படைகளின்படியும் ஆராய்ந்தால் மணிவாசகர் வரலாறு வேறு வகையில்தான் இருந்திருக்க வேண்டும் என்பது ஒருதலை. இதை அறிவுடையார் ஏற்பர் என்பதில் ஐயமில்லை. ஆனால், எப்படி இருந்திருக்கும் என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டாகலாம். எனினும் நல்லவர்கள் ஒன்று சேர்ந்து ஆராய்வார்களாயின் உண்மை புலனாகாமற் போகாது.

தம் புகழ் கண்ட காரணத்தினாலேயே மன்னனும் பிற மந்தரிகளும் தம்மீது பழி சுமத்துகிறார்கள் என்பதை நன்கு உணர்ந்தவராகிய மணிவாசகர், தமக்குப் புகழ் வேண்டாம் என்பதை வெளிப்படையாகவே ஆண்டவன்முன் வேண்டுகோளாக வைக்கின்றார்.

'உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்' என்றும், 'வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்' என்றும் பாடித் தம் கருத்தை உலகுக்கு உணர்த்துகின்றார். இந்த உண்மையினைச் சங்ககால முதற்கொண்டு இன்றுவரை அடியவர் பலரும் காட்டிக்கொண்டுதான் வருகின்றார்கள். எனவே, மணிவாசகர் தம் புராண வரலாறே

அவர்தம் புகழ் அடிப்படையின் பொருமையால் உருவாயிற்று என்பது தெளிவாகும். எனவே அவர் வரலாறு எப்படி அமைந்திருக்கும் என என்னை எண்ணத் தூண்டிற்று.

திருவாசகத்தைப் பலமுறை படித்து உணர்ந்து நிற்கின்ற நிலையிலே இத்தகைய அருளாளரும் தவறுவாரோ என்ற எண்ணம் என் உள்ளத்தில் உண்டாகி உறுத்திக்கொண்டே வந்தது.

'தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகு ரைக்குமேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தார் என்பர் போலும்'
—பெரியாழ்வார் (4. 9. 2)

என்று ஆண்டவனே போற்றும் அடியவர் தவறுவார்களோ? சிற்சில சமயங்களில் என் உள்ளத்தில் பலப்பல புதுக் கருத்துக்கள் உருவாகும். இந்த நிலையிலும் அவர் வரலாற்றை ஒத்த மேலே கண்ட சில நிகழ்ச்சிகளை நேரில் காணும் வாய்ப்பிலும் பல நினைவு உண்டாயிற்று. எனவே, அவர் வரலாறு இந்த வகையில்தான் அமைந்திருக்கும் என முடிபிட்டு அவர் வரலாற்றை ஓரளவு குறித்தேன். அதை அப்படியே சைவர்கள்முன்—தமிழ் மக்கள்முன் வைக்க நினைத்தேன். மிகச் சுருக்கமாக அவ்வரலாற்றைத் தொகுத்தேன். பிறகு அதை நாடகமாக்கினல் நன்ருக இருக்குமென்று சில நண்பர்கள் அறிவுறுத்திய காரணத்தாலே அவ்வரலாற்றை இந் நாடக நூலாகவே எழுதி முடித்தேன். இடையிடையே அவர்தம் 'தித்திக்கும் மணிவார்த்தை'களையே பாடல்களாக அமைத்துள்ளேன். 'முன்ஞேர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுதல்' மரபல்லவா? நான் கருதிய வரலாற்றையும் சுருக்கமாக உடன் எழுதியுள்ளேன்.

இந்த அமைப்பு புதியது. சில சைவ அன்பர்கள், அடியவர் வரலாற்றை இப்படி மாற்றலாமா என்று வாதிடுவர்;

சிலர் இவற்றிலெல்லாம் ஆராய்ச்சியே கூடாது என்பர். ஆனால், சற்று நின்று நினைப்பார்களானால் இவ்வாராய்ச்சி மணிவாசகருக்கு வழிவழியாக் வந்த பழியைத் துடைக்கவே பயன்பட்டது என்பதை உணர்வார்கள். சைவ அடியவர்கள் உண்மையில் பற்றும் பக்தியும் உடையவர்களாயின் தன் சமயக் குரவர்கள் பழியுடையவர்களாக—அதுவும் செய்யாத பழியைச் சுமப்பவர்களாக—வாழ்வதை விரும்புவார்களா?

இந்த வரலாறுதான் முடிந்த முடிபு என்று நான் கூற வில்லை. என் மனத்தில் பட்ட கருத்துக்களே இவ்வாறு உருப் பெற்றன. இதில் பிற்பகுதியில் வரும் சிற்சில நிகழ்ச்சிகள் இயற்கை நிலைக்கு மேற்பட்டன (Supernatural) வாயினும், அவற்றை மாற்றின், சைவ அன்பர் மனம் நையு மென்ற காரணத்தால், அவற்றை அப்படியே அமைத்துக் கொண்டேன். மணிவாசகர் வரலாறு இவ்வாறுதான் அமைந்திருக்க வேண்டுமென்பதை முதலில் சுருக்கி எழுதிக் காட்டியுள்ளேன். இதில் மாற்றம் இருப்பின் நல்லவர் ஆய்ந்து சொன்னால், என்றும் தலைதாழ்த்தி ஏற்றுக்கொள் வேன். ஆராய்ச்சி அறிஞர்களையும் சமயத் தலைவர்களையும் இத்துறையில் கருத்திருத்தி ஆராய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கதை நாடகமாக அமையுங்கால் சில பாத்திரங்களைப் படைக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. பத்திரங்களின் வாயிலாகவே வரலாற்று உண்மைகள் பலவற்றை வெளியிட வேண்டும் என்பதே நாடக நியதி. அந்த அடிப்படையில் இந்நாடகத்தில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் மணிவாசகர் வரலாற்று அடிப்படையில் அமைந்து அவ் வரலாற்றைத் தொடர்பு கெடாது அமைக்கும் வகைக்கு உதவுகின்றன. இப் பாத்திரப் படைப்புக்களின் வழியே இக்காலத்து இவ் வரலாற்றை ஒட்டிய பல நிகழ்ச்சிகளையும் ஓரளவு உணர்ந்து கொள்ள முடியும் என எண்ணுகின்றேன். வரலாறோ கதையோ, நாடகமோ சென்ற நிகழ்ச்சிகளை நிகழ் காலத்தில் வாழும் மக்களுக்குக் காட்டி, எதிர் காலத்தில் அவர்கள்

குற்றங் களைந்து குணமுற்று வாழ வழிகாட்டியாக அமைய வேண்டுமென்பதே அறிவுடையார் துணிபு. அந்த வகையில் இந்நாடகமும் இதில் வரும் பாத்திரங்களும் மக்கட் சமுதாயத்தின் வருங்கால நல்வாழ்வுக்கு வழிகோலிகளாக அமைய வேண்டும் என்பது என் ஆசை. அதிகாரமும் ஆணவமும் பட்டமும் பதவியும் கொடுமைசெய்ய எவ்வளவுதான் சாதகமாக இருந்தாலும்—அவற்றின் துணையால் சிலர் மற்றவர்களுக்கு மனமறிந்த பொய்வழிக் கொடுமைகளைச் செய்தாலும், முடிவில் அக் கொடுமைகளும் அதிகாரமும் ஆணவமும் அழிய உண்மை தலைதூக்கி நிற்கும் என்பதை உணர்த்துவதே மணிவாசகர் வரலாறு. அவ்வரலாறு இன்றும் என்றும் உலகில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியேயாகும். இவ்வுண்மையை ஓரளவு முயன்று காட்டியுள்ளேன். அறிஞர்களும் அன்பர்களும் ஏற்று, குறையிருப்பின் காட்டுவார்களாயின் அடுத்த பதிப்புக்களில் திருத்திக்கொள்ள முயல்வேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்த அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக. இந்நூல் இம்முறையில் அமையவும் இம் முன்னுரை எழுதவும் இடமாயிருந்தது குற்றால மலைச் சாரலாகும். ‘குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே, கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே’ என்று மணிவாசகர் கசிந்த மண்ணிலே இந்நூல் உருவான நிலை பொருத்தமாகுமென நம்புகிறேன். வாழ்க மணிவாசகர் புகழ்! வளர்க அவர்தம் அறப்பணி!

குற்றாலம்
10-6-1962

அ. மு. ப.

# வரலாறு

பாண்டி நாட்டிலே உள்ளது வாதவூர். அந்த ஊரில் பரம்பரையாக அமைச்சயாக இருந்த 'அமாத்திய' குலம் ஒன்று வாழ்ந்து வந்தது. அக் குடும்பத்தில் பிறந்தார் மாணிக்கவாசகர். அவருக்கு அவருடைய தாய் தந்தையர் இட்ட பெயர் என்ன என்பது நமக்குத் தெரியாது. அவரைப் பற்றி எழுதியவர்களெல்லாம் அவரை ஊர்ப்பெயர் கொண்டே 'வாதவூரர்' என அழைக்கின்றனர். இவ்வாறு பேரற்ற அவர் பல கலைகளைக் கற்று விளங்கினர். அவர்தம் பரம்பரைக்கு ஏற்ப அமைச்சர் தொழிலுக்கு ஏற்ற பல கலைகளையும் கற்று வல்லவராக விளங்கியதுடன் வேறு பல கலைகளையும் கற்றுச் சிறந்தார். அவற்றுடன் இறைவனிடம் நீங்காத பற்றுக்கொண்டு என்றும் அவனைப் போற்றிவணங்கி வந்தார். அவருடைய பெற்றோர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை; ஒருவேளை இளமையிலேயே அவர்கள் மறைந்து விட்டிருக்கலாம். எனினும் தம் செல்வ வளத்தாலோ, அன்றி அறிவின் திறத்தாலோ மணிவாசகர் அல்லது வாதவூரர் சிறந்து விளங்கினர்.

அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டவன் அரிமருத்தனன். அவனுக்குப் பல அமைச்சர்கள் உடன் துணையாக உற்றுழி உதவினர்கள். அவருள் பல நல்லவரும் பல

அல்லவரும் இருந்திருப்பர். ஒருவேளை அல்லாதார் தலைவன் தலைமை அமைச்சனாகி, அரசனுக்குக் காரியஞ் செய்வானாக இருந்திருப்பான். அந்த வேளையில் வாதவூரர்தம் அறிவும் புகழும் நாடு முழுதும் பரவின; அரசனுக்கும் எட்டின. அவரை நேரில் வரவழைத்து அவர் திறனை வியந்திருப்பான். அவர் பரம்பரையும் அமைச்சர் பரம்பரை. எனவே, அவரைத் தனக்கு அமைச்சராக்கிக் கொண்டான்;—சாதாரண அமைச்சராக அன்று—தலைமை அமைச்சராகவே அவரை அமர்த்தி விட்டான். அவரும்,

'அண்ணலரி மருத்தனனுக்
    கடல்வாதவூ ரமைச்சர்
கண்ணுமிரு கவசமும்போல்
    காரியஞ் செய்தொழுகுவார்'

(வா. உ. ப. 8)

ஆகி, அவன் காரியங்கள் அனைத்திலும் கருத்திருத்தி வந்தார். எனவே, அதுவரை தலைமையிடத்திருந்த அமைச்சனுக்கும் அவனுடைய துணையாட்களுக்கும் அவர்மீது பொறாமை எழுந்தது. மன்னன் மட்டுமின்றி, அவர்தம் தொண்டினையும் தூய உள்ளத்தையும் தன்னலமற்ற தியாக வாழ்வையும் கண்டு, மக்களும் அவரைக் கொண்டாடிப் போற்றினார்கள். அவரோ ஒன்றையும் கவனியாது கடமை வழி ஒழுகி அரசனுக்கு உற்ற அமைச்சராக வாழ்ந்ததோடு, ஆண்டவனுக்கு அன்புத் தொண்டு செய்தும் அறவழி நின்றும் வாழ்ந்து வந்தார். அவரை எப்படியாவது தாழ்த்த வேண்டுமென்று முயன்ற துன்மந்திரிக்கும் அவன் துணைவருக்கும் வாய்ப்புக் கிடக்கவே இல்லை. இப்படியே ஆண்டுகள் பல கழிந்தன. வாதவூரர் தமக்கென ஒன்றையும் சேர்த்து வைத்துக் கொள்ளாமல், தாம் பெற்ற திங்கள் ஊதியத்தை அப்படியே சேர்த்து வைத்து, ஆண்டவன் பணிக்குப் பயன் படுத்தக் காலம் பார்த்திருந்தார். துன்மந்திரியும் அவன் துணைவரும் அவரைத் தூற்றுவதற்குக் காலம் பார்த்திருந்தனர். ஆம்! இரண்டிற்கும் காலம் வந்துவிட்டது.

பாண்டிய மன்னனுடைய குதிரைக் கொட்டிலில் நல்ல குதிரைகள் இல்லை; அரேபிய நாட்டிலிருந்து தன் துறைமுக மாகிய பெருந்துறைக்கு நல்ல குதிரைகள் வருகின்றன எனக் கேள்விப்பட்டான். அக் குதிரைகளை வாங்கிவர யாரை அனுப்புவது என எண்ணினன் மன்னன். பெரும் பொருளைக் கண்டவரிடம் கொடுத்தனுப்ப விரும்பவில்லை. அவன் வாதவூரரை அழைத்துத் தன் நிதி அறையைத் திறந்து குதிரை வாங்கவேண்டும் பொருள்களைக் கொண்டு செல்லப் பணித்தான்; அத்துணை நம்பிக்கை அவனுக்கு அவரிடமிருந் தது. அவரும் அவ்வாறே எண்ணற்ற இருநிதியை எடுத்து, ஒட்டகங்களின் மேலேற்றித் தக்க காவலுடன் அனுப்பினர். பின் மன்னனிடம் விடைகொண்டு அங்கயற்கண்ணி அம்மை யுடன் இருக்கும் சொக்கேசர்முன் சென்று நின்றார். தாம் அதுவரை ஊதியத்தால் முயன்று ஈட்டிய பொருளைக் கொண்டுவந்து இறைவன் முன் வைத்தார்.

'ஒன்று வேண்டுமிப் பொருளெலாம்
உனக்கும்ஐம் பொறியும்
வென்று வேண்டுநின்
அன்பர்க்கும் ஆக்குக, (வா. உ. ப. 24)

என்று வேண்டினர். அப்போது அந்தணன், ஆண்டவன் அருட்பூதியை அளிக்க, அதுவே ஆண்டவன் அளித்த கட்டளையாகிய நன்னிமித்தம் என எண்ணினவராய்த் தம் பொருளுடன் பெருந்துறைக்குப் புறப்பட்டார்.

பெருந்துறையின் எல்லையில் ஆண்டவன் குருந்த மரத் தடியில் குருவாக வந்து அவரைத் தடுத்தாட் கொண்டான். அவரும் 'தானே வந்தெம்மைத் தலையளித் தாட்கொண் டருளும்' அந்த அருட்குருவின் அடிகளை வணங்கி, அவனு டைய அருள்வலைப் பட்டவரானர். அருள்வலைப்படவும் உள்ளம் குழைந்தது—உதடு அசைந்தது—திருவாசகம் தோன்றிற்று. அவர் தம் பாடலைக் கேட்ட இறைவன்,

'வழுவிலாதபேர் மாணிக்கவாசகன்' என ஞானப்பெயரைச் சூட்டினர். அன்று முதல் அவர் மாணிக்கவாசகராகவே வாழ்ந்து வருகிறார். 'வாதவூர்' என்ற ஓர் ஊருக்கே உரிமையாக இருந்தவரை, ஆண்டவன் உலகுக்கே உரிமையானவராக்கிவிட்டான். இவ்வாறு அருள்செய்த ஆண்டவன் உடன் மறைந்துவிட்டான். 'கண்ணிலான் பெற்றிழந்து விட்ட' நிலையில் அழுது புரண்டார் மணிவாசகர். 'யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினியே?' என வினவினர். ஆண்டவன் விண்ணிலே தோன்றி, இவர் இன்னும் சின்னாள் தமிழ் நாட்டில் இனிய பாட்டிசைத்துப் பாண்டியனையும் அவனைச் சேர்ந்தோரையும் மக்களையும் திருத்த வேண்டியுள்ளமையின் இவரை விட்டுச் சென்ற காரணத்தை விளக்கினன்; இறைவன் திருவாக்கின் படியே பெருந்துறையின் எல்லையில் இருந்துகொண்டு தம் உழைப்பின் பலனாய செல்வத்தைக் கொண்டு அரசனுக்கு கோயிலெடுக்கத் தொடங்கினர்; அவர் நினைத்த எண்ணம் கைகூடிற்று; ஆனல் அதே வேளையில் அவரை அறியாது பின் தொடர்ந்து வந்த துன்மந்திரி, அவன் துணைவர்தம் எண்ணமும் கைகூடக் காலம் வந்தது.

ஆண்டவன் பணியிலே தம்மை முற்றும் அர்ப்பணித்த மணிவாசகர் அரசன் பணியினைச் செய்ய முடியாது என உணர்ந்தார். ஒருவர் இரு தலைவருக்குத் தொண்டராயிருத்தல் இயலாது என்பதை உணர்ந்தார். அதற்கேற்றபடி அங்கே அரேபிய நாட்டிலிருந்து குதிரைகளும் வரவில்லை. எனவே, அங்கே முன்னேற்பாட்டுடன் வந்திருந்த முன்னைய முதல் அமைச்சன் முன்னிலையில், அரச காரியங்கள் ஆற்றும் சிறந்த அதிகாரி ஒருவரிடம் அரசருடைய பொருளையெல்லாம் கொடுத்து, அப்படியே கொண்டுசென்று அரசரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தம் அமைச்சர் பதவியையும் விடுதலைபெற விழைந்து ஓலை எழுதி

1. One servant cannot serve for two masters (Bible)

அதையும் உடன் அனுப்பி வைத்தரர். 'யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம், மேவினேம் அவனடியார் அடியாரோடும்' என்றது அவர் வாய் முன்னுள் தலைமை அமைச்சனும் அவன் துணைவரும் முன்னேற்பாட்டின்படி எல்லாவற்றிற்கும் இசைந்து ஓலையையும் பொன்னையும் அரசனிடம் ஒப்படைப்பதாக ஏற்றுக்கொண்டனர். ஆனுல் வந்த காலத்தை நழுவவிடாது அனைத்தையும் மறைத்து மதுரை நகரம் சென்றனர்.

குதிரை 'வரும் வரும்' என எதிர்நோக்கியிருந்த பாண்டிய மன்னன்முன் சென்ற அவர்கள் மணிவாசகர் அரசன் பொருளைக்கொண்டு கோயில் கட்டுவதாகக் கூறினர். அவர்கள் சொல்லு முன்பு மணிவாசகர் அருட்பணியின் புகழ் மக்கள் மூலமாகப் பாண்டியன் காதிலும் பட்டது. பாண்டியனும் சிறந்த சிவ பக்தன். அவனும் முன்ஞேரும் நாட்டில் எண்ணற்ற கோயில்கள் கட்டியுள்ளனர். எனினும் இவர் கட்டிய கோவில் பற்றியும் இவர் பற்றியும் உண்டான புகழ் அவன்பரம்பரை அறியாத ஒன்று. இன்றும் பெருந்துறை கோயில் கலைக்கு முதலிடம் வகுத்துள்ளதை யாவரும் அறிவர். எனவே, அவர் புகழ் கண்டு அரசனுக்கு வெறுப்பு உண்டாயிற்று. அமைச்சரும் அதற்கேற்றபடி மணிவாசகர் மன்னவன் பொருளைத் தவறுன வழியில்—குதிரை வாங்காது கோயில் பணியில்—செலவிடுவதாகக் கூறினர். அவர் ஓலையும் பொருளும் தங்கள் வழி அனுப்பியதைக் கூறவில்லை. 'தன் பணத்தால் மற்ருெருவர் புகழ் பெறுவதா' என்ற எண்ணமும் பாண்டியன் மனத்தில் புகுந்தது. அந்த நிலையில் குதிரைகளை உடனே வாங்கி வரும்படி பாண்டியன் ஆட்களை அனுப்பினுன். பெருந்துறையில் பெருங் கோயிற் பணியில் ஈடுபட்டிருந்த மணிவாசகர் மன்னவன் ஓலையைக் கண்டார். தம்முடனிருந்த துன்மந்திரியும் மற்றவரும் இடையில் இழைத்த சூதுகளை ஓரளவு உணர்ந்து கொண்டார். என்ருலும், அவர்களைக் காட்டிக்கொடுக்க அவர் உள்ளம் இசையவில்லை. தம்மால் உயர்ந்த அவர்களைக் காட்டிக்கொடுத்து அவர்களை

நிலைகுலையச் செய்ய அவர் உள்ளம் விரும்பவில்லை. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்று அவர் வாய் இசைத்தது. எனவே பழியைத் தம்பேரில் ஏற்றுக்கொண்டார். எண்ணிக்கூடப் பார்க்கவில்லை. ஆண்டவன் 'அடித்தடித்து அக்காரம் தீட்டுவான்' என்ற உணர்வில், குதிரைகள் வரும் என்று செய்தி சொல்லி அனுப்பிவிட்டார்.

அடியவரை அல்லல்படுத்தி ஆட்கொள்வது ஆண்டவன் இயல்பு. 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தாய்' என்றார் அப்பர். 'நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந் தேங்க, எண்ணாருத் துயர் விளைத்தல் இவையென்ன உலகி யற்கை' என்றார் நம்மாழ்வார். 'துயரப்படுகின்றவர் பாக்கியவான்கள்' என்றார் இயேசு. எனவே, இறைவனடிய வர்கள் துன்பத்தினடியில், புடமிட்ட பொன்னாக ஒளிர வேண்டியவர்கள். அந்த நியதிப்படி மணிவாசகரும் எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாரானார். மற்றும் அவர் உள்ளம் 'களிப்பெலாம் மிகக் கலங்கிடுகின்றேன்' என்று இறை வனிடம் கூறித் துன்பத்தையே விரும்பிற்று. அதிலேதான் ஆண்டவன் அருள் நலத்தைக் காணமுடியும் என்பது நல்லவர் முடிவன்றோ! இறைவன் அவர் பொன் உள்ளத்தை மேலும் புடமிட்டு உலகுக்கு உணர்த்த நினைத்தான். எனவே, அவர் கனவில் தோன்றி, 'நீ நாளையே புறப்பட்டுப் பாண்டி யனைக் கண்டு குதிரைகள் வருமென்று கூறி அமைதி பெற் றிருக்க' எனக் கூறினான். அதற்குள் பெருந்துறைக் கோயிலின் திருப்பணியும் முடிவுற்றிருக்கலாம். இல்லையானால் அவர் புறப்பட்டிருக்கமாட்டார். இறைவன் ஆணையின்படியே பாண்டியநாட்டுத் தலைநகர் வந்து மன்னனிடம் குதிரைகள் விரைவில் வரும் எனக் கூறி வீடுசென்றார். அவர் பொருளெல் லாம் தமக்குக் கிடைக்காத வகையில் கோயிலுக்குச் செல விட்டாரே என்று வாட்டமுற்ற அவர்தம் சுற்றத்தார், மேலும் வஞ்சகர்களைக் காட்டிக் கொடுக்காது தாமே பழியை ஏற்றுக்கொண்டு, குதிரை வருவதாக மன்னனிடம் கூறிக்

கொடுமையைத் தம்மேல் ஏற்றித் தம் குடும்பங்களுக்குத் தொல்லேயும் பழியும் உண்டாக்கி விட்டாரே என்று வருந்தி அவரைப் பழித்துரைத்தனர். (வஞ்சகர் செயல் மெள்ள நாட்டில் பரவத் தொடங்கியிருக்கலாம்.) மணிவாசகரோ அவற்றிற் கெல்லாம் அஞ்சாது,

'சுற்றமும் தொடர்பும் நீத்தேம்
 துன்பமும் இன்பு மற்றேம்
வெற்றுடல் மானந் தீர்ந்தேம்
 வெறுக்கைமேல் வெறுக்கை வைத்தேம்
செற்றமும் செருக்கும் சாய்ந்தேம்
 தீவினை இரண்டுந் தீர்ந்தேம்
கறைவார் சடையான் கோலங்
 காட்டியாட் கொண்ட வன்றே'

(வா. உ. பட. 83)

என்று கூறி, 'எல்லாம் அவன் செயலே' என்று, 'இன்றே ரிடையூறு எனக்குண்டோ' என்ற உணர்வில் ஆண்டவனைப் போற்றி இருந்தார். தம் அமைச்சுத் தொழிலுக்கு முறையாக அவர் வராத நிலையைப் பாண்டியன் கவனித்ததாகத் தெரியவில்லை.

குதிரை வரக் காலம் தாழ்க்கவே, துன்மந்திரியின் போதனையால் தூண்டப்பட்ட பாண்டியன், மணிவாசகர் தூய்மையை ஓரளவு உணர்ந்திருந்தபோதிலும், ஒரு நாள் கொடுமைக்கு உட்படுத்தினான். அவரோ, எதற்கும் கவலை யுறாது ஆண்டவனையே நோக்கி நின்றார். 'நன்றிதே தன் அடிமை' என்று தம் தலைவனாகிய ஆண்டவனை முன்னிறுத்தி வேண்டினார். 'என்னை விடுதி கண்டாய்?' எனக் கேட்டார்.

'தாரகை போலும் தலைத்தலை
 மாலைத் தழலா ரப்பூண்
வீரஎன் றன்னை விடுதிகண்
 டாய், விடின் என்னை மிக்கார்

*ஆரடியா னென்னின் உத்தர*
*கோசமங் கைக்கரசின்*
*சீரடியார் அடியான் என்று*
*நின்னைச் சிரிப்பிப் பனே'* **(நீ. வி. 48)**

என்று எல்லாப் பாரத்தையும் ஆண்டவன் மேலேற்றி அமைதியாக இருந்தார். மறுநாள் இறைவன் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் அழகிய—அதுவரையில் யாரும் கண்டிராதபடி—சிறந்த குதிரைகளாகக் கொண்டுவந்து கொடுத்து மறைந்தான். அவற்றைக் கண்ட மன்னன் மணிவாசகரை அழைத்து மன்னிப்புக் கேட்டுச் சிறப்பும் செய்தான். ஆனால், அவற்றையெல்லாம் கண்டு 'களிப்பெலாம் மிகக் கலங்குகின்றேன்' எனக் கலங்கிற்று அவர் உள்ளம். அவர் உள்ளம் மட்டுமா? துன்மந்திரி, அவரைச் சேர்ந்தவர்தம் உள்ளமும் கலங்கிற்று. இரு கலக்கங்களுக்கும் அடிப்படையும் நிலையும் வேறாகும். எப்படிக் குதிரைகள் வந்தன? இனி நம் நிலை என்னாகுமோ என்று அக் கொடியவர் அஞ்சினர். 'இந்த இன்ப நிலைக்குப்பின் ஆண்டவன் அடி எத்தகையதோ' என மணிவாசகர் உள்ளம் சென்றது. எப்படியோ வந்த பெருங் குதிரைகளைக் கண்டு மகிழ்ந்த பாண்டிய மன்னன் அவரைப் பாராட்டினான். ஆனால் அப்பாராட்டு ஒரு நாள் அளவினதே!

அன்று இரவே ஆண்டவன் அருளால் பரிகள் நரிகளாகி, உள்ள குதிரைகளையும் கடித்து ஊரையும் பாழாக்கிக் காட்டுக்குள் ஓடிவிட்டன. மன்னவன் மருண்டான். அவன் உள்ளம் ஒரு வேளை ஆண்டவன் அருள் விளையாடல்களையும் மெய்யன்பர்தம் உண்மை நிலையையும் உணர்த்தியிருக்கும். அதற்குள் துன்மந்திரியின் போதனையான இருள் அதை மறைத்து, மாணிக்கவாசருக்குக் கொடுமை இழைக்கத் தூண்டியிருக்கும். எனவே அப்போதே மாணிக்கவாசகரைப் பிடித்துக் கொடுமை செய்ய ஆணையிட்டான், கோடை வெய்யிலில் வையையாற்று மணலில் மணிமொழியார் துன்புறுத்தப் பட்டார். அவரோ,

'நாதவோ நாத முடிவிறந்த
நாடகஞ்செய்
பாதவோ பாதகனும் என்னைப்
பணிகொண்ட
வேதவோ வேதமுடிவின்
விளைந்ததனிப்
போதவோ போத நெறிகடந்த
பூரணவோ' (ப. ந. படலம், 48)

என்று எண்ணித் துதித்து, எதற்கும் அஞ்சாது அவனடி நினைத்து நின்றார்.

மதுரைமா நகரில் பல நல்லவர்களும் வாழ்ந்திருந்தனர். அவருள் வந்தி என்னும் பிட்டு விற்றுண்ணும் கிழவியும் ஒருத்தி. எளிய வாழ்வில் நின்ற அவள் இறைவனை இடையறாது எண்ணி, அவனடி அடையக் காலம் நோக்கி இருந்தாள். அவள் வேண்டுகோள் நிறைவேறும் காலம் வந்தது; அத்துடன் மணிவாசகர்தம் உண்மைத் தொண்டு உலகம் உணர்ந்து கொள்ளத்தக்க காலமும், கொடியவர் தீச்செயல் வெளியாகும் காலமும் பாண்டியன் உண்மை உணரும் காலமும் ஒன்றின. வாராத காலத்தில் வையையில் வெள்ளம் பெருகிற்று; அணைக்கடங்காத வெள்ளம். 'புனல்யாறு அன்றிது பூம்புனல் யாறு' என்று போற்றப்பட்டு அழகு நடை நடந்து செல்லும் வையையாறு பொங்கிற்று. குழலும் யாழும் அமுதும் குழைத்த மங்கையின் மொழி மதுரையில் வெடிச் சொற்களாக மாறவில்லையா? சீற்றம் கொண்ட வையை வெள்ளத்தை எளிமையில் தடுக்க முடியவில்லை.

வெள்ளம் கண்ட மன்னன் மனம் பதைத்தது; தான் மணிவாசகருக்குத் தவறு இழைத்த கொடுமைக்கே அது தண்டனை என அவனுக்கு உணர்த்திற்று. அதை வெளிக்காட்டிக் கொள்ளவும் இயலவில்லை; மறைக்கவும் முடியவில்லை. அதைப் பரஞ்சோதியார் மெல்லப் பாடுகிறார்.

ஆதியாங் கடவு ளெந்தை
ஆலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை
பண்டையிற் குறைந்த துண்டோ
நீதியாந் தவத்தின் மிக்கார்
நெஞ்சகம் புழுங்க மண்மேற்
தீதுயாம் செய்த துண்டோ?'

என்று முன் கடவுளைத் தள்ளிப் பின் தான் மணிவாசகருக்கு இழைத்த கொடுமையை அரசன் நினைத்ததாக காண்கின்றோம். எனவே, அரசன் அவனுக்கு மனமறியாத—அவர் செய்யாத பிழைக்குத் தண்டனை அளித்தான் என்பது தெளிவு.

வீட்டுக்கு ஓர் ஆள் அடைக்க வரவேண்டுமென ஆணையிட்டான் மன்னவன். எல்லா வீடுகளிலிருந்தும் ஆட்கள் வந்தனர். அவனுடைய பணியாட்கள் பங்குகளை அளந்து விட்டுக்கொண்டிருந்தனர். ஆனல், வந்தியின் பங்குக்கு ஆள் இல்லை. வந்தியோ வயதில் மூத்தவள்—ஏழை—பொருளற்றவள்; ஆளும் கிடைக்கவில்லை; என்ன செய்வதென்று ஏங்கினாள். எல்லாவற்றிற்குமே விடிவு காலம் வந்துவிட்டது.

அடியவரை 'அஞ்சேல்' என்று அருள் செய்யும் ஆண்டவன் மதுரைத் தெருவில் கூலியாளாகப் புறப்பட்டான்; வந்தியின் ஆளாக அமர்ந்தான். கூலிக்குப் பதில் உதிர்ந்த பிட்டே பெற ஒப்பந்தம் செய்துகொண்டான். ஆயினும், அவன் ஒழுங்காக வேலை செய்யவில்லை. மண் கூடையைச் சுமந்து கொண்டு விளையாடலையே செய்து கொண்டிருந்தான்.

'வானத்தில் மண்ணில் பெண்ணில்
மைந்தரில் பொருளில் ஆசை
தானற்றுத் தமையும் நீத்துத்
தத்துவம் உணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே அன்றி
நாடருஞ் சோதி, மண்ணோர்

ஊனக்கண் கொண்டும் காண
உடன்விளை யாடல் செய்வார்' (ம. சு. பட. 38)

இவ்வாறு விளையாடிய இறைவன் பங்கு அடைபெற வில்லை. அவனே அரசன்தன் ஆட்களிடம் வலியச் சென்று தன்னை வந்தியாளாகக் குறித்துக் கொள்ளச் சொன்னான். எனவே, அவர்கள் வந்தியைக் கேட்க முடியவில்லை. அவனையே-வேலை செய்யாத தன்மையைக் கண்டுபிடித்தனர். அவனோ ஒருவருக்கும் அஞ்சவில்லை. அவனுடைய அமைச் சரும் பிறரும் அவன் உருவம்கண்டு ஏனோ அருகில் செல்லவும் தண்டிக்கவும் அஞ்சினர். எனவே, அரசனிடம் சென்று அனைத்தையும் கூறி முறையிட்டனர். அரசன் அணையைக் காணவந்த நிலையிலே அந்தப் பங்குள்ள இடத்துக்கு வந்தான். இறைவன் தலையில் மண்ணைக் கூடையில் வைத்து நின்றுகொண்டிருந்தான். அவனை அணுகித் தன் பிரம்பினால் மன்னவன் அடித்தான். அவனுக்கு அடிபட்டது என்று யார் சொல்ல முடியும்? அவன் முடியிலிருந்த மண் ஆற்றில் விழுந் தது; வெள்ளம் வற்றிவிட்டது; அவனையும் காணவில்லை. ஆனால், அனைவரும் மகிழ்வதற்குப் பதிலாக அஞ்சினர். ஏன்? பாண்டியன் அடித்த அடி படாத இடம் இல்லையே!

'பாண்டியன் முதுகில் பட்டது செழியன்
பன்னியர் உடம்பினிற் பட்ட (து)
ஆண்டகை அமைச்சர் மேனியில் பட்ட
தரசிளங் குமரர் மேற்பட்ட(து)
ஈண்டிய கழற்கால் வீரர் மேற்பட்ட
திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேல் பட்ட தெவ்வுயிர்க்கும்
போதன்மேல் பட்ட தத்தழும்பு'

ஆம்! அப் பரசிவமாகிய ஒப்பற்ற இறைவனை நோக்கி அடித்த அடி, உலகில் அனைவர் மேலும் பட்டது; பாண்டியன் மேலும் அவன் மனைவியர்மேலும் மட்டுமா? அவன் ஓரே

குமரன் மேல் பலமாகப் பட்டுவிட்டது. அவன் மாண்டான். பாண்டியன் ஆட்சி எல்லையும் சுருங்கிற்று. அவன் அமைச்சர் மேல் பட்டுவிட்டது. அந்த அடி தாளாது ஆண்டவனையே பழித்தும் இழித்தும் கூறிய அந்தத் துன்மந்திரியின் மனைவி துடிதுடித்து மாண்டாள். அவன் துணையாக இருந்த மற்றவனுடைய தாயோ நெடுந்தொலைவில் இருந்தபோதிலும் அந்த அடிப்பட்ட அதிர்ச்சியிலே, இந்த அடிக்கு, ஆண்டவன் அடிபெறுவதற்குக் காரணமானவருள் தன் மகனும் ஒருவன் என்பதற்காக அவனைக் காண விரும்பாது, தன் உடலையும் அவனுக்குக் காட்ட விரும்பாது, அப்படியே நைந்து மறைந்தார். இப்படிக் கொடுமைகளெல்லாம் கேட்ட பிறகு அவர் தம் கண்கள் திறக்கப்பெற்றன. துன்மந்திரியும் மற்றவனும் பாண்டிமன்னனிடம் தங்கள் செயல்களையெல்லாம் கூறிப் பாண்டியன் பொருளையும் தந்துவிட்டனர். பாண்டியன் கண் திறக்கப்பெற்றான்.

மாணிக்கவாசகர் ஒன்றைப்பற்றியும் கவலைகொள்ளாதவராய்ச் சொக்கேசர் கோயில் சென்று அவரை வழிபட்டுக் கொண்டிருந்தார். பாண்டியன் அங்கே தேடிச் சென்று அவரடி வீழ்ந்து பணிந்து எழுந்தான்.

'தொல்லை நீருலக மாண்டு
சுடுதுயர் நரகத் தாழ
வல்ல வென்னறிவுக் கேற்ற
வண்ணமே செய்தேன்; நீரென்
எல்லையில் தவப்பே ருய்வந்
திகபர ஏது வாகி
அல்லல் வெம்பிறவி நோய்க்கு
அருமருந் தானீ ரையா' (ம. சு. பட. 68)

என்று வேண்டி தொடர்ந்து அவரை வந்து நாட்டை ஆளும் துறையில் உதவ வேண்டினான். மாணிக்கவாசகர் புன்னகை புரிந்தார். மேலும், கோபமோ கவலையோ அவர் முகத்தில் இல்லை. அவர் பாண்டியனை நோக்கி, யாவும் இறைவன்

செயலே என்பதை உணர்த்தினர். மேலும் தாம் முன்னமே அந்த அரச பதவிகளையெல்லாம் உதறிய தன்மையினை விளக்கி, மேலும் ஆண்டவன் பணி செய்ய ஊர்தொறும் புறப்பட்ட நெறியையும் குறித்தார். அரசனும் அறிவு வரப் பெற்ற துன்மந்திரிகளும் பிறரும் எவ்வளவு வேண்டியும் அவர்தம் குறிவழியே ஆண்டவனைக் கோயில்தொறும் கும்பிடப் புறப்பட்டுவிட்டார். ஆம்! தமிழ்நாடும் சைவ உலகமும் என்றும் நிலைப்பெற்று வாழ வழியும் புலப்பட்டது. தமிழ் நாட்டுத் தலங்கள்தோறும் மணிவாசகர் சென்று இறைவனைக் கண்டு பாடினர். வழியிடை அவர் பெற்ற அனுபவங்கள் பல. பிற சமயத்தவரையெல்லாம் கண்டு வாதில் வென்றார். தில்லையின் எல்லையில் சென்றதும் ஆண்டவன் கோயிலை எண்ணி எண்ணி உருகினர். அந்தணர் வழிகாட்ட அவருடன் சென்று அம்பலத்தரசைக் கண்ணாரக் கண்டு களித்தார். அங்கே ஆண்டவன் அருளால் புத்தரை வாதில் வென்றார் போலும். தமிழ் நாட்டு எல்லாத் தலங்களையும் அவர் வழிபட்டார். எல்லாவிடத்திற்கும் இடையறாது சென்று இறைவனை வழிபட்டுப் பண் ஒன்றப் பாட்டிசைத்தார். அவற்றையெல்லாம் யாரே எழுதி வைப்பார்?

இறைவனே அவர் பாடல்களையெல்லாம் சொல்ல எழுதித் தன் வாயிற்படியிலே வைத்து மறைந்தான். அவர் தம் வாசகத்துக்குத் தானே பொருள் (வாக்கியம்) என்பதைச் சுட்டிக் காட்டினன். அவர் பெருமையை வையம் உள்ளளவும் வாழ வைத்தான். அவரை உலகில் உயர்ந்தவராக்கினன். புகழ் வேண்டாது மூலையிலிருந்தவரை உலகம் உள்ளளவும் புகழுமாறு செய்து, அவரது புகழுடம்பை, உலகம் உள்ளளவும் வாழவிட்டுப் பூதவுடம்பை நீக்கினன். மணிவாசகர் தில்லையில் இறைவனோடு இரண்டறக் கலந்தார். இன்றும் மக்கள் வாழ வழிகாட்டிகளாக அவர் தம் பாடல்கள் விளங்குகின்றனவன்றோ!

## பாத்திரங்கள்

| | |
|---|---|
| மணிவாசகர் | —வாதவூரர்—தலைமை அமைச்சர் |
| ஞானாசிரியர் | —சிவபெருமான் |
| அரிமருத்தன பாண்டியன் | ——மன்னன் |
| பாண்டிமாதேவி | —அரசி |
| பெருஞ்சாத்தன் பழநிக்கொற்றன் | —பாண்டியன் அமைச்சர்கள் |
| வஞ்சுளம் | —பெருஞ்சாத்தன் மனைவி |
| ஆளுடையான் மணிகண்டன் | —பெருந்துறை மக்கள் |
| கூலயாள் | —இறைவன் |
| கணக்கர் | — |
| அமைச்சர் | — |

இறைவன் அடியவர், காவலர், வாயிற்காவலன், கலைஞர், பணியாள், ஓலை வாசிப்போன், பொதுமக்கள் மண் வேலையாட்கள் முதலியோர்.

# வழுவிலா மணிவாசகர்

அங்கம்—1 காட்சி—1

**மாணிக்கவாசகர் :—(தனிமொழி)** அதோ தூரத்தே தெரிகிறதே, அதுதான் திருப்பெருந்துறை போலும்! ஆம்! அதோ கலங்கரை விளக்கமும் தெரிகின்றதலல்வா! நெடும்பயணம் தீர்ந்துவிட்டது. இனிமேல் நம் கடமையைச் செய்ய வேண்டியது தான். ஆ! என்ன? என் உள்ளத்தில் ஏதோ தடுமாற்றம் நீங்கிய தெளிவு உண்டாகின்றதே. உள்ளொளி பெருகுகின்றதே. உடற்பாரம் குறைகின்ற மாதிரியல்லவா இருக்கிறது? என்ன இது! ஏதோ அற்புத சக்தியால்—அதிசய சக்தியால் இழுத்துக் கொள்ளப்படுகின்றேனே. பாண்டி நாட்டு இறைவ! பாண்டி வெள்ளமே! ஒன்றும் புரியவில்லையே. என் கால்கள் எங்கே என்னை ஈர்த்துச் செல்லுகின்றன? அதோ பெருந்துறைக்குச் செல்லும் நெடுஞ்சாலை போகின்றதே. நான் எங்கே செல்கிறேன்!

என்ன அது தூரத்தே பேரொளி தோன்றுகின்றதே! நான் என்பதே எனக்குத் தெரியவில்லையே? மத்தோன்மத்தனாக வன்றோ நான் ஓடுகிறேன் (ஓடுகின்றார்). அதோ! அதோ! அங்கே! என்ன? அரஹர முழக்கமல்லவா கேட்கின்றது!

அடியவர் பலர் கூடியிருக்கிறார்களே! அவர்கள் இடையில் பேரொளிப் பிழம்பாய்க் காட்சிதரும் அந்த ஞான குரு யார்? எங்கோ பார்த்தவராகத் தெரிகிறாரே! எங்கே கண்டேன்! என்ன! ஒன்றும் புரியவில்லையே. (விரைந்து ஓடுகிறார்). (தூரத்தே இறைவன் ஞானாசிரியராகப் பல அடியவர்கள் கூடிப் புடைசூழ வீற்றிருக்கின்றார்). அதோ! அதோ! என் ஞானாசிரியர். (ஓடிக் காலில் வீழ்கின்றார்).

ஞானாசிரியர் :—அப்பனே! எழுந்திரு! இதோ உன் இடர்கள் நீங்கின! பாசம் அகன்றது—பந்தம் கழன்றது. இனி நீ உரிமைப் பறவையாகப் பறப்பாய். உன் இச்சைப்படி அறப்பணி செய்வாய். ஊர்தோறும் செல்வாய். உன்னால் உலகம் நல்ல மணிமொழியைப் பெறப் போகின்றது.

மாணி :—அருட்கடலே! தங்கள் முகங்கண்ட உடனே நான் என்னை இழந்தேனே. நான் வந்த வேலையினையும் மறந்தேன். உங்கள் பேரொளி என்னைப் பற்றி இங்கே கொண்டுவந்து சேர்த்தது. தாங்கள் யாரோ? அறியக் கூடவில்லையே!

ஞானா :—அன்பனே! இன்னும் அறியவில்லையா! உனக்கு உபதேசம் செய்ய அல்லவா நாம் இங்கே வந்திருக்கின்றோம். அருகே வா. (அருகே செல்லத் தலையில் கை வைத்து அவருக்குத் தீட்சை செய்கிறார்).

மாணி :—(தெளிவு பெற்றவராய்) அறிந்தேன்! அறிந்தேன்! உணர்ந்தேன்! தேவாதி தேவா! பொய்யாய நெறியில் புகாமே என்னைப் புகுந்தாண்டு கொண்ட புண்ணியா! உன் அருள் திறத்தை என்னென்று பாடுவேன்? ஈன்ற தாயினும் பெரிதான நிலையில் என்னைத் தானே வந்து தலையளித்து ஆட்கொண்ட தயை நிறைந்தவனே! ஆகா! உன் அருள் நோக்கால் என் ஊனாரும் உடல் வாழ்க்கை

வெறுக்கத் தக்கதாகிவிட்டதே! என் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கிய உத்தம! இனி உன்னை விடேன்! விடேன்! விடேன்! (பாடுகிறார்)

ஞானு : அன்பனே! உன் ஒருமைப்பாடு உணர்ந்தோம். இனி நீ எதற்கும் கவலைப்படத் தேவையில்லை; அஞ்ச வேண்டுவதும் இல்லை. உன் வாயிற் புறப்பட்டு உள்ளம் உருக்கும் சொற்கள்தாம் எத்துணை இன்பம் பயக்கின்றன நம் செவிக்கு! இத்தனை இனிமையாக நம் தமிழில் பாடியவர் இதுவரையில் யாரும் இல்லையல்லவா!

எல்லாரும் : ஆம்! ஆம்! இனிமை இனிமை! தமிழ்! தமிழ்! தமிழ்!

ஞானு : பாத்தாயா, எல்லாரும் நான் சொல்வதை ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஆம்! உன் பாடல் இனிக்கிறது. உன் பாடலைக் கேட்கப் பேறுபெற்ற அனைவரும்—ஏன்? அனைத்துப் பொருளும்—விலங்குகளும் பறவைகளும் பிறவும் முத்தி அடைதல் உறுதி, அன்பனே!

மாணி : என்னை ஆட்கொண்ட வள்ளலே! அதிகமாகப் புகழ்ந்து என்னைக் கர்வம்கொள்ளச் செய்துவிடாதீர்கள். தங்கள் அருள்நோக்கின் பயனே நான் பாடும் பாடல்கள். உங்கள் உள்ளக் கருணையே என் உணர்வுக் களஞ்சியம். எனக்கென இனி என்ன இருக்கிறது? நன்றும் தீதும் உன்பாலன அல்லவோ! ஆண்டவா! என்னையும் உன் அடியவர் தொகை நடுவுள் ஒருவனுக்கிக்கொண்டு அருள் புரிய வேண்டுகின்றேன். (வீழ்ந்து வணங்குகிறார்.)

ஞானு : நல்ல அன்ப! உன் அன்பை உணர்ந்தோம்! எனினும் நீ உலகில் உன் இனிய பாடலைப் பாடி இன்னும் சிலநாள் இருந்து, பக்திநெறியை வளர்க்கவேண்டும். இத்தகைய இனிய சொற்களைப் பாவாக்கி வாரிவழங்கும் உன் பெயர் இனி 'மாணிக்கவாசகன்' எனவே வழங்கப் பெறும்.

அனை : வாழ்க மாணிக்கவாசகர்! வாழ்க மாணிக்கவாசகர்! வளர்க அவர் புகழ்!

மாணி : ஆண்டவனே! இந்தப் பேறு சிறந்ததே! எனினும் என்னையும் உங்கள் அடியவருள் ஒருவனுக்கி, உங்கள் அடி நிழலுக்கு ஆளாக்கிக்கொள்ள வேண்டும். ஆம்! என் விழைவு இதுவே. என்னை விட்டுவிடாதீர்கள்...

'இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னி னல்லால்
விருந்தின[1] னேனை விடுதிகண்
டாய்! மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே.'

ஞானு : மாணிக்கவாசக! உனக்கு உலகில் இன்னும் சில பணிகள் உள்ளன. உலகம் உய்ய நீ பல ஞானனந்தப் பாடல்களை உன் திக்திக்கும் மணிவார்த்தைகளால் பாட வேண்டும். உலகில் உன் பாடல்களால் பக்தி வெள்ளம் பரவவேண்டும். தன்னை ஒப்பாரும் மிக்காரும் யாரு மில்லை என்று தருக்கி, உலகுக்குக் கொடுமைகள் செய்யும் பாண்டியனும், அவன் அமைச்சரும் பிறரும் உன் செயலால் செருக்கடங்கவேண்டும். அதன் வழி உலகம் உய்யவேண்டும். மாற்றுச் சமயங்கள் வேற்றுச் செயல் களால் நாட்டில் இழைக்கும் கொடுமைகள் உலகில் நீங்கவேண்டும். ஆகவே, அத்தனையும் உன் செயலாலும் சொல்லாலும் நிகழ இருக்க, நான் உன்னை உடன் அழைத்துச் செல்லல் பொருந்துவதாகுமா?

மாணி : வலிய ஆட்கொண்ட வள்ளால்! என்னைக் கைவிட்டு விடுவையோ! வேண்டாம்!

1. புதிதாக அங்கே வந்தவன்,

ஆம்! ஆண்டவனே! உன்னைக் கண்ட நெறியிலே மற்றோர் பற்றிங் கறியேன் நாயேன். எனது இடரைக் களைந்தாய்; இன்பம் தந்தாய்! இனி என்னை விட்டுவிட்டால் என்ன செய்வேன்? என்னையும் உன்னுடன் கொண்டு செல்வாய்! (ஓடித் தழுவ விரைகின்றார்... உடனே குருந்தமரம்—குரு—சீடர் அனைவரும் மறைகின்றனர்—ஓலமிட்டு அழைக்கின்றார்.) ஆ! ஞானாசிரியனாக வந்தவன் சோமசுந்தரக் கடவுளேயோ! அந்தோ அறியாதே கெட்டேன்,

'என்னால் அறியாப் பதந்தந்தாய்
யான தறியாதே கெட்டேன்
உன்னா லொன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய அடியா ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே'

**வான்ஒலி :** அன்பே! மாணிக்க வாசக! வருந்தாதே. உன்னால் நாடு உய்ய வழி இருக்கிறது. அதனால்தான் உன்னை விட்டு வந்தேன்! தனியாக விட்டதாக எண்ணிக் கவலை கொள்ள வேண்டாம். நான் என்றும் தோன்றாத் துணையாய் உன்னுடனேயே இருப்பேன். உன் தொண்டினை மேற்கொள்! உனக்கு இடர் ஒன்றும் வாராது! வந்தால் நீ அழைக்காமலேயே நானே வந்து காப்பேன்! இது உறுதி!

**மணி :** அண்ணலே! அதுவோ உன் பணி! அப்படியே செய்வேன். இதோ இப்போதே அனைத்தையும் துறந்தேன். அரசன் பொருளையும் அனுப்பிவிட்டு, எனது பொருளாக இருக்கும் இதுவரை சேர்த்து வைத்த அந்தச் சேமிப்பால் உனக்குக் கோயிலமைப்பேன்!

[பெருஞ்சாத்தன், பழனிக் கொற்றன், வஞ்சுளம் ஆகியோர்.]

**பெருஞ்சாத்தன் :** என்ன கொற்றரே! பாவம் ஏன் இப்படி ஏக்கம் பிடித்தவர்போல வருகின்றீர்? வாட்டம் உம்மிடம் குடிகொண்டு விட்டதோ?

**பழநிக் கொற்றன் :** என்ன ஐயா அளக்கிறீர்! என்ன? குடி முழுகிவிட்டதா என்ன? எனக்கு உள்ள வரும்படி வந்து கொண்டுதான் இருக்கிறது. எனக்கெது பற்றியும் கவலை யில்லை. நான் மட்டுமா சம்பாதிக்கிறேன்? உன்னைப் போல் நிலைகெட்டா கிடக்கிறேன்?

**பெருஞ் :** அப்படி என்றால்......

**பழநி :** என் மனைவி எத்தனையோ வகைகளில் சம்பாதிக்கிறாள். வயது சென்ற என் தாயர்கூட அல்லவா ஊரில் தனியாக இருந்து கொண்டு, மற்றவர்களுக்கு உதவி செய்வதாக என் பெயரைச் சொல்லிக்கொண்டே ஆயிரமாயிரமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார். நீயோ பாவம்! முன் இருந்த பட்டம் பதவியெல்லாம் பறிபோன ஆத்திரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறாய்.

**பெருஞ் :** ஆமாம்! ஆமாம்! உனக்கென்ன குறை!

**பழநி :** ஏன்? உனக்கு மட்டும் என்னவாம்! உன் வைப்பாட்டி ஒருத்தி போதுமடா உன் வாழ்க்கைக்கு.

**பெருஞ் :** ஓய்! அப்படிச் சொல்லாதேயும்.—என் மனைவி அவள். அவள் கேட்டிருந்தால் நீ இந்நேரம் என்னாகி யிருப்பாய் தெரியுமா?

பழநி : தெரியும்! தெரியும்!—உங்கள் உறவு எனக்குத் தெரியாதா? ஏதோ மாமா மகள், அத்தை மகள் போன்று தான் உங்கள் உறவு இல்லையா! அழகாக அந்தப் பரத்தையர் குலத்தில் வந்தவளைப் பாராட்டி மனைவி எனச் சொல்லுகிறாயே—வெட்கமில்லை உனக்கு. அவள் உன் மனைவியா?

பெருஞ் : இல்லையா பின்னே? சரி, அது கிடக்கட்டும்; இப்போது நாம் இருவரும் சேர்ந்து ஒரு முக்கியமான காரியம் செய்யவேண்டி யிருக்கிறதே.

பழநி : என்ன? என்ன அது?

பெருஞ் : ஒன்றுமில்லை! அவசரப்பட வேண்டாம். நீ என்னைப் பற்றி என்ன சொன்னாய்? நான் நிலைகெட்டவன் என்று தானே! ஏன் கெட்டேன் என்று உனக்குத் தெரியுமா?

பழநி : ஏன்? இதுகூடவா தெரியாது. நாடறிந்த உண்மையல்லவா அது! அந்தப் பாவி எங்களூரான் வந்த பிறகு நீ நிலைகுலையாது எப்படி இருக்க முடியும்? அவன் அறிவும் திறமும் அத்தகையன.

பெருஞ் : போதும் நிறுத்து! என்ன ஒரே அடியாகப் புகழத் தொடங்கிவிட்டாய்.

பழநி : ஏன் அவனைப் புகழக் கூடாதா? பாவம், அவன்தானே என்னை ஊரிலிருந்து வலிய வரவழைத்து இந்த வேலையை வாங்கித் தந்தான். அவன் இல்லையானால், நான் பாண்டி நாட்டு அமைச்சனாக முடியுமா?

பெருஞ் : போடா முட்டாள்! அதையெல்லாம் இப்போது நினைத்துக் கொண்டிருக்கலாமா? அந்த நன்றி நினைப்பெல்லாம் யாருக்கடா வேண்டும்? நாய்களுக்கு அவை தேவை. மனிதராகிய நமக்கு ஏனடா?

பழநி : அப்படிச் சொல்லாதே! எங்கேயோ மூலையில் கிடந்து ஊர் ஊராய்ச் சுற்றிவந்த என்னை, வலிய வரச்செய்து

இந்த வேலையை அவன் வாங்கித் தந்தான். மரியாதையைக்கூட உன்னோடு சேர்ந்ததால் விட்டுவிட்டேன் என்கிறேனே.

**பெருஞ் :** அதெல்லாம் கிடக்கட்டும். அவன் வரவால் நான் எவ்வளவு தாழ்ந்து விட்டேன் தெரியுமா? ஒன்றும் அறியாதவனாயினும் நான் 'அடித்தது ஆலங்காடாக' இருந்த இடத்திலே, அவன் புகுந்து ஏதேதோ செய்து மன்னவன் மனத்தையும் மாற்றியல்லவா விட்டான்?

**பழநி :** ஆம்! ஓரளவு உணர்வேன். என்றாலும் அவனுக்கு எதிராகப் புறப்படத் தயங்குகிறேன்.

**பெருஞ் :** தயக்கம் ஏன்? உடனே நாம் யோசித்து ஆவன செய்ய வேண்டாமா? அவன் இன்னும் ஏறினால் நம் வேலையையே தொலைத்து விடுவான். உடனே ஏதாவது செய்துதான் ஆகவேண்டும். அதோ என் வஞ்சுளமே வருகிறாள். இந்த மாதிரிச் சூழ்ச்சிகளிலெல்லாம் அவள் மிக்க வல்லவள்.

**பழநி :** இருக்காதா? குலத்தளவே யாகும் குணம்!

**பெருஞ் :** டே! அதெல்லாம் அவள் எதிரில் சொல்லாதே.

(வஞ்சுளம் வருகிறாள்.)

**வஞ்சுளம் :** என்ன அத்தான்! இருவரும் அப்படிக் கோட்டை பிடிக்கிறமாதிரிப் பேசி கொண்டிருக்கிறீர்கள்.

**பெருஞ் :** ஆமாம்! வஞ்சுளம். கோட்டையை—மந்திரியின் கோட்டையைப் பிடிக்கத்தான் திட்டம் போட்டிருக்கிறோம். வா! உன் உதவியும் தேவையாக உள்ளது.

**வஞ்சுளம் :** என் உதவியா! நான் எப்போதும் தயார். என்ன செய்யவேண்டும்? உடனே சொல்லுங்கள்.

**பழநி :** அம்மா, கொஞ்சம் பொறுங்கள்.

**பெருஞ் :** பார்த்தாயா, இவன் அவனுக்காகப் பரிந்து பேசுகிறான்.

**வஞ்சு :** எவனுக்கு? என்ன சொல்கிறீர்கள்?

**பெருஞ் :** தெரியவில்லையா வஞ்சுளம்? எல்லாம் அந்தத் தலைமை மந்திரி வாதவூரான் இருக்கிறானே! அவன் தான்.

**வஞ்சு :** ஆமாம்! அந்தப் பாவி தொலைந்தால்தான் நமக்கு வாழ்வு.

**பெருஞ் :** உண்மை! அவனில்லாவிட்டால் நாம் இந்நேரம் எப்படி இந்த மதுரை நகரில் பவனி வந்துகொண்டிருப் போம். பாவிப் பயல்! எங்கிருந்தோ வந்து நம்மையெல் லாம் கெடுத்துவிட்டானே! அவனை ஒழித்துக் கட்டுவதே நம் முதல் வேலை. அதற்காகவே நானும் பழநிக் கொற் றனும் கலந்து பேசிக்கொண்டிருக்கிறோம்.

**வஞ்சு :** நான் ஒருத்தி போய் அவனைச் சரிசெய்து என் வழிக்குக் கொண்டு வந்து விடுவேனே. நீங்கள் இதற் கெல்லாம் ஏன் இத்தனை பெரிய யோசனைகள் செய்து கொண்டிருக்கிறீர்கள்?

**பழநி :** அதுதான் முடியாது. எங்களையெல்லாம் ஏமாற்றி விடுவதுபோல அவனிடம் முடியாதாக்கும். உங்கள் கைவரிசைகளெல்லாம் அவனிடம் செல்லாது. பாவம் நம் அண்ணன்தான் உங்களிடம் மாட்டிக்கொண்டு விழிக்கிறார்.

**வஞ்சு :** என்ன சொன்னாய்? என்னால் முடியாதா? பார் என் திறத்தை.

**பெருஅ :** வஞ்சுளம்! அதெல்லாம் வேண்டாம். அவன் எல்லாவற்றையும் உண்மையிலேயே துறந்தவன்தான். ஆகவே அவனை, நீ மட்டுமல்ல—உன் தங்கை அந்த மேனகை வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. அவன் வெற்றிக்கு அதுதானே முக்கியமான காரணம். இல்லா விட்டால் நீங்களெல்லாம் இருக்கும்போது, அவனை வெல்வது அரிதல்லவே! நான் சொல்வதைக் கேள்.

அவன் தன்னலமற்ற வாழ்வைப் பற்றியெல்லாம் நாங்கள் உண்மையிலேயே உணர்ந்திருக்கிறோம். என்றாலும் ஊரெல்லாரும் மன்னனும் இப்படி அவனைப் புகழலாமா? அது போனால் போகட்டும். அவனால்—எனது வாழ்வு எவ்வளவு மங்கிவிட்டது. அதற்காக அவனைப் பழிவாங்காது விடமாட்டேன். ஆமாம்; இப்போது அவன் பாண்டியனுடைய பெரும் செல்வத்தை எடுத்துக் கொண்டு குதிரை வாங்கச் சென்றிருக்கிறான். நான் அவனுக்கு முன்சென்று, எப்படியும் அவனுக்குக் குதிரை கிடைக்காமல் செய்து, அந்தப் பணத்தையும் ஏமாற்றிப் பறித்துக்கொண்டு, அவன்மேல் பழிசுமத்த முடிவு செய்துவிட்டேன். அதற்கு நம் பழநியின் துணை கொஞ்சம் தேவை. அதற்காகவே அவனை வேண்டுகிறேன். அவனோ, ஏதோ உள்ளூர்க்காரன், தன்னை உயர்த்தினவன் என்று மயங்குகிறான்.

**வஞ்சு :** (பழநியை நோக்கி) அப்படியா அண்ணா! அவர் சொல்வது உண்மைதானா? பிறகு நாமெல்லாம் வளர்வதெப்படி? அதுவும் இந்தக் காலத்தில் இதையெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தால் நடக்குமா? தைரியமாக இறங்குங்கள்.

**பழநி :** (யோசிக்கிறான்)—மனம் இடம் கொடுக்கவில்லையே.

**வஞ்சு :** மனமாவது...இடமாவது—நீங்கள் என்ன வாழத் தெரியாதவராக இருக்கிறீர்களே! உடனே இவருடன் சேர்ந்து அவனைத் தொலைக்க வழி பாருங்கள்—பிறகு நீங்கள் இருவர் வைத்ததுதானே இந்தப் பாண்டி நாட்டில் சட்டம்.

**பழநி :** ஆமாம்—என்றாலும்...

**வஞ்சு :** என்ன—என்றாலும்—நீங்களும் ஆண்பிள்ளைதானா? அவர் எல்லா வேலைகளையும் கவனித்துக்கொள்வார். நான் ஆணாக இருந்தால் உங்கள் யார் உதவியும் எதிர் பார்க்கமாட்டேன். இப்போதோ என் வலையிலே அவன்

—அந்தச் சாமியார்—சிக்கமாட்டான் என்கிறீர்கள். ஆகவே நீங்கள் இருவரும் ஒன்ருகச் சேர்ந்து அவனை ஒழித்துக் கட்டவேண்டும். அவனையும் அவன் ஊரான் என்பதையும், அவன் உனக்கு உதவினுன் என்பதையும் மறந்துவிடு. அப்படியெல்லாம் மறந்து நீர் இவருக்கு உதவினுல் ஆமாம்—என் தங்கை உங்களுக்குத்தான்.

பழநி : ஆ! அப்படியா?

பெருஞ் : என்ன யோசிக்கிருய்! கவலைப்படாதே! அது என் பொறுப்பு. நீ மட்டும் என்னுடன் வா! அவன் உன்னை மிகவும் நம்பியிருக்கிருன். உன்னுல் எனக்கு மட்டுமா— இந்தப் பாண்டிய நாட்டுக்கே பெரிய நன்மை உண்டாகப் போகிறது. பின்னடையாதே.

பழநி : இல்லை! இதோ தயார்!

பெருஞ் : நல்லது!—பழநிக் கொற்றவா!

வஞ்சு : அதுதான் சரி! உடன் ஏற்பாடு செய்யுங்கள்!

இருவரும் : ஆமாம்! ஆமாம்!

(மாணிக்கவாசகர் காவலருடன் உரையாடிக் கொண்டிருக்கிறார்).

**மாணிக்கவாசகர் :** காவலர்களே! கடற்கரையில் யவனர்கள் நல்ல குதிரைகளுடன் வந்திருக்கிறார்களல்லவா? நாம் உடனே சென்று கண்டு வரலாமே.

**காவலர் :** அண்ணலே! பல வெளிநாட்டுக் கலங்கள்—அதிலும் யவன நாட்டுக் கலங்கள் பல உள்ளன. அவற்றுள் சில குதிரைகளும் ஏற்றி வந்தனவாம்.

**மாணி :** ஆம். அப்படி வரும் என்றுதான் அரசர்பிரான் சொன்னார். அதற்காகத்தானே நாம் வந்திருக்கிறோம். உடனே சென்று கண்டு நல்லனவற்றையெல்லாம் வாங்கிக்கொண்டு நாடு திரும்புவோமா? ஆம்! விரைவில் இப் பணியை—என் கடமையை முடித்துவிட்டு, அரசனிடம் குதிரைகளை ஒப்படைத்துவிட்டு, நான் விடுதலை பெறவேண்டும்—பெற்று ஆண்டவன் கட்டளைப்படி பணி செய்யவேண்டும். என்ன? ஏன் தயங்குகிறீர்கள்?

**காவலர் :** அண்ணலே! நல்ல குதிரைகளைக் கொண்டுவந்தன கலங்கள்—என்றாலும், அவற்றுள்ளே—பலகுதிரைகள் வழியிடை உண்டான சூறைக்காற்றினைத் தாங்க மாட்டாது கடல் கொந்தளிப்பில் அகப்பட்டு மாய்ந்து விட்டனவாம். எஞ்சி உள்ள சில குதிரைகளும் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கின்றனவாம். யவன நாட்டு மக்களே இந்தத் தகவலைச் சொன்னார்கள்.

**மாணி :** என்ன? அப்படியா? ஐயோ! நாட்டிலே நல்ல புரவிகள் இல்லை. வந்த குதிரைகளும் இவ்வாறு நிலை கெட்டு விட்டனவே! அரசருக்கு என்ன பதில் சொல்லுவது? நாட்டில் வேற்று நாட்டுப் படையெடுப்போ வேறு

கொடுமைகளோ நேர்ப்தால் என்ன செய்வது? அரச னுக்கு இதை எப்படிச் சொல்லுவது? ஆமாம்! விரைவில் வேறு குதிரைகளேற்றிய கலங்கள் வருகின்றனவா எனக் கேட்டீர்களா?

**காவலன் :** ஆம்; அதுவும் கேட்டோம். மிக அண்மையில் அத்தகைய கலன்களை எதிர்பார்ப்பதில் பயனில்லை என்றூர்கள்.

**மாணி :** ஆண்டவனே! என்ன இது? இனி என் செய்வது? இந்தச் செய்தியை எப்படி என் பாண்டிய மன்னனுக்கு எடுத்துச் சொல்லுவது? அத்துடன் நானும் உடன் அவன் பணியிலிருந்து விடுதலை பெற்றாக வேண்டும். ஆம்; எந்தப் பற்று வேண்டாம் என்று என் குருநாதர் கட்டளையிட்டாரோ அந்தப் பற்று இன்னும் விடாது போலிருக்கிறதே. காவலரே என்ன செய்யலாம்?

**காவலர் :** உடன் திரும்பிச் சென்று மன்னருக்கு உள்ள நிலை யைச் சொல்லிக் குதிரை வாங்கக் கொண்டுவந்த செல்வத்தையும் அவர் பண்டாரத்தே சேர்த்து விட லாம். நாம் ஏன் இதைத் தாங்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும்?

**மாணி :** நல்லது! அப்படியே செய்வோம்! நானும் அரசனி டமிருந்து விடுதலை பெற்று ஆண்டவன் பணி செய்யப் புறப்படலாம்.

**வாயிற்காவலன் :** அமைச்சர் பிரானே! வெளியில் பெருஞ் சாத்தரும் பழநிக் கொற்றரும் வந்துள்ளார்கள். வரச் சொல்லலாமா?

**மாணி :** ஆம்! (இருவரும் வர) வருக! நல்ல வேளையில் வந்து சேர்ந்தீர்கள். உட்காருங்கள்.

**இருவரும் :** வணக்கம்.

**பெருஞ் :** என்ன தலைவரே! ஏன் சோர்ந்து காணப்படுகிறீர்?

**மாணி :** ஆம்! என்ன செய்வது? வந்த வேலை முட்டின்றி முடியாது போன்றுள்ளதே? குதிரைகள் இல்லையாமே! வரவும் காலந் தாழ்க்குமாமே!

**பெருஞ் :** அப்படியா? இல்லை! இதில் ஏதோ சூது இருக்கும் என நினைக்கிறேன். நாம் தனியாக கலந்து பேசுவோம்.

**மாணி :** ஆம்! அது நல்லதுதான். காவலரே, சற்று வெளியேயிருங்கள். (காவலர் செல்லுகின்றனர்)

**பெருஞ் :** ஐயா! நல்ல குதிரைகளை ஏற்றிக் கொண்டு கலன்கள் வந்துள்ளன என்று கடற்கரையில் கூறினார்களே.

**மாணி :** உண்மைதான். ஆனால் அவற்றுள் பல, வழியில் மாய்ந்து விட்டனவாம். காவலர் நன்கு கண்டு வந்து சொன்னார்கள்.

**பழநி :** ஆமாம்! உண்மைதான். நான் சற்று முன்பு அந்தப் பக்கம் சென்றிருந்தேன். எங்கும் இதே பேச்சாகத்தான் இருந்தது.

**பெருஞ் :** அப்படியா! அப்போது உண்மையாகத்தான் இருக்கும். சரி இனி என்ன செய்யப் போகிறீர்கள்?

**மாணி :** அதுதான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். விரைவில் ஊர் திரும்பிப் பாண்டியனிடம் தகவல் சொல்லி விடலாமென நினைக்கிறேன்.

**பெருஞ் :** ஏன்? இன்னும் சில நாட்களில் வேறு சில கலன்களில் வரும் குதிரைகளை வாங்கிவரலா மல்லவா?

**மாணி :** ஆமாம்! ஆனால் அதுவும் இயலாது என நினைக்கிறேன். அண்மையில் குதிரை ஏற்றிக்கொண்டு வேறு கலன்கள் வரப்போவதில்லையாமே!

பழநி : யார் சொன்னது? இன்னும் சில நாட்களில் வேறு குதிரைகள் வருவதாக என்னிடம் யவன வீரர்களே சொன்னார்களே!

பெருஞ் : ஆமாம்! வாதவூரரே! நீங்கள் புறப்பட்டு வந்த பிறகு மதுரைக்கு வந்த செய்தியும் அதுதான்.

மாணி : இல்லையே! நம் காவலர் நன்கு விசாரித்துத்தானே வந்தார்கள். சரி, நானே நேரில் சென்று விசாரித்து வருகிறேன்.

பழநி : இதற்காக நீங்கள் போகவேண்டுமா? நாங்கள் இருவரும் தக்க சான்றுகளுடன்தானே சொல்லுகிறோம். எங்கள்மேல் நம்பிக்கையில்லையா?

மாணி : இல்லை! இல்லை! அப்படியில்லை! சரி, நீங்கள் சொல்லுவதையே கொள்ளுகிறேன். ஆனாலும், அது என்று வரும் என்று திட்டமாகத் தெரியவில்லை. அதுவரை இந்த அரசருடைய பெருஞ்செல்வத்தை நாம் வேறு பாதுகாக்க வேண்டுமே!

பெருஞ் : ஆமாம்! அதுவும் உண்மைதான் (சற்றுச் சிந்தித்து) ஏன்? நீங்கள் இங்கேயே இருந்து குதிரையின் வருகை கண்டு வாங்க ஏற்பாடு செய்யுங்கள். விரும்பினால், நாங்கள் அரசனுடைய செல்வத்தைப் பாதுகாவலுடன் மதுரையில் சேர்க்கிறோம்.

மாணி : அது முறையல்லவே! முத்திரையிட்டுக் கொண்டு வந்த பணத்தை முறைப்படி செலவிட வேண்டும். அல்லது நானே பண்டாரத்தில் ஒப்படைக்கவேண்டும். அதுதான் முறை. எனவே நானும் உங்களுடனேயே புறப்பட்டு வருகிறேன்.

பெருஞ் : ஏன்? எங்களிடம் நம்பிக்கையில்லையா? அவ்வளவு நம்பிக்கையற்ற அமைச்சராகவா ஆகிவிட்டோம்! எனக்காக இல்லாவிட்டாலும், இதோ உங்கள் ஊர்க்காரன்

—உம் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்.—இவனை நம்பியாயினும் தரலாகாதா?

மாணி : இல்லை. அதற்காக இல்லை. என் கடமையை நான் சொன்னேன். அரச காரியங்களில் கடமை வழுவா திருப்பதுதானே நிலைபெற்று வாழ—நாட்டை வாழ வைக்க ஏற்றது. நீங்கள் இருவரும்—அதிலும் சிறப்பாக நீங்கள் முதலமைச்சர் பீடத்திலிருக்க வேண்டிய நீங்கள் —இருக்கும்போது ஐயம் எனக்கேது?

பெருஞ் : (மெல்ல)—அதைத்தான் நீ கெடுத்தாயே பாவி! (வெளியே) சரி உங்கள் விருப்பம். மறுபடியும் குதிரைகள் வரும்போது நீங்கள் இங்கேயே இருந்தால் பார்த்து வாங்கிக்கொள்ளலாமே என்ற காரணத்தால் அப்படிச் சொன்னோம். நாட்டு நிலையும் உங்களுக்குத் தெரியும். குதிரைகள் இல்லை—எனவே வருவதை விடக்கூடாது. அதற்காக இத்தனை பெருஞ் செல்வத்தையும் இங்கே தேக்கி வைப்பதும் தவறு—தாங்கள் தலைமை அமைச்சர். எனவே, தங்கள் விருப்பம்போல எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். நாங்கள் இதற்காகவா இங்கு வந்தோம்? எங்கள் பணி வேறு. நாங்கள் சென்று வருகின்றோம். என்ன பழநிக் கொற்றரே! சரி வாருங்கள் நாம் போகலாம்.

பழநி : ஆமாம் ஆமாம்! நாங்கள் போகிறோம்.
(பெருஞ்சாத்தன் வெளியே செல்கிறான்.)

மாணி : நில்லுங்கள்! எனது இப்போதைய மனநிலையில் என்ன செய்வதென்றே புரியவில்லை. நீங்கள் சொல்லும் வழியும் சரியாகத்தானே இருக்கின்றது. என்றாலும் என் கடமை குறுக்கிடுகிறதே!

பழநி : ஆமாம்-கடமை-கடமை என்று பின் எல்லாவற்றையும் இழந்து அல்லல் உறுவதைக் காட்டிலும், இவர் சொன்னபடி பொருளை எங்கள் வழி அனுப்பிச் சற்று

இங்கே அமைதியாக இருங்கள். நான் உங்கள் ஊரான் —உங்களால் முன்னுக்கு வந்தவன். என் சொல்லை நம்புங்கள். உங்கள் மன நிலைக்கு இந்த இடம் அமைதியான ஒன்று. சில காலம் கடவுளை எண்ணிப் பணிபுரியவும் ஏற்றது.

மாணி : ஆமாம்! ஆமாம்; நல்லது கொற்றரே! என்றாலும் அரச காரியத்தை முடித்து—கடமையை நிறைவேற்றிய பின்பல்லவா என் சொந்த விடுதலையை எண்ண வேண்டும்.

பழநி : அதுதான் நான்—நாங்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவதாக வாக்களித்துள்ளோமே. அவர் தலைமை அமைச்சராக இருக்கவேண்டியவர் அல்லவா? எங்கள் இருவரையும் நம்பி அதை ஒப்படையுங்கள். நாங்கள் பொறுப்பாகச் சேர்த்து, உங்கட்கு உரிய கைச்சாத்தையும் அனுப்பி விடுகிறோம். இன்னுமா நம்பிக்கையில்லை.

மாணி : சரி! ஏன் அதற்குள் அவர் வெளியே சென்றுவிட்டார்? அவரை அழை. (பெருஞ்சாத்தன் வர) உங்கள் எண்ணப்படியே நடக்க முடிவுசெய்துவிட்டேன். அரச செல்வத்தை நீங்கள் பொறுப்பாகக் கொண்டு சென்று மதுரைப் பண்டாரத்தே சேர்த்து விடுங்கள். நான் இன்னும் சிலகாலம் தங்கிப் பார்த்துக் குதிரைகள் வந்ததும் ஆள் அனுப்புகிறேன். கொற்றவனுக்கு இவை பற்றியெல்லாம் விளக்கிச் சொல்லிவிடுங்கள்,

இருவரும் : நல்லது, போய் வருகிறோம்.

**மணி :** நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

யாண்டும் நீக்கமற நிறைந்து நின்ற இறைவோனே! உன் விளையாடலை யாவரே அறிவார்? மதுரைத் திருநகரில் தாங்கள் ஆடிய விளையாடல்களை எண்ணி எண்ணிப் பாடுவதன்றி வேறு என் செய்ய வல்லேன்! இப்போது நான் இரண்டும் கெட்ட நிலையில் உள்ளேனே! குதிரைகளை விரைவில் அரசனிடம் ஒப்படைத்து, விடுதலை பெற்று, உன் புகழ்பாட வேண்டித் துடித்தேன். உன்னேடு அழைத்துச் செல்லவேண்டும் என்று கூறியபோது என்னை 'இன்னும் இருக்க' எனப் பணித்தாய். ஆனால், எதற்கு இருக்க வைத்தாய்? என் செய்வேன் எந்தாய்? யாரே எனை ஆளவல்லார்?

(காவலர் வர)

வாருங்கள். என்ன? இப்படியே பல நாட்கள் கழிகின்றனவே! என்ன செய்யலாம்? அரசனிடமிருந்து ஒன்றும் ஆணை வரவில்லையே. உடனே புறப்பட்டுச் சென்று விடுவோமா?

**காவல் :** அண்ணலே! நாங்கள் எல்லாத் துறைகளிலும் சென்று நன்ருக விசாரித்தோம். யாரும் குதிரை வருவதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. ஊருக்குச் சென்ற அமைச்சரோ நம்மை இன்னும் சிலநாள் இருந்து வரு

மாறு பணித்துள்ளார். ஆனல் அரசருடைய ஆணையோ ஒன்றும் வரவில்லை.

**மாணி** : என் செய்வது! அரசர் பணியும் செய்யமுடியவில்லை; ஆண்டவன் பணியும் செய்ய முடியவில்லை.

**காவல** : அண்ணல்! அடியேன் ஆழ்ந்து நினைத்தேன். தங்கள் தெய்வ உள்ளத்துக்கு ஏற்ற ஒரு பணியை மேற்கொண்டால் என்னவென்று எண்ணுகின்றேன். இப் பரந்த வெளியில் தங்கட்கு ஆண்டவன் அருள்செய்த குருந்த மரத்தின் அருகில்—அந்த ஆண்டவனுக்குப் பெருங் கோயில் அமைத்தால் என்ன என்று தோன்றுகிறது.

**மாணி** : நல்ல எண்ணம்தான்! அப்படியே செய்யலாம். அதற்காக நான் தொடக்க நாள் முதல் சேர்த்த பொருள் அனைத்தையும் கொண்டுவரச் செய்யலாம். காவலரே! தங்கள் எண்ணம் சரியே. ஆயினும், அதற்கும் அரசனின் இசைவினைப் பெறுதல் நல்லது. எனவே இன்றே தக்கவரை அனுப்பி எனது பொருள் அனைத்தையும் இங்கே கொண்டுவரச் சொல்லுங்கள். அத்துடன் அரசனுக்கு அறிவிக்க வேண்டிய ஓலையையும் தந்து வரச் சொல்லுங்கள். அனைவரும் வாழ்த்தப் பணியைத் தொடங்கலாம்.

**காவல** : அண்ணலே! அங்குச் சென்று ஆள் திரும்பும் வரையில் நாம் இங்கே காத்திருக்க வேண்டியதில்லை. இங்கே தங்கள் பெருமையைக் கேள்விப்பட்ட பல பணியாளர்கள் இப்போதே கூடியுள்ளார்கள். அவர்கள் கூறிய திருப்பணிக் கருத்தையே நான் தங்கட்குத் தெரிவித்தேன். எனவே இன்றே நாம் திருப்பணி தொடங்கலாம். அதற்குள் தங்கள் பொருள் அனைத்தும் கொண்டுவர— தங்கள் ஓலையை அரசரிடம் தந்துவரத் தக்கவர் ஒருவரை மதுரைக்கு அனுப்பி வைக்கிறேன். பல நல்ல பணியாளர்கள் தங்கள் வாய்ச்சொல்லுக்கு வெளியே காத்திருக்கிறார்கள்.

**மாணி :** *அப்படியா! உங்கள் விருப்பமும் மக்கள் பேராவலும் அதுவாயின், அப்படியே உடன் பணி தொடங்க ஏற்பாடு செய்யலாம். எனினும், எல்லாப் பணியாளர்கள் பெயர்களையும் குறித்து, அவரவர் பணிக்குத் தக்கபடி ஊதியத்தையும் பிறவும் தர ஏற்பாடு செய்யுங்கள். கலைஞரும் பணியாளரும் உள்ளம் வருந்தாது பார்த்துக் கொள்ள வேண்டும்.*

**காவல :** *அப்படியே அண்ணல்! பல கலைஞர்கள் தங்களைக் காணக் காத்திருக்கிறார்கள். அவர்களை வரச் சொல்லலாமா?*

**மாணி :** *வேண்டாம். கலைக்கு மதிப்பளிக்க வேண்டாமா? நானே வந்து அவர்களைக் காண்கின்றேன்.*

*(வெளியே வருகிறார்*
*பல கலைஞர்கள் கூடியுள்ளார்கள்.)*

**கலைஞர் :** *வணக்கம்! அமைச்சர் பெரும! வணக்கம்! ஆண்டவனால் ஆட்கொள்ளப் பெற்றவரே! வணக்கம்.*

**மாணி :** *அன்பர்களே! போதும் நிறுத்துங்கள். உங்கள் வரவால் மகிழ்ந்தேன். உங்கள் ஆர்வத்தைச் இலர்வழி அறிந்தேன்.*

**கலைஞர் :** *ஆம்! ஆம்! அண்ணலே! நாங்கள் அனைவரும் பாண்டி நாட்டு இக் கீழ்ப்பதியில் வாழும் தமிழ் நாட்டுக் கலைகளை-சிறப்பாகச் சிற்பம், கட்டடம் முதலியவற்றின் கலைநலங்களை—நன்கு அறிந்தவர்கள். தங்கள் தொண்டினையும் அரசியல் நெறியினையும்—முன்னமே அறிந்துள்ளோம். இங்கே தாங்கள் ஆண்டவனால் ஆட்கொள்ளப்பெற்ற பெருமையினையும் உணர்ந்தோம். எனவே, இங்கேயே என்றும் உங்கள் புகழ் நிலைக்கும்படி—எங்கள் பணி சிறக்கும்படி—ஒரு திருக்கோயிலை அமைக்கவும் திட்டமிட்டோம்.*

மணி : நல்லது. உங்கள் உள்ளமும் உணர்ச்சியும் அறிந்தேன். இறைவன் திருவுள்ளம் அதுவாயின் அப்படியே அமைவதாக! நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது. ஆயினும் உங்கள் பணிகளுக்கேற்ற ஊதியத்தினை நீங்கள் அவ்வப்போது பெற்றுக்கொள்ள வேண்டும். பணிமீதுள்ள ஆர்வத்தால், என்னிடம் கொண்ட பற்றினால், நீங்கள் உங்கள் வாழ்முதலை இழக்கலாகாது.

கலை : வேண்டாம். எங்கள் உணவுக்கு மட்டுமே போதும்.

மாணி : இல்லை! நீங்கள் உங்கள் பணிக்குரிய முழு ஊதியத்தையும் பெற்றுக் கொண்டே பணியாற்ற வேண்டும். இன்றேல் வேண்டாம்.

கலை : நல்லது. தங்கள் விருப்பப்படியே செய்கிறோம். உடனே பணி தொடங்க உத்தரவு தாருங்கள்.

மாணி : நான் தருவதாவது! ஆண்டவன் தருவான். பணி தொடங்குவதாக.

(பாண்டிய மன்னனுடைய வாயில் : பெருஞ் சாத்தனும் பழநிக் கொற்றனும் பேசிக் கொண் டிருக்கின்றனர்.)

பழநி : என்ன சாத்தனுரே! நீர் பெரிய சாதனைக்காரர் என்பதைக் கண்டு கொண்டேனே.

பெருஞ் : ஓய்! நாம் என்னய்யா சாதனை செய்து விட்டோம்? அந்தப் பாவிப் பயல் எப்படியோ ஏமாந்து விட்டான். அதுவும், நீயும் கூட வந்ததனுலேயே அப் பொருளைத் தந்து விட்டானன்றி வேறு என்ன? அது மட்டுமல்ல! இன்னொன்று முக்கியமானது. அந்த அப்பாவி தன் பணத்தை கொண்டு கோயில் கட்டப் போகிருனும் அங்கே. அதற்காக அரசனுக்கு ஓலையும் அனுப்பினுனும்.

பழநி : அட! இதையெல்லாம் நீங்கள் அறிந்து வைத்திருக் கிறீர்களே!

பெருஞ் : அறிந்து வைத்திருப்பதாவது. அந்த ஓலையினையே நான், தட்டி வந்துவிட்டேனே. இதோ பாரும்.

(நீட்டுகிருன்; பழநிக் கொற்றன் படித்துவிட்டு)

பழநி : ஐயோ பாவம்! இதை நீர் எப்படிக் கைப்பற்றிக் கொண்டீர்!

பெருஞ் : அதில் தானய்யா நம்முடைய திறமை இருக்கிறது. நம் வஞ்சுளம் எப்படிப்பட்டவள் என்பது உமக்குத் தெரி யாதா? மிகவும் நம்பிக்கை உடையவனைத்தான் பார்த் துக் கொடுத்தனுப்பியிருக்கிருர்கள். அதையெல்லாம் நம் கையாள் மூலமே அறிந்து இந்த ஏற்பாட்டினைச் செய் தேன், வஞ்சுளம் அந்த ஆளை வழியிடைக் கண்டு, அவனைத் தன் வலையில் சேர்த்து, அந்த ஓலையைப் பற்றிக் கொண்டு விட்டாள். ஆனுல் அதற்குள் விழித்துக்

கொண்டான் அவன். அங்கே அந்தப் பொருளைப் பெற முடியாமல் போய் விட்டது. அதற்கும் ஒரு வழி செய்யப் போகிறேன்.

பழநி : சரி! சரி! நீங்கள் இருவரும் மிகப் பொல்லாதவர்கள் ஐயா. ஆனால், இந்த உண்மையெல்லாம் அரசன் அறிந்தால் உங்களைத் தொலைத்தே விடுவான்.

பெருஞ் : தொலைப்பதாவது! அதற்குள் அந்த வாதவூரனை அடியோடு நானே தொலைத்துவிட்டு, முதலமைசனாகி விட்டால்—என்னை யார் என்ன செய்ய முடியும்?

பழநி : பார்க்கலாம்? ஆமாம். இப்போது நீங்கள் எங்கே அரச வாயிலில் நின்று கொண்டிருக்கிறீர்கள்?

பெருஞ் : நின்று கொண்டிருக்கிறேனா? சென்று கொண்டிருக்கிறேன், பறந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்லலாமையா. உடனே பாண்டிய மன்னனிடம் சென்று எல்லாவற்றையும் திரித்துச் சொல்லி, ஆத்திரமூட்டி, வாதவூரனை அடியோடு தொலைக்க வேண்டியனவற்றைச் செய்ய வேண்டாமா?

பழநி : ஏய் ஏய்! நானும் வாதவூரனாயிற்றே!

பெருஞ் : உம்மைச் சொல்லுவேனா! நீரும்தான் இவற்றை வெளியில் சொல்லுவீரா—என் மைத்துனி—அந்த மேனகை உமக்கையா!

பழநி : ஆமாம்...ஆமாம்! ஒரு நாளாவது என்னை அவளிடம் பேசவிட்டால்தானே!

பெருஞ் : கவலைப்படாதீர்; காலம் வரும்! இதோ இப்போது எனக்கு நல்ல காலம் ஐயா!

பழநி : எப்படி?

பெருஞ் : இப்போது அரசன் அந்தப்புரத்தில் இராணியோடு ஏதோ மாறுபட்டுப் பேசிக் கொண்டிருக்கிறானும். இப்போது நாம் சென்று சொன்னால், அப்படியே பிடித்துக் கொள்ளும்; தெரியுமா?

பழநி : சரியான சமயம் பார்த்தாய் ஐயா! உங்களூர் வஞ்ச கத்தார் சமயம் பார்ப்பதே அப்படித்தானு!

பெருஞ் : என்ன? அப்படிச் சொல்லிவிட்டீர்!

பழநி : ஆமாம்! அன்று அப்படித்தானே பொற்கொல்லன் அந்தப்புரம் சென்ற பாண்டியனிடத்தில் இல்லாததைச் சொல்லி நாட்டுக்கே ஒரு காப்பியத்தை உண்டாக்கிவிட்டான். நீயும்...

பெருஞ் : ஆம்! நானும் அப்படித்தான்! இது பின்னுலே ஒரு பெருங்காப்பியமாகும்—ஆனுல் எப்படி? எல்லாவற்றிலும் நானே வென்றவனுகி, அந்தச் சாமியார் மாண்டு மண்ணுகி...

பழநி : பாவம், அப்படியெல்லாம் சொல்லாதே. சரி எப்படியாவது தொலே...அதோ யாரோ வருகிறுர்களே!

பெருஞ் : ஆம்! நான் அனுப்பிய ஆள்தான். சமயம் பார்த்து இதோ வந்துவிட்டான். நீ செல். நான் உடனே போக வேண்டும்.

(பழநிக் கொற்றன் செல்ல, வாயிற் காவலன் வந்து காதில் ஏதோ சொல்ல, உள்ளே வேகமாகப் புகுகின்றுன் பெருஞ்சாத்தன்; பாண்டியன் சீற்றத்துடன் இருக்கிறுன்.)

பாண்டி : என்ன பெருஞ்சாத்தரே! ஏன் இவ்வளவு அவசரம்? எங்கே இப்படி ஓடி வருகிறீர்கள்?

பெருஞ் : அரசே தஞ்சம்! மிக முக்கியமான ஒரு பொருள் பற்றிப் பேச வேண்டியுள்ளது. பேசவும் அஞ்சுகிறேன்.

பாண்டி : அச்சம் ஏன்? பாண்டியன் முன் உண்மையை எடுத்துரைக்க யாரும் அஞ்சினது கிடையாதே?

பெருஞ் : அறிவேன் பெரும! எனினும் தங்களுக்கு மிகவும் வேண்டிய ஒருவரைப்பற்றிச் சொல்ல வேண்டியதை நினேத்து......

பாண்டி : *நினைத்து? ஏன் தயங்குகிறாய்? என்ன நடந்தது? எல்லாவற்றையும் விவரமாகச் சொல். முன்னமேயே குழம்பியுள்ள என்னை மேலும் குழப்பாதே.*

பெருஞ் : *சமயம் அறியாது வந்துவிட்டேன்; மன்னித்தருள்க!*

பாண்டி : இல்லை! நீ சொல்லவேண்டியதைச் சொல்லலாம்!

பெருஞ் : நமக்கு இன்னும் குதிரைகள் பெருந்துறையிலிருந்து வந்து சேரவில்லை.

பாண்டி : ஆமாம், அறிவேன்! பெருந்துறையில் இன்னும் குதிரைகள் வந்து சேரவில்லை என அறிந்தேன்.

பெருஞ் : இல்லை அரசே! தவறு வேறு இடத்தில் நேர்ந்து விட்டது.

பாண்டி : என்ன சொல்லுகிறாய் பெருஞ்சாத்தா? சற்று விளக்கமாக எடுத்துச் சொல்! ஏன் மேலும் குழப்புகிறாய்?

பெருஞ் : இல்லை! குதிரை வாங்கச் சென்ற வாதவூரர் குதிரை வாங்க முயற்சி செய்யவில்லை.

பாண்டி : பின்னே!

பெருஞ் : தங்கள் செல்வமனைத்தையும் மண்ணுக்கும் கல்லுக்கும் சுண்ணும்புக்குமாகப் பாழ்படுத்துகிறார்.

பாண்டி : மறுபடியும் குழப்பாதே! நேராகச் சொல்! நல்ல வாதவூரர் நாட்டுக்குத் தேவையானதே செய்வார்.

பெருஞ் : ஆம்! தற்போது நாட்டுக்குத் தேவை நல்ல குதிரைகளே!

பாண்டி : உண்மை. அதற்காகத்தானே அவரை அனுப்பினோம்.

பெருஞ் : ஆனால், குதிரை வாங்கச்சென்ற பொருள் அனைத்தையும் கோயில் கட்டப் பயன்படுத்துகிறார் அரசே! தேவையான குதிரைகளை விடுத்து......

பாண்டி : என்ன! நம் பணத்தைக் கொண்டா? நல்ல பணி தான்!

பெருஞ் : ஆம்! நல்ல பணிதான். ஆனால் குதிரைகள் மிக இன்றியமையாது உடன் தேவையல்லவோ? அன்றியும் தங்கள் உத்தரவு இன்றிப் பணியா?

பாண்டி : அது உண்மை! ஆம், வாதவூரார் சமயப்பற்று உடையவர்தாம்.

பெருஞ் : பற்று, தற்போது வெறியாக மாறிவிட்டது.

பாண்டி : அது கூடாதுதான்.

பெருஞ் : அதைத்தான் நான் சொல்ல வந்தேன். அச் சமயப் பற்று வெறியான காரணத்தால், அவர் எல்லாக் கடமைகளையும் மறந்து, கோயில் கட்டிக்கொண்டே, தங்கள் பண்டார முழுவதையும் காலியாக்கத் தொடங்கிவிட்டார். தாங்கள் குதிரை வாங்கக் கொடுத்தனுப்பிய பணம் போதாது என்று, தாங்கள் கொடுத்த அதிகாரத்தின் பேரில், மேலும் இங்கிருந்து பொருளைக் கொண்டு செல்கின்றார்.

பாண்டி : என்ன? அப்படியா?

பெருஞ் : ஆம்! அந்தப் பணம் இன்னும் பெருந்துறை சென்று சேர்ந்திருக்காது. நீங்கள் தற்போது விரைந்து நடவடிக்கை எடுத்தால், எல்லா உண்மைகளும் புலனாவதோடு, அப் பொருளும் திரும்பும்.

பாண்டி : (சீற்றமாக) நம்பிக்கைத் துரோகம்! எனினும் நல்லதே. சரி, பெருஞ்சாத்தரே! நீரே இதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்பதை ஆராய்ந்து உடனே நடவடிக்கை எடுத்து என் கைச்சாத்துக்குத் தயாராக வையும்.

பெருஞ் : தங்கள் உத்தரவுப்படியே. (வெளிவருகிறான்) (தனிமொழி) எண்ணியது முடித்தேன். மன்னவன்

மனம் மாறிவிட்டான். இனி நான் வைத்ததுதான் சட்டம். என்றாலும், இவனும் சமயப்பித்துப் பிடித் தவன்; அவனிடம் நீங்காத பற்றுடையவன். எனவே, அவசரப்பட்டு எந்தக் காரியத்தையும் செய்துவிடக் கூடாது. எண்ணிப் பார்க்கலாம். வஞ்சுளத்தின் யோசனைகள்தாம் இப்போது நமக்குப் பெருந்துணை புரியும். மற்றும் அரசனிடம் பெற்ற வெற்றியைக் கேட்டால் அவள் எவ்வளவு மகிழ்வாள். உடன் அவளிடம் சென்று எல்லாவற்றையும் சொல்லவேண்டும் —பிறகே மற்றவை.

(பெருந்துறையில் மக்கள் மணிவாசகர் பணி கண்டு மகிழ்ச்சி கொள்ளுகின்றனர். ஆளுடையான், மணி கண்டன் இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

**ஆளு :** என்ன தம்பி, வரவர மக்கள் கூட்டம் இப்படிப் பெருகி வருகின்றதே.

**மணி :** பெருகாமல் என்ன செய்யும் அண்ணே? அந்த மனிதர் எப்படித் தம்மை மறந்து கடவுளுக்குத் தொண்டு செய்கிறார்; பார்க்கிறாயல்லவா? நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் இப்படி மக்கள் 'நீ, நான்' என்று போட்டியிட்டுக்கொண்டு வருவதை எப்போதாவது பார்த்திருக்கிறாயா? அதுவும் கூலி ஒன்றும் வேண்டாமலேயே வெறும் உணவும் உடையும் இருக்கையும் பெற்றே தொண்டு செய்ய வருவதை நினைத்தால், நாம் நம் ஊரின் பெருமையையும் இப் பெருமையைத் தேடித் தந்த அவரையும் பாராட்ட வேண்டாமா? அண்ணே! அவர் பெயர் இப்போது உனக்குத் தெரியுமா!

**ஆளு :** ஏன் தெரியாமல்? மக்கள் வாயெல்லாம் மாணிகக் வாசகர் என்றல்லவா அவரை அழைக்கின்றன. ஆகா! அந்தப் பெயருந்தாம் அவருக்கு எவ்வளவு பொருத்தமாக உள்ளது!

**மணி :** ஆமாம்! அப் பெயா அவருக்கு ஆண்டவனால் இடப்பட்ட பெயரல்லவா! ஆண்டவன் யாரை இப்படிப் போற்றிப் புகழ்ந்தார்? உலகம் இதுவரை காணாத புதுமையல்லவா நாம் இன்று நம் கண்முன் காண்கின்றோம்!

**ஆளு :** ஆம்! ஆம்! நாடே புத்தொளி பெறுகின்றது. எங்கும் அவர் பேச்சுத்தானே. நேற்று மதுரைப் பக்கம் சென்று வந்தேன். அவ்வளவு தூரத்தில் இவர் புகழ் கடைத் தெருக்களிலெல்லாம் பேசப் பெறுகின்றது. எந்தக் கடைக்குச் சென்ருலும், நான் இந்த ஊரான் என்று அறிந்தால் மக்கள் இவரைப்பற்றியும், இத்திருக்கோயில் பணி பற்றியுமல்லவா பேசக் கேட்கிருர்கள்.

**மணி :** அப்படியா?

**ஆளு :** அதுமட்டுமன்று! இவர் பெருமை அங்கு எப்படிச் சிறந்துள்ளது தெரியுமா? அரசன் பெயர்கூடச் சிலருக்கு தெரியாதிருக்கலாம்; ஆனுல் இவரை அறியாதவர் ஒருவரும் இல்லையே. ஆண், பெண், பிள்ளைகள் அனைவரும் இவரைத் தெய்வமாகக் கும்பிடுகிருர்கள். இவர் பெயரைக் கேட்டவுடன் கரங் கூப்பிடுகிருர்கள்.

**மணி :** ஆம்! உண்மை! அப்படித்தான் நல்லமைச்சர் இருக்க வேண்டும். ஏன் அவரைப்பற்றி நாம் முன்னமே இங்கேயே கேள்விப்பட்டதில்லையா? அரசன் இங்கே எப்போதோ வருகிருன் என்ருலும் அவனை யார் பார்த்திருக்கிறேம்? ஆனுல், இவர் இங்கே வரும்போதெல்லாம் நம் போன்ற ஏழைகளிடத் தெல்லாம்கூட வந்து, நம் தேவைகளை அறிந்து இதமாகப் பேசிச் செல்வதோடு, வேண்டிய உதவிகளையும் அவ்வப்போது செய்திருக்கிருரே! அப்பப்பா! இவர் வருமுன் அந்தப் பெருஞ்சாத்தனும், அவனைச் சேர்ந்தவர்களும் செய்த கொடுமைகளை நினைத்தாலும் நடுக்கமல்லவா உண்டாகிறது.

**ஆளு :** நன்று சொன்ஞய்! இந்தப் பாண்டிய மன்னனின் பேரும் புகழும், பரம்பரையாக வந்த நல்ல சிறப்புக்களும் கெடுமே என்று நாடே அஞ்சிய காலத்தில் அல்லவா, இவர் ஒரு வரப்பிரசாதம் மாதிரி வந்து சேர்ந்

தார். எனக்கு அந்த நாட்களை நினைத்தாலும் நடுக்கம் உண்டாகின்றதே. இவர் இங்கு வந்திராவிட்டால் நாமெல்லாம் ஊர் விட்டே ஓடவேண்டியிருக்குமே.

**மணி :** உண்மை அண்ணு! இவர் பரம்பரையான அமைச்சர் குலத்தில் பிறந்தவர் அல்லவா! அந்த அமைச்சர் குலத்தைத் தானே 'அமாத்தியர் குலம்' எனக் கூறுகின்ருர்கள். அந்த நல்ல பரம்பரைக் குணத்தோடு, இவர் சிறந்த கலாவிற்பன்னராக இருந்ததோடு, பல சாத்திரங்களைப் பயின்றதோடு, கடவுள் உணர்வும் பெற்றவரானதினுலேயே—எல்லாவிடத்தும் எல்லா உயிர்களிடத்தும் இரக்க குணம் காட்டுவதனுலே, நம் நாட்டில் மட்டுமின்றி, பிற சோழ, சேர, தொண்டை நாடுகளிலும் இவர் புகழ் நன்கு பரவி வளர்ந்து வந்துள்ளது எனக் கேள்விப்படுகிருேம். நேற்றுத் தொண்டை நாட்டிலிருந்தும் காஞ்சியிலிருந்தும் இங்கு வந்த வணிகர்கள் இவர் புகழைப் பாடிப் பாராட்டியதை நானும் சிலரும் கேட்டு வியந்தோமே!

**ஆளு :** ஆம்! உண்மைதான். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். உற்ருர், உறவினர், மக்கள், மனைவி என்ற யாதொரு பற்றுமின்றி இவரைப்போல் யார் ஓடியாடி நாட்டுக்குப் பாடுபட்ட நல்லவர் இதுவரை வரலாற்றில் இருக்கிருர்கள்? தமக்கென ஒன்றுமில்லாது, இதோ தாம் பெற்ற—ஊதியமாகப் பெற்ற—எல்லாவற்றையும் கொண்டு வந்து ஆண்டவன் கோயிலுக்கு என்றே செலவு செய்கின்ருரே.

**மணி :** அதுமட்டுமன்று; மக்கள் அனைவரும் ஆண்டவன் குழந்தைகளே என்று அவர் பாராட்டும் பண்புதான் என்னே! எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தமமை மறந்து கண்ணீர் பெருக்கெடுத்துப் பாடும்போதுதான் கேட்போருக்கு எத்தனை உணர்ச்சி உண்டாகின்றது, அதோ தூரத்தே சொல்லரசு வருகிருரே—

**ஆளு :** ஆம் ஆம்! (சொல்லரசு அருகில் வர)

**இருவரும் :** வணக்கம்.

**சொல் :** வணக்கம்! வணக்கம். என்ன இருவரும் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?

**மணி :** ஒன்றுமில்லை. எல்லாம் நம் மணிவாசகர் புகழ் பற்றித்தான். அவர் புகழ் பேசாத நாள் பிறவாத நாளோ என்னுமாறு மக்கள் உணர்ந்துகொண்டார் களே!

**சொல் :** உண்மைதான். ஆனுல், நான் இரண்டு நாட்களுக்கு முன் மதுரை சென்று வந்தேன். அங்கே அந்தப் பெருஞ் சாத்தனும் அவன் கூட்டமும் இவருக்கு எதிராகப் பெருஞ்சதி செய்வதாகக் கேள்விப்பட்டேன். இவர் அங்கு இல்லாததும், இங்கே இறைபணி செய்வதும், இவர் புகழ் நாடெங்கும் உலகெங்கும் பரவுவதும், பாண்டிமன்னனுக்கும்கூடக் கசப்பாகின்றது என்னுமாறு மக்கள்பேசிக் கொள்ளுகிறுர்கள். அதற்கேற்ப அத் துன் மந்திரி அரசரைத் தனிமையில் கண்டு இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி மன்னவன் மனத்தை மாற்றுகின்றுனும்.

**ஆளு :** இருக்கலாம். மன்னவன் இவரிடம் பெருமதிப்பு வைத்திருப்பவனுயிற்றே. அவ்வளவு எளிதில் அவர்கள் சொல்வதைக் கேட்கமாட்டான் என்று நம்புகிறேன்.

**மணி :** ஏன்? கரைப்பார் கரைத்தால்—அதில் புகழ் பற்றிய பொருமை வேறு அவனுக்கு வருமல்லவா? அவனும் மனிதன்தானே.

**சொல் :** அது மட்டுமன்று; இன்னென்று முக்கியம். இங்கே இவர் கோயில் கட்டுவதற்குப் பாண்டியன் குதிரை வாங்கக் கொடுத்த பணத்தைச் செலவிடுகிறுர் என்ற குற்றத்தை வேறு சுமத்தியிருக்கிறுர்கள்.

ஆளு : என்ன? இது என்ன கொடுமை? அந்தப் பணத்தை அந்தப் பாவி பெருஞ்சாத்தனும் அவன் நண்பன் பழநிக் கொற்றனும் வந்து சென்றபோது அல்லவா வாங்கிச் சென்றூர்கள்! இது இவருடைய செல்வமல்லவா!

சொல் : உண்மைதான். நமக்கெல்லாம் தெரிகிறது. ஆனல் எப்படி நிரூபிக்க முடியும்? அதைப் பெற்றுச் சென்ற அவனேதான் மன்னனிடம் இப்படி மாற்றிக்கூறி, இவர் மேல் பழிதீர்த்துக் கொள்ளத் துடிக்கிருன். மதுரை மக்களுக்கு இவ்வுண்மை தெரியாவிட்டாலும், அவன் ஏதோ சூழ்ச்சி செய்கிருன் என்பதுமட்டும் நன்கு புரிந்து விட்டது. என்ருலும் மன்னன் இவரிடம் கொாண்ட பற்றில் குறைந்தவனுகி ஏதோ இவருக்கு உத்தரவு அனுப்பிவிட்டதாகக் கேள்வி.

மணி : இருக்கும்; இருக்கும். சில நாட்களுக்கு முன் நான் சென்ற போதே இதுபற்றி மக்கள் தெளிவில்லாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தக் குற்றத்தை— குதிரை வாங்க வந்த பணத்தைக் கொண்டு அரசன் அனுமதியில்லாமல் இங்கேயே தங்கிக் கோயில் கட்டும் குற்றத்தை இவர் மேலேற்றி, இவரை அமைச்சர் பதவியி லிருந்து விடுதலே செய்துவிட முயற்சிகள் நடைபெறு கின்றன என அறிந்தேன்.

ஆளு : அட பாவிகளா! நல்லவர்களுக்குக் காலம் இல்லேயா?

சொல் : எப்படி இருக்கும்? என்று இருந்தது, இன்று இருப் பதற்கு?

மணி : ஆமாம்! உண்மைதான். அந்தப் பெருஞ்சாத்தன், பரத்தை வஞ்சுளம், பழநிக் கொற்றன் ஆகிய மூவரும் சூழ்ந்து செய்யும் வஞ்சகம் நல்லவரை ஆட்டிப்படைக் கின்றது. அரசனும் அவர்கள் பக்கம்—ஏன்!—அவனுக்கு எடுத்துரைப்பார் இல்லேயா!

சொல் : இருந்தாலும் இறுதியில் உண்மை வெளிப்படாமலா போகும்? பார்க்கலாம். நாட்டுமக்கள் அறிவார்கள் இவர் நிலையை—பணியை—தொண்டினை—நேர்மையை. எனவே வஞ்சகத்தார் வஞ்சகம் நிச்சயம் வெளியாகும். எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவன்—தாமே வந்து ஆட்கொண்ட அந்த உத்தமன்—இருக்கும் வரையில் நாம்—ஏன்?—உலகமே அஞ்ச வேண்டுவதில்லையே!

ஆளு : உண்மைதான். ஆனுல் அந்தப் பாவிகள் கடவுளுக்கும் அஞ்சாதவர்களாயிற்றே!

சொல் : இருக்கட்டும். அவர்களை நீளவிட்டே ஆண்டவன் புத்தி புகட்டுவார்—அன்றி அழித்தொழிப்பார். ஆம்! அவர்களாலே 'கொடுமை என்றும் வாழாது' என்ற உண்மை வெளிவராமலா போகும்?

ஆளு : ஆம்! பார்க்கலாம். ஆண்டவன் ஒருவனே வருங் காலத்தில் நம்மையும் வாழவைப்பான்.

மணி : நல்லவர் புகழ் என்றும் வாழ, அல்லவர் மண்ணோடு மண்ணாய் மடிய வகை செய்து, வையத்தைக் கொடுமை யினின்று காப்பான்—சரி, நாம் செல்வோம்.

பெருஞ் : கண்ணே! எல்லாம் நம் எண்ணம்போல் நடந்தேறி வருகின்றதே பார்த்தாயா!

வஞ்சு : இந்த வஞ்சுளம் தலையிடும் எந்தக் காரியம்தான் வெற்றியைத் தேடித் தராது? இன்னும் பாருங்கள் என்னென்னவோ நடக்கப்போகின்றன. அந்தப் பழநிக் கொற்றன் ஓர் அப்பாவி.

பெருஞ் : உண்மை! உண்மை! உன் தங்கையைக் காட்டிக் காட்டி...

வஞ்சு : அவளைக் காட்டிக் காட்டியா?

பெருஞ் : இல்லை! இல்லை. அவள் பெயரைச் சொல்லிச் சொல்லி—அவளை அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்லிச் சொல்லி—மெள்ள வழிக்கு அவனைக் கொண்டுவந்தாயிற்று! அவன் இனி எங்கும் மாறிப்போக மாட்டான். இன்னும் அவனைக்கொண்டே நம் காரியங்களையெல்லாம் சாதித்துக்கொண்டு...

வஞ்சு : கொண்டு—

பெருஞ் : பயப்படாதே! அவனுக்கு உன் தங்கையைக் கொடுக்கமாட்டேன். சாதித்துக்கொண்டு, கடைசியில் அந்த வாதவூரானைப் பழிதீர்க்கும் வழியே, இவனையும் ஒழித்து, அவன் பதவிகளைப் பிடுங்கி ஊரைவிட்டே ஓட்டிவிட மாட்டேனா?

வஞ்சு : அதுதான் சரி! அதற்கும் நான் திட்டம் வைத்திருக்கிறேன். பின்னால் பேசிக்கொள்ளலாம்.

பெருஞ் : உன் சாமர்த்தியம் யாருக்கு வரும்? என் கண்ணே

வஞ்சு : கொஞ்சுவது அப்புறம் இருக்கட்டும்; என்னென்ன செய்திருக்கிறீர்கள்? இனி என்னென்ன செய்யவேண்டும் என்பதை யோசித்தீர்களா?

**பெருஞ் :** *யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் முடிவாகிவிட்டது. இனி அவன் ஒழிந்தான். அவன் மதுரைக்கே வர மாட்டான். வந்தால் சிறைக் கைதியாகத்தான் வருவான்.*

**வஞ்சு :** *ஆமாம்! உங்கள் சாமர்த்தியமே சமார்த்தியம். ஆனால் அவனுடைய புகழையும் சிறப்பையும் கோயில் பணியையும் மக்கள்—ஆண்களும் பெண்களும்—எப்படிப் புகழ்ந்து பேசுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?*

**பெருஞ் :** *எனக்குத் தெரியுமாவது? அரசனுக்கே தெரியுமே.*

**வஞ்சு :** *ஐயையோ! அப்புறம் மனம் மாறிவிடுவாரே!*

**பெருஞ் :** *அதுதான் இல்லை. அதுவே மன்னனை என் பக்கம் இழுக்கப் பயன்படுகிறது.*

**வஞ்சு :** *என்ன?*

**பெருஞ் :** *ஆமாம் அவன் புகழ் கேட்டு மன்னன் பொருமுகிறான். யாருக்குத்தான் புகழில் ஆசையிருக்காது? அதுவும் நான் போட்ட தூபத்தில் அரசன் இந்த வாதவூரானை உடனே ஒழிக்கவேண்டும் என்கிறான். அரசன் பணத்தை வஞ்சமாகக் கையாண்டு தனக்குப் பேரும் புகழும் தேடிக் கொள்ளுகிறான் என்று சொன்னதும், அரசன் எவ்வளவு கோபம் கொண்டான் தெரியுமா? உடனே 'குதிரைகள் வரவேண்டும்' என்று உத்தரவு போடச் சொன்னான். நான் அதையும் இல்லாததையும் சேர்த்துத் தயார் செய்து, எப்போதோ பெருந்துறைக்கு ஆள் அனுப்பி விட்டேன்.*

**வஞ்சு :** *ஆமாம், அது இருக்கட்டும். இரண்டாவது, அவன் சொந்தப் பொருளை எடுத்துச் சென்றதைத் தடுத்து நிறுத்த மன்னவன் ஆணைப்படி ஆள் அனுப்பினதாகச் சொன்னீர்களே, அது என்னவாயிற்று?*

பெருஞ் : ஆம்! அதில்தான் நான் சற்றுப் பிந்திவிட்டேன். என்றாலும், அதைப்பற்றி அரசன் ஒன்றும் கேட்கவில்லை யாதலால் அப்படியே விட்டுவிட்டேன். இந்த முயற்சி யில் என் வெற்றியைப் பார்க்கப் போகிறாயே.

(தூரத்தே பழநிக் கொற்றன் வருகிறான்.)

இவன் எங்கே இப்பொழுது வருகிறான்?

வஞ்சு : வரட்டும்! வரட்டும்! பார்த்துக்கொள்ளலாம்.

பெருஞ் : வா அப்பனே வா!

பழநி : வணக்கம் அண்ணா!

பெருஞ் : என்ன செய்தி? எங்கே இப்படிப் புறப்பட்டாய்?

பழநி : ஒன்றுமில்லை. எல்லாம் நாம் எண்ணியபடியே நடக் கின்றது. என்றாலும், நேற்று, பெருந்துறையிலிருந்து வந்த ஓர் ஆள் மூலம் வேறொரு செய்தியும் கேள்விப்பட் டேன்.

இருவரும் : என்ன? என்ன அது?

பழநி : ஒன்றுமில்லை. எங்களூரான் தானாகவே இந்த வேலையை விட்டுவிடப் போவதாகவும் அதற்கேற்ற ஓலையை மன்ன னுக்கு அனுப்பிவிட்டதாகவும் அங்கே பேசிக்கொண் டார்களாம்.

பெருஞ் : இருக்காது! இருக்காது! யாரோ நமக்காகக் கட்டி விட்டிருப்பார்கள். நாம் ஏமாந்து வாளா இருக்கக் கட்டிய கதையாக இருக்கலாம். அதை உண்மை என்று நம்பிவிடாதே.

வஞ்சு : ஆமாம்! ஆமாம்! இருக்கலாம். மேலும் இந்த மக்கள் அவனிடம் ஏதோ வெறிகொண்டு—அதைப் பக்தி என்று சொல்லிக்கொண்டிருப்பதால், இப்படிக் கட்டி—நம்மை மயங்க வைப்பார்கள்.

பழநி : இல்லை! தக்கவர் மூலமே அறிந்தேன். அவர்கள் நெருங்கிய உறவினர் ஒருவர் சென்று வந்தார். அவர் சொன்னார். அத்துடன் தான் யாருக்கும் அடிமை இல்லை என்றுகூடப் பாடுகிறாளும்.

வஞ்சு : அவ்வளவு தூரம் வந்துவிட்டதா? அந்தப் பாட்டு உனக்குத் தெரியுமா? கொண்டு வந்திருக்கிறாயா?

பழநி : இல்லாமலா வெறுங்கையுடன் வருவேன். அதுவும் உங்களிடம்—மைத்துனியிடம்...

வஞ்சு : ஓய்! வாயை மூடும். உறவுகொண்டாடுவது அப்புறம் இருக்கட்டும்; அந்தப் பாட்டைக் காட்டும்.

பழநி : அப்போது உறவு இல்லையா?

வஞ்சு : என்ன பயித்தியம் மாதிரிப் பேசுகிறீரே! உறவு இல்லாமலா இவ்வளவும்? என் தங்கை யென்ன! (மெல்ல—காதில்) நான் வேண்டுமானாலும்—முதலில் அந்த ஓலையை எடும்.

பழநி : ஆமாம் நீங்கள் நன்றாகப் பாடுவீர்கள் அல்லவா? இதோ அந்தப் பாட்டு—பாடுங்கள் பார்க்கலாம்.

வஞ்சு : ஓலையை வாங்கிப் பாடுகிறாள்—

'தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே'

பழநி : பேஷ் பேஷ்! நன்றாக இருக்கிறது.

பெருஞ் : ஓய்! அது கிடக்கட்டும். அதன் பொருள் நன்ருக இருக்கிறது. நமக்குத் தேவையானதாகவும் இருக்கிறது! யாதும் அஞ்சோம் என்று பாடுகிருனே இதைக் கொண்டு அப்படியே அரசனிடம் கொடுத்தால் அவனுக்குக் கோபம் இன்னும் அதிகமாகுமே!

வஞ்சு : நல்ல மூளை உங்களுக்கு—இவனும் ஒரு சமயப் பித்தன் தானே! இந்தப் பாட்டைக் கேட்டு ஒருவேளை மனம் மாறிஞல்...

பெருஞ் : போடி பைத்தியமே! இத்தனை நாள் பழகியுமா என்னைப் புரிந்துகொள்ள முடிய்வில்லை. இதைக் காட்டிச் சொல்லும் வகையில் சொல்லி மன்னவன் மனத்தை இன்னும் திருப்புவேன். இது கிடக்கட்டும் பழநி! நீ ஏதுவோ வேலையை விட்டான் என்று சொன்ஞயே அது என்ன?

பழநி : ஆமாம்: உண்மைதான்!

பெருஞ் : அப்படியாஞல், அதற்குமுன் நாம் முயன்று நம் செயலில் வெற்றி பெறவேண்டும். அரசனே அவனே வேலையிலிருந்து தள்ளிஞன் என்ற அபகீர்த்தி உண்டாக்க வேண்டும். அதுதான் மக்களுக்கு எடுபடும். நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். நான் உடனே சென்று கவனித்து வருகிறேன்.

இருவரும் : நல்லது! வெற்றியோடு வாருங்கள்.

மணி : பெருநீர் அறச்சிறு மீன்துவண்
டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்! வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு
தோணிவடி வின்வெள்ளை
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக் கொழுமணியே!

கங்கை சடைக்கரந்த கண்ணுதலே! எங்கோ குதிரை வாங்க வந்த என்னை 'வா' என்று உன் கருணையால் அழைத்து அருட்கருணை காட்டிக் குருந்தமரத்து நிழலில் ஆட்கொண்டாய். ஆனால் அப்படியே என்னை அணைத்துக் கொள்ளாது விட்டுவிட்டாயே! அடியோடு கைவிட்டு விடுவாயோ! வேண்டாம் அண்ணல்! ஏற்று அருள் செய் வாயா? ஏதோ எனக்கு இன்னும் உலகில் பணி உண்டு என்றாயே! அது இந்தக் கோயில் பணிதானே? ஆம். என் வாழ்நாளில் நான் பெற்ற பொருள் அனைத்தும் உன் ஆலயத் திருப்பணிக்கு உரித்தாக்கிவிட்டேன். பொன் னும் மெய்ப்பொருளும் நீயான பிறகு இப் பொன்னையும் பொருளையும் வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன். இதோ அனைத்தும் உன் அழகார் திருப் பணிக்கு உரியனவாய் அமைந்து கோயில் வளர்ந்து வருகின்றதே! இதோ இன்னும் சில நாட்களில் திருக் கோயில் பணி நிறைவு பெற்றுவிடும். இதனினும் மனிதப் பிறவியில் பெறும் பேறு வேறு யாது உளது? இதில் தொண்டு செய்யும் பணியாளர்கள்தாம் எத்துணை உறுதி யோடும் அன்போடும் ஊக்க உணர்வோடும் தொண்டு செய்து இப்பணியை விரைவில் முடித்துக் கொடுக்க முன்

நிற்கின்றனர். ஆம்! அதன் வளர்ச்சி என் உள்ள வளர்ச்சி ஆகிறது – சமய வளர்ச்சியாகிறது மக்கள் மன வளர்ச்சி யாகின்றது. இந்தப் பாண்டி நாட்டில்—இந் நாட்டில் மட்டுமின்றி உலகெங்கணும் வாழும் மக்களுக்கு இக் கோயில் என்றும் எடுத்துக்காட்டாக நின்று நிலைக்குமே! ...ஆனால்...ஆம்! ஆனால்! ஆட்கொண்ட இறைவனே! நான் உனக்கு அடிமையாயினும், இன்னும் பாண்டிய மன்னனின் பணியாள் என்ற பெயரிலிருந்து விடுதலையாக வில்லையே. நான் விடுதலை கோரி விடுத்த விண்ணப்பத் திற்கு உரிய பதிலும் கிடைக்கவில்லையே. மேலும், அவன் இட்ட ணி இன்னும் முடிவு பெறவில்லையே. குதிரை களைக் கொண்டு சேர்த்தபிறகு அல்லவா என் கடமை முடிவுற்றதாகும்? இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பாக அன்றோ இன்று நான் இருக்கிறேன். குதிரைகள் என்று வரும் என்பது தெரியவில்லையே? ஆண்டவனே! உன் சோதனையை நீட்டிக்காதே! நான் பாண்டி மன்ன னிடம் குதிரையைச் சேர்க்க உதவிசெய்ய வேண்டுவது உன் கடமையாகும். அவன் செல்வத்தை அவனுக்கே அனுப்பிவிட்டேனாயினும் மன நிறைவில்லையே. அத்துடன் நேற்று மதுரையிலிருந்து வந்த ஒற்றர்கள் அப் பணம்—குதிரைக்கென வந்ததைத் திருப்பி அனுப்பிய அச் செல்வம்—அரசப் பண்டாரத்தை அடைந்தமைக்குச் சான்று ஒன்றும் இல்லை என்றல்லவா சொல்லுகிறார்கள்? ஒரு வேளை அதுவும் உண்மையாயின் யாரை நோவது? யாரை ஐயமுறுவது? எல்லாம் உன் கடன் என்று இருப்பினும் பாண்டியனுக்குப் பதில் சொல்ல வேண்டுமே என எண்ணும்போது அஞ்சவேண்டியுள்ளதே! கடமையும் அதுதானே—

(சற்று நின்று நினைத்து)—ஆம்! நான் ஏன் அஞ்ச வேண்டும்?

'அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.'

ஆம்! நீ விட்டவழி! நான் நினைப்பதற்கு என்ன இருக்கிறது?

(மாணிக்கவாசகர் அடியவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார்.)

நல்ல அன்பர்களே! மெய்த்தொண்டர்களே! உங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். ஆண்டவன் திருப்பணி முடிய நீங்கள் மேற்கொண்ட அளப்பருஞ் செயல் எண்ணிப் பார்க்க முடியாதது; நாவால் புகழ்ந்து சொல்ல முடியாதது; நாட்டில் என்றென்றும் மங்காது மலர்ந்து உயர்ந்து சிறந்து வாழப்போவது. இக் கோயில் பணி தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகின் பல பாகங்களிலும் பரந்து சென்று சிறக்கப் போகின்றது என்பதை வருங் காலம் காட்டும். திருப்பணியோ முடிந்துவிட்டது. ஆண்டவனைக் கோயிலுள் இருத்தி மகிழ்ந்தோம். இனி நான் அவன் புகழ் பாடி, உங்கள் அனைவரிடமும் விடை பெற்று, பாண்டியனுக்கு நான் ஆற்றவேண்டிய கடமையினையும் முடித்து ஊர்தோறும் இத்தகைய திருப்பணிகள் செய்ய வேண்டிய வகையில் யாத்திரை செய்வேன். அப்போதும் தங்கள் உதவி தேவைப்படும் என எண்ணுகின்றேன். இன்னும் சில நாட்கள் இருந்து குடமுழக்கு விழாவையும் முடித்துச் செல்லுங்கள். அதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் விரைந்து நடைபெறுகின்றன.

**அனைவரும் :** அப்படியே. எனினும் தங்களை விட்டுப் பிரிய மனம் இல்லாதவராகின்றோம். தங்கள் தித்திக்கும் மணி வார்த்தையைக் கேட்க முடியாமல் போகுமே எனக் கவல்கின்றோம்.

**மாணி :** இருக்கலாம். எனினும் உங்களுக்கென்று கடமைகள் உள்ளன, குடும்ப வாழ்க்கை நிலை உள்ளது. உலகம் உங்களைப் போன்ற நல்லவர்களால்தான் ஓங்கவேண்டும். நானும் உங்கள் மத்தியிலேதான் இந்த நாட்டில் உழலப்

போகிறேன். கவலை வேண்டாம். சென்று பணிகளைக் கவனியுங்கள்.

(அனைவரும் செல்ல, வாயிற் காவலன் உள்ளே வருகிறான்.)

**காவல்:** அமைச்சர் பெரும! பாண்டி மன்னன் அனுப்பிய தூதன் வாயிலில் வந்துள்ளான். ஓலை கொண்டு வந்துள்ளான்.

**மாணி:** வரச் சொல். அப்படியே நம் முதற் பணியாளரையும் ஓலை வாசிப்போனையும் வரச்சொல்.

**காவல்:** அப்படியே!

(அவன் செல்லத் தூதன் வருகிறான்.)

**தூது:** அமைச்சர் பெருமானே! அடியேன் வணக்கம்.

**மாணி:** வருக! வருக!

**தூது:** ஏழ்பிறப்படியேம்! வாழ்க நும் அமைச்சு! அண்ணலே! தாங்கள் மதுரையை விட்டுப் பிரிந்தபின் நாங்கள் தாய் இழந்த கன்றெனத் தவிக்கின்றோம்! அன்று நாட்டில் எத்தனையோ கொடுமைகள் நடந்தனவாக வரலாற்றில் படிக்கின்றோம்.

**மாணி:** ஆமாம்! ஆனால் இன்று அதற்கென்ன?

**தூது:** இன்று—ஆம்! இன்றும்—அந்தக் கொடுமை மங்கவில்லை. அக் கொடுமை ஏற்ற தூதுவனாக நான் அமைந்ததை எண்ணி வருந்துகிறேன்.

**மாணி:** ஐயா! ஏன் கவலைப்படுகிறீர்? வந்த தூதின் பொருள் என்ன? ஓலை கொண்டு வந்திருக்கிறீர்களாமே. அதைத் தாருங்கள்.

(தூதுவன் ஓலை நீட்ட, முதற் பணியாளரும் ஓலை வாசிப்போனும் உள்ளே வருகின்றனர்.)

வாருங்கள்! வாருங்கள்! இதோ பாண்டி மன்னரிடத்து இருந்து ஓலை வந்துள்ளது.

(வாங்கி ஓலை வாசிப்போனிடம் தருகிறார். இருவரும் உட்காருகின்றனர்.)

ஓலையைப் பிரித்து வாசியும்.

**ஓலை வாசி :** ஐயா! வணக்கம். தங்கள் ஆணைப்படி ஓலையை வாசிக்கிறேன்.

(ஓலைக் கட்டை அவிழ்த்துப் படிக்கிறான்.)

"வாதவூரராகியமுதல் அமைச்சராக இருந்தவருக்குப் பாண்டி மன்னன் விடுக்கும் ஓலை. நீர் நமது பண்டாரத்திலிருந்து உமது விருப்பப்படியே வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு குதிரை வாங்கப் பெருந்துறைக்குப் புறப்பட்டீர். எமது உத்தரவு மிக விரைவில் குதிரைகளை வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்பது. நமது நாட்டு நிலையையும், சுற்றியுள்ள பெருமன்னரும் நம் கீழ் உள்ள சிறு மன்னரும் எப்போது நம்மை ஆழ்த்தலாம் எனத் திட்டமிடுவதையும் என்னிலும் நீர் நன்கு அறிவீர். குதிரை இல்லாத குறையை ஒற்றர்வழி மற்றவர் அறியுமுன், நமது கொட்டில்கள் நிரம்ப வேண்டும் என்பதையும் நீரே எமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறீர். நீர் எவ்வளவு பொருள்கொண்டு சென்றீர் என்பதும் எனக்குத் தெரியாது. நான் உம்மை முற்றவும் நம்பினேன் என்பதையும் நீர் அறிவீர். இருந்தும், நீர் இப்போது செய்யும் செயல் சற்றும் சரியானதாகத் தெரியவில்லை. நீர் சென்று எத்தனையோ நாட்களாயின. குதிரையைப் பற்றிய தகவல் ஒன்றுமே இல்லை. நீரோ நாட்டையும் கடமையும் மறந்து ஏதோ வேறு வேலையில் உள்ளதாக ஒற்றர் மூலம் அறிகிறேன். எமது பண்டாரத்தே இருந்து எடுத்துச் சென்ற பொருளை எம் உத்தரவு இல்லாமலே வேறு வேலைக்குப் பயன்படுத்துகின்றீர் என்பதையும் அறிவேன். இந்த ஓலையைக் கண்டவுடன் குதிரைகளுடன் இன்னும் பதினைந்து நாட்களுக்குள் இங்கு வந்து சேர வேண்டும். இது என் ஆணை. பாண்டி மன்னன் ஆணையை மீறியவர் யாரும் வாழ்ந்ததில்லை என்பதை நீர் நன்கு உணர்வீர்! எனவே பதினைந்து நாட்களுக்குள் இங்கே உம்மைக் குதிரைகளுடன் எதிர்பார்க்கிறேன். அப்படி

வரவில்லையானால் உம்மைக் கைது செய்வதோடு—சிறையிலிடுவதோடு—வேறு தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க நேரிடும் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இடைக்கால ஏற்பாடாக உம்மை மூன்றுண்டுகளுக்கு அமைச்சர் பதவியிலிருந்து விலக்கி வைத்திருக்கிறேன் என்பதையும் உணரவும். உடன் பதில். பாண்டி மன்னன் உத்தரவுப்படி—முதல் அமைச்சன்—பெருஞ்சாத்தன்.

(தூதுவனும் முதற்பணியாளரும் கண்ணீர் விடுகின்றனர். ஓலைவாசிப்போன் வெம்புகின்றான்.)

**மாணி :** ஏன்? இதற்காக நீங்கள் வெம்பவேண்டாம். ஆட்கொண்ட ஆண்டவன் தன் அடியவரை மேலும் மேலும் சோதனை செய்வான் போலும். அவன் நம்மை ஆட்டுவிப்பதைப் போலன்றோ நாம் ஆடவேண்டும்? ஆமாம்—இந்தப் பெருஞ்சாத்தர் வசமன்றோ நம் பாண்டியன் பொருளை அனுப்பி வைத்தோம். இன்று அவரே கையொப்பமிட்டு இதை அனுப்பியுள்ளாரே!

**முதற்பணி :** அண்ணலே! அன்றே நான் ஐயங்கொண்டேன். அவரும் பழநிக்கொற்றரும் இங்கே வரத் தேவையில்லாத போது வந்து அப் பொருளைப் பெற்றுச் சென்றார்கள். அதற்கெனத் தாங்கள் யாதொரு கைச்சாத்தும் பெறுமலும் கொடுத்து விட்டீர்கள். நாங்கள் இடையிடுவது தவறு என இருந்துவிட்டோம். அவர்கள் முன்னமே தங்கள் புகழ்கண்டு பொறாமை கொண்டிருந்தனர். தங்கள் தலைமை அமைச்சர் பதவியை ஏற்றபிறகு அவர்கள் வஞ்சனைச் செயல்கள் ஒன்றும் பலிக்கவில்லை எனக் காலம் பார்த்திருந்தார்கள்—பழிதீர்த்துக் கொண்டார்கள்.

**மாணி :** பணியாளரே! பொறுங்கள். அவரை நாம் பழிக்க வேண்டாம். ஆம். நான் கடமையில் தவறியவன்தான்

குதிரையில்லையாயின் நானே அன்றே அதைப் பண்டாரத்தில் சேர்த்து அரசனுக்கும் அறிவித்திருக்க வேண்டும். தவறு என்னுடையதே. இடையில் சிலர் அதைத் தமக்கு வேண்டியவாறு பயன்படுத்திக்கொண் டிருக்கலாம். ஆனால், அவர்களை நாம் குற்றம் சொல்ல முடியுமா? இந்நிலையில் நாம் செய்ய வேண்டுவது எப்படி யும் குதிரைகளைச் சேர்க்க வேண்டியதே.

**முதற்பணி :** ஏன்? நாம் உரிய பொருளை அனுப்பி விட்டோமே.

**மாணி :** ஆமாம்! அதை எப்படி நிரூபிக்க முடியும்? ஆண்டவன் அறிவார். ஆனால்—அரசர் எப்படி அறிவார்? அவர் இந்த ஓலை அனுப்பியதில் தவறு இல்லையே!

**முதற்பணி :** எல்லாம் இந்த பெருஞ்சாத்தனும் தங்களூர்ப் பழநிக் கொற்றனும் செய்யும் வேலை என்பதை இன்று நாடே அறியும். தாங்கள் அரசரிடம் நேரில் சென்று எல்லாவற்றையும் சொன்னால், அவர் நிச்சயம் நம்புவ தோடு, அவர்களை நாட்டைவிட்டே வெளியேற்றி விடுவார்.

**மாணி :** வேண்டாம். அந்த எண்ணமே வேண்டாம், அவர்கள் வாழட்டும். தாம் வளர்த்ததோர் நச்சு மாமரமாயினும் கொல்லார். நம்மொடு வாழ்ந்து வந்தவர்களை நாமே அழிப்பதா? வேண்டாம்.

**முதற்பணி :** பழநிக் கொற்றன்—ஏன் பெருஞ்சாத்தரும்கூடத் தான் ஒவ்வொரு நிலையிலும் தங்கள் உதவியால் எப்படி உயர்ந்துள்ளார்கள்.

**மாணி :** ஆம்! அதனால்தான் சொல்லுகிறேன். அவர்களை நாம் காட்டிக்கொடுக்கக் கூடாது என்று. மேலும் நமை யெல்லாம் இயக்கும் ஆண்டவன் அறிவான். இந்தச் செய லுக்கு உரிய பயனை அவனிடம் வேண்டுவதல்லது நாம் என்ன செய்ய வல்லோம்!

**முதற்பணி :** நல்லது; தங்கள் நன்மனம் சிறப்பதாக! தூது வனுக்கு என்ன பதில் சொல்லி அனுப்புவது?

**மாணி :** பொறும்! நாளை பதில் அனுப்புவோம்—நாம் அனுப்புவதாவது—ஆண்டவன் பதில் தருவான்.

(தூதுவரை நோக்கி)

தூதுவரே! நமது சாலையுள் இரும். நாளைக் காலையில் பதிலுடன் செல்லலாம்

(தூதுவன் செல்ல, காவலன் வருகிறான்.)

**காவலன் :** அமைச்சர் பெரும! செல்வி வஞ்சுளம் தங்களை அவசரமாகக் காணவந்திருக்கிறார்.

**முதற்பணி :** என்ன? அவர் ஏன் இங்கு வந்தார்?

**மாணி :** பொறுங்கள்; அவரை வரவிடுங்கள். எல்லாம் ஆண்டவன் செயல். அவர்கள் எதற்காக வந்தார்கள் என்பதையும் காண்போம். (காவலாளரிடம்) அவரை வரச்சொல்.

(வஞ்சுளம் உள்ளே வர)

அன்னையே வாருங்கள். அமருங்கள். மதுரையிலிருந்து இப்போதுதான் வருகின்றீர்களோ?

**வஞ்சு :** பெரும! ஆம். இப்போது அங்கிருந்தே விரைந்து வந்து கொண்டிருக்கிறேன். அமைச்சர் பெருஞ்சாத்தர் தங்களிடம் தனிமையில் சில சொல்ல என்னைப் பணித்தார்கள். அதற்குத் தக்கவர் வேறு யாருமின்மையின் பாதுகாவலோடு என்னை அனுப்பி வைத்தார்கள்.

**மாணி :** அப்படியா! நல்லது. என்ன சொல்லப் பணித்தார்கள்?

**வஞ்சு :** சொல்லுகிறேன் அண்ணால், ஆனால்—அவர்கள் எல்லாவற்றையும் தங்களிடம் தனிமையில் சொல்லச் சொன்னார்கள். இவர்கள்......

**மாணி :** இவர்கள் நம்மவர்களே—தாராளமாகச் சொல்லலாம்.

**வஞ்சு :** இல்லை. அவர் ஆணை தனிமையில் சொல்லவேண்டும் என்பதே.

மாணி : அப்படியா! அதுவும் ஆண்டவன் செயலே! ஐய! தாங்கள் இருவரும் சென்று வாருங்கள். பிறகு காணலாம்.

இருவரும் : அப்படியே.

(முதற் பணியாளரும் ஓலை வாசிப்போரும் செல்கின்றனர். வஞ்சுளம் கண்ணீர் வடிக்கின்றாள்.)

மாணி : அன்னையீர்! ஏன் அழுகின்றீர்கள்? சொல்லவேண்டியதைச் சொல்லலாமே!

வஞ்சு : பெரும! தங்கள் கோலத்தைக் கண்டு கண்ணீர் வடிக்காமல் என்ன செய்வது? அமைச்சர் கோலத்தில் தங்கள் அழகார் திருவுருவம் கண்டு கண்டு மகிழ்ந்த அதே இந்தக் கண்களால்—இவ்வாண்டிக் கோலத்தைக் காண வேண்டுமா? அதோடு இக் கண்களை இழந்துவிடலாமே!

மாணி : அன்னாய்! அதுபற்றி எண்ணவேண்டா. அது என் சொந்தப் பொறுப்பல்லவா. தாங்கள் வந்தது பற்றி ஒன்றும் சொல்லவில்லையே.

வஞ்சு : அண்ணால்! அதற்குமுன் எனக்கு ஓர் ஆசை; தாங்கள் தளர்ந்து இருப்பதாக அறிகிறேன். முதலில் தங்கள் உள்ளத்தின் சோர்வு போக்க என் ஆடலைக் காட்டிப் பின் வந்தது பற்றிப் பேசலாம் என இருக்கின்றேன்.

மாணி : அம்மே! வேண்டாம். அவையெல்லாம் இனி அதோ அந்த அழகார் கோயிலில் அமர்ந்துள்ள ஆண்டவன்முன் நடைபெறட்டும். நான் அதையெல்லாம் கண்டு என்ன செய்யப்போகிறேன்.

வஞ்சு : ஆ! அரசவையில் நான் பரதநாட்டியம் ஆடும் போது தாங்கள் பாராட்டுவீர்களே. தாங்களா அதை வேண்டாம் என்கிறீர்கள்.

மாணி : இல்லை. நான் கலையை வேண்டாமென்பேனா? கலை வாழ்வோடு பின்னியதன்றோ! ஆனால் நீங்கள் இதுவரை

அரச சபையில் ஆடி ஆடி அலுத்தது போதும். இனி அரசர்க்கரசனான அந்த ஆண்டவன் முன் உங்கள் கலை சிறக்கவேண்டும் என்பதே என் எண்ணம். ஆம்! எல்லாம் அவனுக்காகவன்றோ?

**வஞ்சு :** அப்படியா! நல்லது! அதுவே சரியெனக் கொள்வேன். நான் மட்டுமன்று! வழிவழியாக வரும் என் மரபினர் அனைவரையுமே ஆண்டவனுக்குப் பணிவிடை செய்து, அவர் முன் அழகார் கலை நலம் காட்டி மகிழுமாறு வழிகாட்டுவேன்.

**மாணி :** ஆம்! அதற்கெனவே இனி அமைக்கப்பெறும் இது போன்ற பெருங்கோயில்களில் கலைக்கூடங்கள் பல இடம் பெறும். ஆனால் ஒன்று.

**வஞ்சு :** என்ன பெருமானே?

**மாணி :** உங்கள் கலையும் ஆடலும் பாடலும் அனைத்தும் தெய்வ சம்பந்தமுடையதாக—கடவுள் மணம் கமழ்வதாக இருந்தால் மட்டுமே அவை அனைத்தும் திருக்கோயில்கள்—தமிழ் நாட்டுத் தெய்வ சந்நிதானங்களில் வாழும். ஆனால் அவை அனைத்தும் மக்கள் களிப்புக்காகவோ—காம இச்சையை வளர்ப்பதற்காகவோ, வேறு கொடுமைகளுக்காகவோ பயன்படத் தொடங்குமானால், அன்றே அவை தமிழ் நாட்டுக் கோயில்களிலிருந்து விடுதலை பெற்றுவிடும். தமிழ் மக்கள் தெய்வ நலமும் பண்பாடும் உடையவர்கள். தெய்வ நலம் சான்ற கலைகள் காமக் களஞ்சியங்களாக மாறுமேயாயின், அன்றே அவை கோயில்களிலிருந்து தள்ளப்படும். இந்த உண்மையை மனத்தில் வைத்து உங்கள் தொண்டினைத் தொடங்குங்கள். ஆமாம், தாங்கள் பெருஞ்சாத்தன் சொல்லி அனுப்பியதை இன்னும் சொல்லவில்லையே

**வஞ்சு :** இதோ! (வருந்துவதுபோல் காட்டி) ஐய, தாங்கள் அவர் மூலம் அனுப்பிய பொருள்கள் அனைத்தையும்

அரசரது பண்டாரத்தே அவர் சேர்த்துவிட்டாராம். எனினும் அரசர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துத் தங்கள் மேல் நடவடிக்கை எடுத்துவிட்டாராம். பெருஞ் சாத்தர் எவ்வளவோ தடுத்தும் கேளாது எப்படியும் தங்களை உடனே வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று முடிவு செய்துவிட்டாராம். தாங்களேகூட வேலை யிலிருந்து விடுதலைபெற விரும்பினீர்களென அங்குள்ள மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். அதன் விளைவோ இது என்று காட்டி அவர் ஐயப்படுகிறார். என்றாலும் உங்களை நேரில் கண்டு எல்லாவற்றையும் அறிந்துவரச் சொன்னார். அவரைத் தாங்கள் தவறாகப் புரிந்துகொள்ளா திருக்கக் கேட்டுக் கொண்டார்.

**மாணி :** இதில் என்ன இருக்கிறது? அவரை ஏன் நாம் தவறாகப் புரிந்துகொள்ளவேண்டும்? ஆண்டவன் தன் அடியவருக்கு நல்லதை அன்றி, வேறு எதைச் செய்வான் என நினைக்கிறீர்கள். இதோ வானோங்கி வளரும் திருக் கோயில் பணியே என் வாழ்நாள் பணி. அதை எண்ணி யே மன்னனுக்கு என்னை விடுவிக்க ஓலை அனுப்பினேன். அது சேர்ந்தாலும்—சேரவில்லை என்றாலும் கவலையில்லை. அவரே எனக்கு விடுதலை அளிக்கிறாரே அது சிறந்ததல்ல வா! வேறு எதற்குத்தான் நான் ஏன் அஞ்சவேண்டும்? தாங்கள் நான் புறத்தில் மட்டும் மாறிவிட்டேன் என்றல்லவா கூறினீர்கள்? இல்லை. நான் அகத்திலும் மாறிவிட்டேன். எப்படி?

'நான்யார் என்உள்ளமார் ஞானங்களார
என்னை யாரறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்'

ஆம்! ஆண்டான்; நான் அறிவு வரப்பெற்றேன். இனி எனக்கு நல்லது கெட்டது என்று வேறுபாடு இல்லை. எது வரினும் வரட்டும். ஆமாம்—தாங்கள் வேறு என்ன சொல்லவேண்டும்.

வஞ்சு : இல்லை......(சற்று மெதுவாக) தாங்கள் கோயில் கட்டும் பணம் அரசருடையதுதான் என்று ஒத்துக் கொண்டீர்களானால், இப்போது அவர் மற்ற அனைத்தையும் சரிசெய்து, இப்போது அரசன் அனுப்பிய ஓலையையும் வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். அவருக்குத் தெரியும் இச் செல்வமனைத்தும் தங்களுடையதென்று. ஆனாலும், உலகத்தாரும் அரசனும் நம்ப மறுக்கின்றனரே; அதற்காகவே இந்த ஏற்பாடு. ஆண்டவன் பணியானதால் அரசரும் ஒன்றும் சொல்லமாட்டார்.

மாணி : கவலைப்படாதே. உன் உள்ளம் எனக்குப் புரிகின்றது. நான் பெருஞ்சாத்தனை என்றும் காட்டிக் கொடுக்கமாட்டேன். ஒருவேளை இந்த நிகழ்ச்சிதான் என் வாழ்வையே மாற்றப்போகும் பெரு நிகழ்ச்சியாகலாம். ஆகவே, நல்ல அருள் நெறிக்குச் செல்லும் இந்தப் பாதைக்கு வழிகோலிய பெருஞ்சாத்தனை என்றும் அரசனிடம் காட்டிக்கொடுக்க மாட்டேன். கவலைப் படாதே.

வஞ்சு : ஆமாம்! அந்தப் பழநிக்கொற்றன்—ஊர் ஊராய்த் திரிந்துவந்த அவனை, வலிய அழைத்து உயர்ந்த பதவிக்குக் கொண்டு வந்தீர்கள்.

மாணி : அன்னாய்! நீ சொல்லப் போவதும் தெரியும். அவனையும் நான் காட்டிக்கொடுக்க மாட்டேன். நான் யார் அவர்களைச் சுட்டுவதற்கு? அவர்கள் தவறு செய்தவர்களே அல்லர். அவர்களை மன்னிக்கும்படி ஆண்டவனிடம் வேண்டுவேன். ஆண்டன் நிச்சயம் அடியவர் வேண்டுகோளை நிறைவேற்றுவான். நீ எதற்கும் கவலைப் படாதே. உங்கள் ஒருவருக்கும் ஒரு தீங்கும் நான் நினைக்கமாட்டேன். என்னைக் காப்பதோ கைதூக் கிவிடுவதோ ஆண்டவன் பொறுப்பு. ஆகவே நீ சென்று வா.

வஞ்சு : அண்ணலே! அப்படியே. அடியேன் சென்று வருகின்றேன். (செல்கிறாள்)

மாணிக்கவாசகர் இறைவன் திருமுன் : (வீட்டு வழிபாட்டுக் கூடம்.)

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே

ஆண்டவனே! செயல்வகை அறியேன். பாண்டியன் பொருளோ திரும்பிவிட்டது. எனது பொருளாலே கோயில் கட்டுகிறேன். குதிரைகளோ வந்து சேரவில்லை. வந்தாலும் வாங்கப் பணமில்லை. ஆயினும் இவற்றுக்கிடையிலே உன் திருக்கோயில் பணி முடிந்து சிறந்தது கண்டு ஆறுதல் பெறுகின்றேன். இனி, பாண்டியனுக்கு என்ன சொல்லுவது? பொருளைப் பெருஞ்சாத்தனிடம் கொடுத்து விடுத்தேன் என்று சொல்லுவதுதான் பொருந்துமா? அதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? அப்படியே இருந்தாலும் அவனைக் காட்டிக் கொடுப்பதா? அவன் ஏன் வீணாகத் தொல்லையுற வேண்டும்? பாவம்! அவன் வஞ்சகம் உலகறிந்த ஒன்று என்றாலும் அவனை நான் காட்டிக் கொடுக்கவேண்டாம். ஆம்! வரும் துன்பத்தை நானே ஏற்றுக்கொள்ளுகிறேன். துன்பம்

வரட்டும்; நல்லதுக்காக எத்தனை துன்பத்தையும் ஏற்றுக் கொள்வேன். ஆனால்—இறைவனே! உன் பொருட்டால் —உன் திருப்பணி செய்வதற்கு நான் பிழைபட்டேன் என்பதை நோக்கத்தான் நான் அஞ்சுகிறேன். உனக் காக நான் பழியை ஏற்றுக்கொள்ளத் தயார்தான்— ஆனால் உலகம் உள்ளளவும் உன் பெருமையும் உண்மை யும் மறைந்தால்— சீ! என்ன எண்ணம்? எப்படி மறை யும்? ஆண்டவன் இருக்கும்போது நெஞ்சே நீ வீண் எண்ணங்களை எண்ணி நையலாமா?

'வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே'

ஆம்! நெஞ்சே அஞ்சாதே! இதோ ஆண்டவன் உள் ளான். அவன் வழிகாட்டுவான், அன்றிக் காட்டாது ஆழ்த்தினாலும் அதிலும் நாம் மகிழ்ச்சி காணவேண்டும்.

யாண்டும் நீக்கமற நின்ற இறைவனே! இனி என் செயலாவது யாதொன்றுமில்லை; இதோ பாடுகிடக் கிறேன். பாண்டியன் தூதன் வாயிலில் உள்ளான். அவனுக்கு என்ன சொல்லுவது? என்ன செய்வது? எந் தாய்! எந்தாய் எந்தாய்!

**அசரீரி :** அன்பனே! அஞ்சாதே. உடனே தூதுவன் மூலம் ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்று ஓலை அனுப்பிவிடு. நீயும் உன் கோயிற்பணியை நிறைவேற்றி விட்டாய். ஆகவே உடனே புறப்பட்டுச் செல். அவனிடம் நேரிலும் சொல்லிவிடு. எப்படியும் ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும்.

**மாணி :** ஆகா! என்னே அற்புதம்! இறைவனே! உன் கருணையே கருணை!

'கேட்டாயோ தோழீ கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண்
அம்மானாய்!

இறைவனே! உன் கருணையே கருணை! யாருக்கும் யாதொரு தீங்கும் வராமல் வலிய ஆட்கொண்ட வள்ளால்! கொண்ட செயல் நன்று நன்று! அண்ணல்! உன் அருட்டிறம் வாழ்க! இதோ உன் அருட்பணியின் படியே ஓலை அனுப்புகிறேன். ஆயினும் அந்தோ! எப்படி உன்னையும் குருந்த நிழலையும் இக்கோயிலையும் விட்டுப் பிரிவேன்! அதுவே என்னை வருத்துகின்றது. ஆம். எப்படியும் உன் ஆணைவழி சென்று கடமையை முடித்து நிலையாக வந்து உன் ஏவல் கேட்பேன். எந்தாய்; எந்தாய்; ஆம். வெளியே பணியாளரும் பிறரும் உள்ளனர். உடனே ஓலை அனுப்புவேன். (வெளியே வருகிறார். முதற் பணியாளர், ஓலைநாயகம், செயலாளர் ஆகியோர் இருக்கின்றனர்.)

பணியாளரே! உடனே பாண்டிய மன்னருக்கு ஓலை போக்கிவிடும். குதிரைகள் ஆவணி மூலத்தன்று மதுரை வந்து சேரத்தக்க எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. அன்று குதிரைக்கு உரியவர்களே குதிரைகளைக் கொண்டு வருவார்கள் என்பதையும் விளக்கிவிடுங்கள். எனவே நமக்கும் இங்கு வேலை இல்லை. நாமும் உடனே புறப்பட்டு மதுரைக்கு வருகிறோம் என்பதையும் அதிலே தீட்டிவிடுங்கள்

(அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கின்றனர்.)

என்ன எண்ணுகிறீர்கள்? ஆம்! இந்த முடிவு சரி தான். மாற்ற முடியாதது. உடனே மதுரைக்குச் செல்ல ஏற்பாடும் செய்துவிடுங்கள். அனைத்தும் விரைவில் நடைபெறவேண்டும். செல்லுங்கள்.

(அனைவரும் செல்கின்றனர்.)

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேஇவை வந்துபோம்
கால மேஉனை என்றுகொல் காண்பதே!

(மதுரையில் பெருஞ்சாத்தனும் வஞ்சுளமும்)

வஞ்சு : அத்தான்! அந்தப் பாவி வாதவூரன் மரக்கட்டை ஆகிவிட்டான் அத்தான். நான் வெறும் பரதத்தைக் காணுடா என்று பலமுறை வற்புறுத்தியுங்கூட அவன் மறுத்துவிட்டானே. அத்துடன் இவற்றையெல்லாம் கோயில்களில் வளர்க்க வேண்டுமாம். நானும் 'எப்படி யாவது அவனை நம் கருத்துக்கு இழுப்பதற்காகச் 'சரி' என்றேன். அவன் சொல்படி இனி என்றும் கோயிலில் பரதக்கலை வளர்ப்பதாக ஒப்புக் கொண்டேன். என்று லும், அவன் இப் பொருளைத் திருப்பி அனுப்பவில்லை என ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறனே! என்ன செய்வது?

பெருஞ் : விடு கவலையை! அவன் கிடக்கிறன் மடப்பயல். இந் நேரம் அவன் சிறைச்சாலையில் இருப்பான். என்னை —இந்தப் பெருஞ்சாத்தனை எதிர்ப்பவன் எவன் வாழ்வான்?

வஞ்சு : என்ன சொல்லுகிறீர்கள்?

பெருஞ் : சொல்லுவதாவது. அந்தப் பயல் பெருந்துறையி லிருந்து வருவதற்கும், சோழன் படையெடுப்பதாகச் சொல்லி அனுப்பியதற்கும் எவ்வளவு பொருத்தம் தெரியுமா? அவன் வந்து, குதிரைகள் என்றே—ஆவணி மூலமாமே—அன்று வருவதாகச் சொன்னன். ஆனல், அதற்கு முன்பே சோழன் படையெடுப்பைப் பற்றிய செய்தி பாண்டியனுக்கு எட்டும்படி செய்துவிட்டேன்.

வஞ்சு : என்ன அத்தான்? சோழன் படையெடுப்பா?

பெருஞ் : கவலைப்படாதே! அதுவும் இந்தப் பெருஞ்சாத்தன் வேலைதான். ஒற்றன் ஒருவனைச் சரிப்படுத்தி, நான் அரசனுடன் இருக்கும் சமயத்தில் வந்து இச் செய்தியை சோழ நாட்டிலிருந்து வந்ததாகச் சொல்லச் சொன்னேன்.

வஞ்சு : ஐயோ! அத்தான் ஒற்றர் அப்படிச் செய்வார்களா?

பெருஞ் : பயித்தியக்காரி. இன்று நீ வள்ளுவர் காலத்தில் இருப்பதாக நினைப்போ? அதுபோய் எத்தனையோ நூற்றுண்டுகள் ஆகிவிட்டன. மற்றும் பணம் என்ருல் யார்தான் வாய்திறக்க மாட்டார்கள். இங்கே சில கையாலாகாத பேர்கள்தாம் சத்தியம், தருமம், நீதி என்றெல்லாம் வீணே பேசிக் காலம் கழிக்கிருர்கள். இந்தப் பெருஞ்சாத்தனுக்குக் காரியம் ஒன்றே குறி.

வஞ்சு : உங்கள் வீண் பெருமை இருக்கட்டும். பிறகு என்ன நடந்தது? அதைச் சொல்லுங்கள்.

பெருஞ் : 'சோழன் படையெடுக்க நினைப்பதற்கு நம் நாட்டில் குதிரைகள் இல்லாமையே காரணம் என்று காட்டினேன். அதற்குக் காரணம் அப் பாவிப் பயல் வாதவூரன் என விளக்கினேன். எப்படியோ என் சொல்லில் மயங்கிய மன்னவன் அவற்றை அப்படியே எடுத்துக்கொண்டு அவன் வந்தால் தண்டிக்க வேண்டுமென்ருன். நான் 'தண்டனையைப் பிறகு பார்த்துக் கொள்வோம். முதலில் சிறை செய்யவேண்டும்' என்றேன். அதற்கும் சரி என்ருன். பாவம்! அவன் பொல்லாத வேளை, வாதவூரன் அந்நேரத்திற்குத்தான வரவேண்டும்?

வஞ்சு : எவன் பொல்லாத வேளை!—பாண்டியனின் பொல்லாத வேளையா!

பெருஞ் : ஏது? குறுக்குக் கேள்வி பலமாக இருக்கிறதே. இனி அந்தப் பண்டாரப் பயலுக்குத்தான் பொல்லாத

வேளை—நமக்கெல்லாம் நேர்மாறு. அரசனும் நம் வழிக்கு வந்து விட்டானே.

வஞ்சு : சரி சரி!—மேலே,

பெருஞ் : என்ன கதையா கேட்கிறாய்? சரி, சொல்லுகிறேன். அவன் வந்து, ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும் என்றுதான் சொன்னான். முன் அனுப்பிய ஓலைகள் பற்றியெல்லாம் பேசினான். அரசன் திடீரென அவன் முகத்தைக் கண்டதும் சற்றுக் கலக்கமடைந்தான். அவன் முகத்தில் என்ன இருக்கிறதோ? திடீரென்று மாறி விடுவானோ என்றுகூட நினைத்தேன்.

வஞ்சு : அதுதான் முகராசி என்பது. என் முகத்தைக் கண்டதும் நீங்கள் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிட வில்லையா?

பெருஞ் : உன் வேடிக்கையிருக்கட்டும். அப்போது என் மனம் எப்படித் துடித்தது தெரியுமா! அரசனுக்குப் பலவற்றை மறைமுகமாகச் சுட்டிக் காட்டினேன். எப்படியோ முடிவில் அவனைச் சிறையிலிடுமாறு காவலாளிகளை அழைத்து உத்தரவிட்டான். 'அப்பாடி' என்று பெருமூச்சு விட்டேன்.

வஞ்சு : ஐயோ பாவம் அத்தான்! அவர் உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி, உறுதியாகவும் அச் சொல்லைக் காப்பாற்றினாரே!

பெருஞ் : யாரடி இவள்? அதையெல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமோ? அது கிடக்கட்டும். அந்தச் சிறைத்தண்டனையைச் சொல்லும்போது அவன் எப்படி இருந்தான் தெரியுமா?

வஞ்சு : மிகவும் வாட்டமாக இருந்தான் என்று சொல்லப் போகிறீர்கள்.

பெருஞ் : அதுதான் இல்லை. அவன் முகம் உண்மையிலேயே மலர்ந்திருந்தது. அவன் பேச ஆரம்பித்து விட்டான். அவனுக்குத் துன்பந்தான் வேண்டுமாம். இன்பத்திலே தன்னை மறந்து மற்றவர்களுக்குத் துன்பம் இழைத்து விடத்தோன்றுமாம்.

வஞ்சு : என் ராஜாவைப் போல (திருஷ்டி கழிக்கிறாள்) அல்லவா?

பெருஞ் : உன் கிண்டலைப் பிறகு வைத்துக் கொள். நல்ல வேளை அவன் சொல்வதையெல்லாம் கேட்க அரசன் இல்லாமல் எழுந்து போய் விட்டான். சிறைக் காவல் இட்டதும் அவனை மெல்ல அனுப்பிவிட்டேன். இப் பயித்தியம் காவலருக்கு இடையில் கண்ணை மூடிக் கொண்டு ஏதேதோ பிதற்றிற்று. இன்பத்தில் அச்சம் கொள்ளுமாம்.—துன்பத்தை வரவேற்குமாம்; அப்போது தான் ஆண்டவனை நினைக்கவேண்டுமாம். அப்போது ஒரு பாட்டுக்கூடப் பாடிற்று. அதை உனக்குக் காட்ட அப் படியே படியெடுத்து வரச் சொல்லியிருக்கிறேன். பழநிக் கொற்றன் கொண்டு வருவான். உண்மையிலேயே அந்த வேளையில் என் மனம்கூட மாறும் போலிருந்தது. —எனினும், கல்லாக்கிக் கொண்டேன். அவன் எதுபற்றி யும் கவலையுறாது கண்மூடிப் பாடிக்கொண்டே அக் காவலருடன் சிறைச்சாலைக்குச் செல்லும்போதுதான் எப்படி இருந்தது தெரியுமா?—அதோ பழநிக் கொற்றன் வந்துவிட்டான். அவனிடம் அந்தப் பாட்டு இருக்கும்— வாங்கி நீ பாடு பார்க்கலாம். (பழநிக் கொற்றன் வர) கொற்ற! அந்தப் பாட்டைக் கொண்டு வந்தாயா?

பழநி : ஓ! இதோ! (நீட்டுகிறான்.)

பெருஞ் : வஞ்சுளத்திடம் கொடு—அவள் பாடட்டும்.

பழநி : பாடலாம்; இருந்தாலும் அவரைப்போல் உருக்க மாகப் பாடமுடியுமா?

**வஞ்சு :** ஓய்! என்ன அதிகம் பேச ஆரம்பித்து விட்டீர்? தங்கையை மறந்து விட்டீரா?

**பழநி :** இல்லை இல்லை? அவர் பாடியது அத்தனை உருக்க மாக இருந்தது என்றேன். அவர் என்னமோ தம் உள்ளத் தைப் பெண்ணாக்கிக்கொண்டு, ஆண்டவனைத் தலைவனாக் கிப் பாடுகிறாராம். ஆகவே அவர் பாட்டில் இனிமை தவழ்கிறது என்று அனைவரும் சொல்லுகிறார்கள். அதைத்தான் நான் இங்கே சொன்னேன். தவறாயின் மன்னியுங்கள். இதோ பாட்டு.

(வஞ்சுளம் வாங்கிப் பாடுகிறாள்.)

அளித்து வந்தெனக் காவவென் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா!
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே'

**பழநி :** பேஷ்! பேஷ்! மிக நன்றாக இருக்கிறது.

**பெருஞ் :** ஓய்! போற்றுவது இருக்கட்டும். மேலே நான் சொன்னதைக் கவனியும்.

**பழநி :** அப்படியே; வருகிறேன்.

**பாண்டியன் :** *(தனிமொழி) என்ன கொடுமை செய்துவிட்டேன் வாதவூரருக்கு? ஆகா! எத்தனை அழகான குதிரைகள்! இதுவரையில் நான் இவைபோன்றவற்றைப் பார்த்ததே கிடையாதே. ஏன்? என் நாட்டில் வயதானவரும்கூட நிச்சயம் இவைபோன்ற குதிரைகளைப் பார்த்திருக்க முடியாதென முதுமை அமைச்சரே சொன்னரே. இந்த நிலை தெரியாது அவரைச் சிறைப்படுத்தி விட்டோமே! அவர் சொன்னபடி ஆவணிமூலம் வரையிலாவது எதிர் பார்த்திருக்கக் கூடாதா? எல்லாம் அந்தப் பாவி பெருஞ்சாத்தனல் வந்த வினை. என் செல்வமனைத்தையும் பாழாக்கிக் கோயில் கட்டிவிட்டதாக அல்லவா அவன் புகார் செய்தான். ஏன்? நம் ஒற்றர்கள்கூட அல்லவா அழகிய கோயில் உயரிய நிலையில் உருவாகி உள்ளதென்று சொன்னர்கள். அதுமட்டுமா? நம் மதுரை நகரத் தெருக்களில் உலவிவரும் ஒற்றர்கள் எங்கும் அந்தப் பெருந்துறைக் கோயிலைப்பற்றிய பேச்சாகவே இருப்பதைத்தானே கூறினர்கள். ஆகவே, கோயில் கட்டியதும் உண்மை; குதிரைகள் வந்ததும் உண்மை. ஆகவே இரண்டிற்கும் பொருளுக்கு என்ன செய்திருப்பார்? நமது பண்டாரத்தே தேவைக்கு மேலும் பொருள் எடுத்துச் சென்றிருப்பாரா? அப்படித்தான் பெருஞ்சாத்தர் சொன்னர். ஆனல், கணக்காளர் கணக்குப்படி, அவர் கணக்குக் கொடுத்ததற்கும், எடுத்துச் சென்றதற்கும் வேறுபாடு இல்லை என்கிறர். ஒருவேளை பெருந்துறையிலிருந்துவந்த ஒற்றர்கள் சொல்லியபடி கோயில் கட்டியது அனைத்தும் அவர் பொருளாகவே இருக்குமோ? ஏன் இருக்கக் கூடாது? ஆனல், இத்துணைப் பெருஞ்செல்வம் எப்படிச் சேர்ந்திருக்க முடியும்? ஆமாம். அங்கே மக்களும் கலைஞர்*

களும் தாமே விரும்பி வந்தன்றோ பணியாற்றுவதாகச் சென்னார்கள். ஆம்; வாதவூரர் குற்றமற்றவர். உடனே அவரை விடுதலை செய்யவேண்டும்.

யாரங்கே? (காவலர் வர)

சிறைக்கூட அதிகாரிகளிடம் நான் உடனே வாதவூரரை அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லுங்கள்.

**வாயில் :** அப்படியே.

(இருவர் வெளியே செல்லப் பெருஞ்சாத்தன் உள் புகுகிறான்.)

**பாண்டி :** வாரும்! பெருஞ்சாத்தனாரே! என்ன எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறது? நீர் சொன்னது என்ன? இப்போது நடந்தது என்ன? குதிரைகளே வாரா என்றீரே. வந்த குதிரைகளைப் பார்த்தீரல்லவா? அது மட்டுமன்று. அந்தக் குதிரைச் சேவகர்களின் தலைவன் எவ்வாறு கவலையில்லாது நாம் கொடுத்த பொருளையும் —ஆடை அணிகளையும் மிக அலட்சியமாக எடுத்துக் கொண்டான் பார்த்தீர்களா? குதிரையிலிருந்து அவன் இறங்கக்கூட இல்லையே.

**பெருஞ் :** ஆமாம் அண்ணல்! அவன் தோற்றத்திலேயே எனக்கு ஐயம் உண்டாகிறது! இதில் ஏதோ சூது நடந்திருக்கவேண்டும்.

**பாண்டி :** என்ன சூதினைக் கண்டுவிட்டீர்கள்? இனி உங்கள் பேரிலேதான் ஐயம் கொள்ளவேண்டியிருக்கும்.

**பெருஞ் :** ஐய! அப்படி ஒன்றுமில்லை. தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நான் ஒன்றுமறியேன்.

**பாண்டி :** இருக்கட்டும்; பொறுத்துப் பார்த்துக்கொள்வோம். ஆமாம். வாதவூரரை அழைத்து வரச் சென்றவர்கள் வந்து விட்டீர்களா?

**பெருஞ் :** என்ன! பெரும! இதற்குள் அவரை விடுதலை செய்யலாமா!

**பாண்டி :** ஏன்? நான் செய்த தவறு போதாதா? இன்னுமா அவரைச் சிறையிலடைத்து வைப்பது? அவரை உடன் விடுவித்து அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டாமா?

**பெருஞ் :** தலைவ! தாங்கள் அவ்வாறு செய்வது தவறு! தாங்கள் பெருமன்னர். நாங்கள் உங்கள் அடிமைகளே யன்றோ!

**பாண்டி :** இருக்கலாம். எப்படியாயினும் நான் செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டல்தானே முறை—தன் குறைக்கு உயிரையேவிட்ட பரம்பரையில் நான் தவறு செய்யலாமா? தவறு என்று அறிந்தும் வாளா இருக்கலாமா? இதோ வந்துவிடுவார். அது கிடக்கட்டும். அந்தக் குதிரைகளைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

**பெருஞ் :** நான் சொல்லுவதற்கு என்ன இருக்கின்றது? தங்கள் கருத்துத்தான் என் கருத்தும். குதிரைகள் மிக அழகாக இருக்கின்றன. அக் குதிரைச் சேவகன் தாங்கள் கூறியபடி கருவம் பிடித்தவனுகவே காண்கின்ருன். அவன் வந்த மிடுக்கும், சென்ற செலவும், தாங்கள் கொடுத்த மரியாதையை ஏற்றுக்கொண்ட வகையும், அம்மம்ம! சொல்ல முடியவில்லை. ஏன்? அவனைப் போலவே அவன் ஆட்களும்.

**பாண்டி :** அமைச்சரே! அது கிடக்கட்டும்! அவன் தோற்றத்தைக் கண்டீர்களா? பெரிய மன்னர் வீட்டு மகனைப் போன்ற கலைபொருந்திய முகத்தோடு அல்லவா தோன்றினுன்? அவன் எங்கும் கூடாரமிட்டுக்கூடத் தங்கவில்லையே! எங்கே சென்று விட்டிருப்பான்?

**பெருஞ் :** அரசே! நான் முதலில் சொன்னபடி அனைத்திலும் ஏதோ சூது நடந்திருக்கிறது. பொறுத்துப் பார்க்கலாம். கோயில் கட்டியது உண்மையா? குதிரைகள் வந்தது உண்மையா?

**பாண்டி :** என் வரையில் இரண்டும் உண்மையே—

(தூரத்தில் வாதவூரர் வர)

அதோ அவரே வந்து விட்டார். அனைத்தையும் கேட்டறியலாம்.

(வாதவூரர் வர, அவர் கையைப் பிடித்துக்கொண்டு) அமைச்சர் பெருமானே! அறியாது செய்த பிழையினை மன்னிக்கவேண்டும்.

**மாணி :** மன்னர் பெரும! தாங்கள் அவ்வாறு சொல்லலாமா? என்ன நடந்துவிட்டது? ஏன் இப்படி நடுங்குகிறீர்கள்?

**பாண்டி :** தாங்கள் ஒன்றும் அறியீர்களா? தாங்கள் கூறிய படியே ஆவணி மூலத்தன்று—இன்று—குதிரைகள் வந்து விட்டன. எவ்வளவு அழகாக இருந்தன தெரியுமா? நீங்களே சென்று அவற்றைப் பார்வையிட்டு வருகிறீர்களா?

**மாணி :** மன்னவர் பெரும! இருக்கட்டும்! ஆண்டவன் கருணையே கருணை. அரசே! தங்கள் அன்பும் பண்பும் என்னை என் சொற்படி நடக்க வைத்தன என நம்புகிறேன்.

**பாண்டி :** அமைச்சர் பெரும! என் பிழையைப் பொறுத்துத் தாங்கள் அமைச்சர் பதவியினை ஏற்றுக்கொண்டு சிறக்கச் செயலாற்ற வேண்டும்.

**மாணி :** அரசே! நான் என்றோ அப் பதவியை வேண்டாமென்று ஓலை விடுத்தேனே. அதுவும் தங்கள் கைக்கு வந்து சேரவில்லையா?

**பாண்டி :** அதுவும் என்றால்? வேறு ஏதாவது அனுப்பினீர்களா?

(பெருஞ்சாத்தன் முகத்தில் மாறுதல் நிகழ்வதைக் கண்டு)

என்ன பெருஞ்சாத்தரே! ஏன் இப்படி உங்கள் முகம் மாறுதலடைகின்றது?

**மாணி :** அரசர் பெரும! அவரிடம் ஒரு மாற்றமும் இல்லையே. நான் இப் பதவியிலிருந்து விடுதலைபெற விழைந்த ஓலை அனுப்பினேன். அது சேரவில்லை போலும்!

பாண்டி : அமைச்சர் பெரும! தாங்கள் இன்றி நான் எப்படிச் சிறக்கச் செயலாற்ற முடியும்? இடையில் ஏதோ நடந்த இந்த மாற்றத்தை எண்ணித் தாங்கள் என்மேல் வெறுப் புக் கொள்ளலாகாது. ஏதோ சூழலும் மற்றவர் உரை களும் பிறவும் என்னை இந்த நிலைக்கு உள்ளாக்கிவிட்டன. தாங்கள் தயவுசெய்து மீண்டும் அமைச்சர் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டும். தாங்கள் வந்தபின் என் நாட்டில் உண்டான நன்மைகளை நானறிவேன். பெருந் துறையில் உள்ள கோயிலுக்கு இன்னும் என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையும் நானே முன்னின்று செய்துவைக்கிறேன். தாங்கள் மட்டும் என் வேண்டு கோளை ஏற்று அருள்புரிய வேண்டும்.

மாணி : அரசர் பெரும! தாங்கள் இவ்வாறு என்னை ஒரு பொருட்டாக எண்ணி வேண்டுவது தகாது. நான் சென்றால் எத்தனையோ நல்ல அமைச்சர்கள் உங்களுக்குக் கிடைப்பார்கள். இதோ இந்தப் பெருஞ்சாத்தர் இல்லையா தங்களுக்கு?

பெருஞ் : பெரும! அப்படிச் சொல்லலாகாது. தாங்கள் அரசர் பெருமான் விருப்பப்படி இருந்து பாண்டி நாடு சிறக்க வேண்டிய வழித் துறைகளை ஆய்ந்து எங்கட்கு உணர்த்திக் கொண்டே இருக்கவேண்டும்.

பாண்டி : ஆம்! நான் தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளு கிறேன்.

மாணி : பாண்டி மன்னரே! தயவு செய்து இனி அது மட்டும் வேண்டாம்.

பெருஞ் : தற்போது அவருக்கு ஓய்வு கொடுங்கள். அவர் தளர்ந்திருக்கிறார். நாளை தங்கள் விருப்பிற்கு இசைவார்.

பாண்டி : உண்மைதான். தாங்கள் எண்ணிச் சொல்லுங் கள். நான் சென்று வருகிறேன்.

(பாண்டியன் செல்கிறான்! கூடவே பெருஞ்சாத்தரும் செல்கிறார்.)

**பாண்டிமாதேவி :** *(தனித்து) அங்கயற்கண்ணி அம்மையே! என்ன இத்தனை கொடும் கனவினை உண்டாக்கி விட்டாய்? நாங்கள் என்ன தவறு செய்தோம்? வழிவழியாகத் தொண்டு செய்யும் எங்கள் மரபை நீ அறியாயா? மனமறியத் தவறு இழையா மரபல்லவா இது! கண்ட கனவை எண்ணினால் நடுக்கமுண்டாகின்றதே. நாட்டிலே வெள்ளப் பெருக்கா? வீட்டிலே குடிமுதல் இழப்பா? மீனும்பிகைத் தாயே! ஏதோ சில நாட்களாகவே எனக்கு மனம் வாட்டமாகவே இருக்கிறதே. காரணம் என்ன? வாதவூரரைப் பற்றிய வதந்திகள் அதிகமாக அதிகமாக என் வாட்டமு மல்லவா அதிகமாகின்றது. என் செய வல்லேன்? அவர் அரசியலில் அமைச்சர் பதவி ஏற்ற பிறகு பலவகையில் நாடு ஏற்றமுற்றுள்ளது என உலகமே உணர்கின்றதே. ஆனால், அவரை வீழ்த்தப் பலவகையில் இந்தப் பெருஞ்சாத்தன் முயல்வதும் அறிந்ததே. அரசர் ஏனோ சில நாட்களாக இப்பெருஞ்சாத்தன் வலையில் சிக்கி விட்டார்? நான் சொல்வதைக்கூடக் கேட்க வில்லையே. வாதவூரர் மனம் அறிந்த மன்னரே இப்படி மாறினால் இனி யார் அவரைத் திருத்துவது? ஆனால், நேற்று அந்தக் குதிரைகளைக் கண்டபின் அரசர் மனம் மாறிவிட்டார் என அறிந்து மகிழ்ந்தேன். அம் மகிழ்ச்சியை நினைக்கும் அதே வேளையில், ஏனோ இந்த அதிகாலையில் இத்தகைய கொடுமையான கனவு நிகழ வேண்டும்? ஐயோ ஆண்டவனே! சொக்கேசா! இம் மதுரை நெருப்பால் அழிந்ததை நெடுநாட்களுக்குமுன் மக்கள் கண்டார்கள். ஆனால், இன்று என் கனவில் நீரால் சூழப்பெற்றதாக அன்றோ இருந்தது! அது மட்டுமா? அத்துடன் என் குலக்கொழுந்து--ஒரு குலத்துக்கு ஒரு மைந்தன்—அவனை அவ் வெள்ளம் விழுங்கிவிட்டதாகக்*

கண்டேன். இதெல்லாம் உண்மையானால்—நினைக்க நெஞ்சம் நடுங்குகின்றதே...

(அரசன் புகுகிறான்.)

**பாண்டி :** தேவி! என்ன இப்படி வாடியிருக்கிறாய்? ஏன் கண்கள் நீர் சுரக்கின்றன? என்ன நடந்தது? ஏன் அழுகின்றாய்?

**அரசி :** என் அன்பிற்குரிய அரசே! என்ன சொல்வேன்? ஐயோ! இன்று விடியலில் கண்ட கனவு என்னை வாட்டுகின்றதே.

**பாண்டி :** பேதைப் பெண்ணே! கனவுக்காகவா இப்படிக் கலங்குவது! நன்றாக இருக்கிறது. பாரெல்லாம் ஆளும் பெருமன்னன் தேவியா இப்படி நடுங்குவது? யாராவது பார்த்தால் சிரிக்கப்போகிறார்கள்.

**அரசி :** இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? உங்களுக்கு எல்லாம் விளையாட்டுத்தான். உங்கள் பரம்பரையில் முன்னொருநாள் என்போன்ற தலைவியின் கனவு எப்படி நனவானதென்பது நீங்கள் அறியாததா! அதிலும் நீங்கள் வரவர அந்த வாதவூரரின் பக்கம் மேற்கொள்ளும் செயல்—பெருஞ்சாத்தன் பேச்சின்படி செய்யும் செயல்—நடுக்கத்தையே உண்டாக்குகிறது. மக்கள் இவைபற்றியெல்லாம் பேசுவதையும், தங்கள் புகழ் ஓங்குவதற்குப் பதில் குறைவதையும், என்னைக் காட்டிலும் ஒற்றரால் உற்றறியும் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

**பாண்டி :** அறிவேன். என்றாலும் எத்தனையோ சூழ்நிலைகளுக்கிடையில் அரசியல் செல்ல வேண்டியுள்ளது. இதிலெல்லாம் நீ தலையிடவேண்டாம். நீ காணும் கனவு பற்றியும் யாதொன்றும் கவலைப்படவும் வேண்டாம். ஆமாம்! அவ் வாதவூரரை நாம் விடுதலை செய்து மறுபடியும் அமைச்சராக இருக்கவேண்டினாலும், அவர் 'மாட்டேன்' என்கிறாரே; அதற்கு என்ன செய்வது?

அரசி : அதற்கு யோசனை சொல்ல நான் தயாராக இல்லை. ஆனால், அவரில்லாவிட்டால் மட்டும் நாட்டில் நன்மை வளராது என்று சொல்லுவேன்.

பாண்டி : அதை உணர்ந்துதானே அவரை இருக்கச் சொல்லு கிறேன்.

அரசி : தெரிகிறது என்றாலும், நீங்கள் எதிலும் எண்ணிச் செயலாற்ற வேண்டும். கண்ட கனவு நிகழ்ந்தால் நாடே வெள்ளக் காடாகிவிடும். எண்ணுங்கள்; எண்ணிச் செயலாற்றுங்கள்.

(தூரத்தே பேரொலி கேட்கிறது.)

என்ன அங்கே ஆரவாரம்? இதுவரை இப்படிப்பட்ட பெருங்கூச்சல் எழுந்ததில்லையே!

பாண்டி : ஆம்; உணர்கிறேன். ஏதோ பேராரவாரமாகவே இருக்கிறதே!

(காவலன் ஓடி வருகிறான்.)

காவ : அரசே! மோசம்! மோசம்!

பாண்டி : என்ன? நாட்டு மக்களே கூடியுள்ளார்கள். குதிரைக் கொட்டிலின் ஆட்கள் அனைவரும் வாசலில் வந்துள்ளனர்.

(பதறுகிறான்)

பாண்டி : என்ன? என்ன? அவசரப்படாமல், சொல்.

காவ : அரசே! குதிரைகளெல்லாம் இரவே நரிகளாகி விட்டனவாம்.

பாண்டி : நேற்று வந்த குதிரைகளா?

காவ : ஆம் அரசே! அந்தக் குதிரைகள் எல்லாம் நரிகளாகி, உள்ள பழைய நம் குதிரைகளையும் கடித்துக் கொன்று, ஊரிலும் பெருஞ்சேதம் உண்டாக்கிக் காட்டிற்கு ஓடி விட்டன.

அரசி : என்ன? என்ன? என்ன உளறுகிறாய்?

காவ : அன்னையே! அனைத்தும் உண்மையே.

பாண்டி : அப்போதே நினைத்தேன்! பெருஞ்சாத்தனும் ஏதோ சூது என்றுதான் சொன்னான். பின் ஏது இங்கே இவனுக்கு இவ்வளவு பொருள்? குதிரை வாங்கவும்— ஆம், அதே வேளையில் கோயில்கட்டவும்...காவலரை உடனே சென்று அவனைச் சிறைசெய்யச் சொல்லும்.

பெருஞ்சாத்தனைப் பழநிக் கொற்றனுடன் வரச் சொல்லுங்கள். இதோ, நானும் குதிரைக் கொட்டிலுக் குப் புறப்பட்டுவிட்டேன்.

அரசி : அரசர் பெரும! சற்றுப் பொறுங்கள்—சிந்தியுங்கள். அவசரப்பட்டு அவரைச் சிறைசெய்ய வேண்டாம். நான் கண்ட கனவு முன்னமே என்னை வாட்டுகிறது. இந் நிகழ்ச்சி அதற்கேற்ப அமைகின்றது. குதிரைகள் நரி களாவதாவது,—என்ன விந்தை?

பாண்டி : இதில் விந்தை என்ன இருக்கிறது, இதோதான் நடந்ததைச் சொல்லுகிறார்களே! ஏதோ சூதுதான். அந்தக் குதிரைச் சேவகர் தலைவனைக் கண்டபோதே— அவன் என்னிடம் நடந்துகொண்ட முறையைப் பார்த்த போதே ஐயம் கொண்டேன்.

அரசி : கொற்றவா! எல்லாம் உண்மையாக இருக்கலாம் உங்கள் முன்னேரையே, இதோ தெரியும் ஆலவாய்க் கோயிலில் எழுந்தருளியுள்ள அண்ணல், எத்தனை வகை யாக அடித்தடித்து ஆட்கொண்டு ஆடல்காட்டியுள் ளார். ஒருவேளை இதுவும் அவற்றுள் ஒன்ருகலாம். எதையும் சித்தித்துச் செயலாற்றுங்கள்.

பாண்டி : (கோபமாக) இது அரசகாரியம்; இதில் நீ தலையிட வேண்டாம். எது நல்லது எது கெட்டது என்பது எனக் குத் தெரியும். புரியாததைப் புரியவைக்க அமைச்சர்கள் உள்ளார்கள். உன் யோசனை எனக்குத் தேவையில்லை.

இந்நேரம் அவனைக் கைதுசெய்திருப்பார்கள். அமைச்சர்களும் வந்திருப்பார்கள். நான் வருகிறேன்.

அரசி : அரசே! சற்றுக் கோபம் தணியுங்கள். எண்ணிச் செயலாற்றுங்கள்.

பாண்டி : சரி சரி! வருகிறேன்.

(விரைகிறான்.)

அரசி : சொக்கேசா! மீனாட்சி! நீதான் இந்த நிலையில் எங்களைக் காப்பாற்றவேண்டும். குதிரைகள் நரியாவதாவது? எல்லாம் உன் ஆடலோ? யாண்டும் நிறைந்த இறைவனே! உன்னையே நம்பியுள்ள இந்த மக்களையும் மன்னரையும் காப்பாற்றுவாய்.

(மக்கள் சிலர்)

முதல் : இதுவரை நாடு காணாத அதிசயமாகவல்லவா இது இருக்கிறது! இப்படி நரிகள் ஊர்த் தெருக்களில் ஊளை யிடலாமா? அதுவே ஒரு கெட்ட சகுனமாக இருக் கின்றதே!

இரண் : ஆமாம்! நேற்று அந்தக் குதிரைகளைக் கண்டு நாடே வியந்து போற்றிற்று; அவை போன்ற குதிரைகளை உலகமே கண்டிருக்காது என்று. ஆனால் இன்றோ, நேர் மாறாக அத்தனையும் நரிகளாகி நாட்டையே அலங் கோலம் செய்து விட்டனவே!

மூன்று : பொறுங்கள்; இன்னும் என்னென்ன நடக்க இருக் கிறதோ? யாரால் அறிய முடியும்? அந்தச் சொக்கேசன் என்னென்ன செய்யக் காத்திருக்கிறானோ!

முதல் : ஆமாம்; பாவம் ஒரு தவறும் செய்யாத மாணிக்க வாசகரைத் துன்புறுத்தினானே பாண்டியன், அது விடுமா?

மூன்று : உண்மை; உண்மைதான். பெருஞ்சாத்தன் சொற் கேட்டு இப்பாண்டியன் இவ்வாறு மாறுவான் என்று யார் எதிர்பார்ப்பார்கள்? அங்கே பெருந்துறையில் கட்டிய கோயில் மாணிக்கவாசகர் பொருளே என்பதை என் மைத்துனர் மூலம் அறிந்தேன். அவர் நேற்றுத் தான் இங்கே வந்தார். நாடு முழுவதும் அவர் புகழ் பரவுவதைக் கண்டு பாண்டியன் மனம் புழுங்குகிறான். அதனால் இந்தக் கொடுமையெல்லாம் நடைபெறுகின்றன.

இரண் : ஆம், ஆம். இவைகளையெல்லாம் எண்ணித்தான் போலும் அவர்.

'உற்ருரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்
பேர்வேண்டேன்
கற்ருரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்ருலத் தமர்ந்துறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே'

எனப் பாடினர். எவ்வளவு பொருள் பொதிந்த பாட்டு?

**மூன்ரு :** அட! அவர் பாடல்களை நீ கற்றுக் கொண்டாயா?

**இரண் :** நான் மட்டுமா? இந்த நாட்டில் எத்தனையோ பேர் அவர்தம் அருட்பாடல்களைப் பாடிப் பாடிக் கண்ணீர் உகுக்கின்ருர்கள் என்பதை நீ அறியாயா? அது இருக் கட்டும். இனி அரசன் என்ன செய்யப் போகிருன்?

**மூன்ரு :** என்னசெய்வான்—இந்தப் பாவிகள் சொற்கேட்டு, அவரைச் சிறையிலிட்டு வேறு கொடுமைகள் ஏதேனும் செய்வான். இவனிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்?

**முதல் :** உண்மைதான். அதிலும் மணிவாசகர் புகழ் உலகில் பரவத் தொடங்கிய பிறகு அவன் உள்ளப் புழுக்கம் மிக அதிகமாகிவிட்டதென அறிகிருேமே. அவன் கோபத் தைத் தூபம் போட்டு வளர்க்க அக்கொடியவர்கள் வேறு கூடியுள்ளார்களே!

**இரண் :** ஆமாம்; ஆகா நம் நாட்டு நலம் இத்தகைய கொடுமையாளரிடம்—குடிகேடியாகிய பரத்தையோடு வாழும் பாபியிடமா சிக்கிச் சீரழியவேண்டும்? எத்தனை உயர்வாக வாழ்ந்தது பாண்டிய நாட்டுப் பண்பாடு இன்று இப்படி நிலை கெடுகிறதே. ஆமாம்; பாண்டியன் இன்னும் மாணிக்கவாசகரை விட்டா வைத்திருக்கிருன்? இருக்கமாட்டானே!

**மூன்று :** உனக்குத் தெரியாதா? எப்போதோ? அவரைக் கைது செய்ய உத்தரவிட்டுவிட்டானும். மேலும் ஏதோ செய்ய ஏற்பாடுகள் செய்கிறானும்.

(ஒருவன் வேகமாக ஓடிவருகிறான்.)

என்ன முத்தண்ணன் இப்படி ஓடிவருகிறான். அவன் முகம் இப்படி மாறுபடுகிறதே.

**முத்தண் :** அநியாயம் அநியாயம்! கொடுமை கொடுமை! கேட்க நல்லவர் இல்லையா! ஊரீர் முறையோ! சேரீயிர் முறையோ!

**முதல் :** என்ன முத்தண்ணா? என்ன நடந்துவிட்டது? ஏன் பதறுகிறாய்?

**முத்த :** மாணிக்கவாசகரை இந்தக் கொடிய வெய்யிலில் வையைப் பெருமணலில் இட்டுப் புரட்டுகிறார்களே!

**இரண் :** அடப் பாவிகளா ஏன் இந்தக் கொடுமை?

**மூன்று :** ஏதோ நாட்டுக்குக் கெட்ட காலம்தான். அன்று ஒருநாள் முன்பின் யோசியாத காரணத்தால் மதுரை நகர் தீக்கிரையானது. இன்று என்னாகப் போகிறதோ?

**முதல் :** பாவம்; இந்தக் கொடுவெய்யிலில் வையை மணல் அவர் உடலைச் சுட்டெரிக்கவில்லையா! அவர் பாவம் வாடி வதங்கவில்லையா!

**முத்த :** அதுதான் இல்லை. இந்தக் காவலாளிகள் 'ஆ ஊ' என்று கூச்சலிட்டு, வெம்மைக்கு ஆற்றாது அலமறுகின்றார்கள். ஆனால் அவரோ கண்மூடி மௌனியாக இருக்கிறார். திடீரென ஆண்டவனை நோக்கிப் பாடுகிறார். அவர் உள்ளமும் முகமும் கலங்காதிருப்பதைக் காண, அவர் எல்லாவற்றையும் கடந்த கடவுள் நிலை பெற்றவர் என அறியமுடிகின்றது. அங்கே பெருங்கூட்டம் கூடி

விட்டது. ஆனால், பாண்டியனுடைய ஆட்கள் அனைவரையும் அடித்துத் துரத்துகின்றனர். அங்கிருந்துதான் நான் ஓடிவருகிறேன்.

**இந்திர ;** என்ன கொடுமை! இந்தப் பெரு வெய்யிலில் இப்படிக் கொடுமைப்படுத்துவது எந்த நாட்டில் உண்டு, துலைநாவன்ன சீர்தூக்கி ஆய்ந்தறிந்து நீதி செலுத்தும் பாண்டியர் மரபில், சில நூற்றாண்டுகளுக் கொருமுறை இத்தகைய கொடிய மன்னர்கள் தோன்றுவார்கள் போலும். சொக்கேசா! அதற்காக ஒன்றுமறியா மக்களை யெல்லாம் கொடுமைப்படுத்தாது நீதான் காப்பாற்ற வேண்டும்.

**முதல் :** என்னாகுமோ? யாரறிவார்? ஏன் மக்கள் இப்படி ஓடி வருகிறார்கள்!

(எங்கும் 'வெள்ளம்' 'வெள்ளம்' என்ற கூக் குரல்.)

**அனைவரும் :** என்ன! வெள்ளமா? எங்கே?

**முதல் :** ஆம். அதோ நுரைகொழித்து வருகிறதே! வையையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறதே!

**முதல் :** வையையில் வெள்ளமா! ஆம்; எவ்வளவு வேகமாக நுரைதிரண்டு ஓடிவருகிறது.

**இரண் :** இதோ—தெருக்களில் நீர் புகும்போல் தெரிகிறதே!

**மூன்று :** இந்த வெய்யிலில் வெள்ளமா, வானில் மேகமில்லை. மந்தாரமில்லை—மழை இல்லை—ஆனால் வையையில் வெள்ளம்—பெருவெள்ளம்—ஊரழிக்கும் வெள்ளம்—நாட்டழிக்கும் வெள்ளம்.

**முத்த :** நான் அப்போதே நினைத்தேன். இந்தக் கொடுமை—மணிவாசகரைத் துன்புறுத்தும் கொடுமை—நாட்டை, அழிக்கப் போகின்றது என நினைத்தேன். ஆம்! இவ் வெள்ளம் என்னென்ன செய்யுமோ யாரறிவார்!

**முதலா :** ஆம்; மணிவாசகர் என்ஞனர்? காவலர் என்ஞனர்கள்? அவர் தப்பிவிட்டாரா? அல்லது வெள்ளத்தில் அடித்துப் போகப்பட்டாரா?

(மற்ருெருவர் ஓடி வருகிருர்.)

தம்பி எங்கிருந்து வருகிருய்?

**வந்த :** மணிவாசகரை வாட்டிய அந்த இடத்திலிருந்து தான் ஓடி வருகிறேன்.

**முத்த :** அப்படியா அவர் என்ஞனர்?

**வந்த :** அவரா! அவர் எதற்கும் கலங்கவில்லை. அவர் மெல்லத்தான் நடந்துவந்தார். வெள்ளம் அவருக்கு வழிவிட்டது போலும். அலை எழுப்பி 'ஓ'வென்ற இரைச்சலுடன் வருகின்ற வெள்ளம், அவர் பக்கத்தில் செல்லும்போது எப்படித்தான் அடங்கிச் செல்லுகிறது! ஆம்; அவர் மெள்ளக் கரையேறி மீஞட்சி சுந்தரேசர் கோயிலை நோக்கிச் செல்லுகின்ருர்.

(மேலும் கூச்சல் அதிகமாகின்றது)

**அனை :** வெள்ளம் ஊருக்குள் புகுந்துவிட்டது. கடைத் தெருப் பக்கம் வந்துவிட்டது போலும். அதுதான் அங்கிருந்து பலர் இப் பக்கம் ஓடி வருகின்றனர்.

**முத்த :** இதுவரை பாண்டியநாடு இத்தகைய வெள்ளத்தைப் பார்த்திருக்க முடியாதே.

**முதல் :** எப்படிப் பார்த்திருக்கும்? இத்தகைய கொடுமை இதுவரையில் பாண்டிய நாட்டில் நடந்ததுண்டா?

**இரண் :** ஆம்; உண்மைதான். மாணிக்கவாசகரைப் புரிந்து கொள்ளாத மன்னன் அவரைத் துன்புறுத்துகிருன்.

**மூன்ரு :** போகட்டும். இனியாவது புத்தி வருமா? பரி நரியின் மாயம்—வெய்யிலில் மழை இன்றிப் பெரு வெள்ளம். இவற்றைக் கண்டாயினும் பாண்டியனுக்குப் புத்தி வருமா?

**ந்த :** எப்படி நீ இதை எதிர்பார்க்கலாம்? கொடும் துன் மந்திரிகள் இடையில் வாழும் அவன் திருந்துவதெங்கே? அவன் தன்னை மறந்து கொடுமையின் உச்சியிலே அல்லவா இறுமாந்திருக்கிறான்!

**அனை :** ஆம்; ஆம்; உண்மைதான்.

**முத்த :** மீனாட்சி சுந்தரேசர்தாம் நம்மையும் நாட்டையும் இக் கொடுங் கோலிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் காப்பாற்றவேண்டும். வாருங்கள். நம் வீட்டுப் பக்கமும் இவ்வெள்ளம் வந்திருக்குமே! குழந்தைகள் என்னுனார் களோ? சென்று பார்க்கலாம்.

**அனைவரும் :** ஆம். ஆம். (அனைவரும் விரைகின்றனர்.)

(இறைவன் வந்தியின் கூலியாளாக வந்து, கரை கட்டுவதுபோல நின்று, அங்கே வேலை செய்பவர் அனைவருக்கும் வேடிக்கை காட்டுகிறார்.)

**வேலை 1 :** அதோ, அந்த ஆளைப் பார். அவன் வேலைக்காக வந்தவனாகவே தெரியவில்லையே?

**வேலை 2 :** ஆம்; நானும் வந்ததுமுதல் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஏதோ குதிப்பதும் எழுவதும் ஓடுவதும் ஆடுவதும் செய்கிறானே ஒழிய, ஒரு கூடை மண் வாரி உடைப்பில் கொட்டவில்லையே!

**வேலை 1:** அவன் யார் என்பதும் தெரியவில்லை. நாம் இது வரையில் அவனை இங்கே பார்த்ததுகூட இல்லையே!

**வேலை 2 :** அதுமட்டுமா? அவனைப் பார்த்தால் யாரோ பெரிய வீட்டுப் பிள்ளையைப் போலல்லவா அழகும் மிடுக்கும் சேர விளங்குகிறான். பாவம்! வாழ்ந்து கெட்டவனோ என்னவோ?

**வேலை 1 :** எப்படியாயினும் எடுத்துக்கொண்ட வேலையைச் செய்ய வேண்டாமா? ஏதோ அடிக்கடி வாயில் போட்டுக்கொண்டே சுற்றுகிறானே.

(இறைவன் அவர்கள் அருகில் வந்து)

**இறை :** என்ன? என்னைப் பார்த்துப் பார்த்துப் பேசிக் கொள்ளுகிறீர்கள்?

**வேலை 1 :** ஒன்றுமில்லையே.

**இறை :** மறைக்காதீர்கள்; நான் வேலை செய்யவில்லை என்றும் விளையாடிக் கொண்டிருக்கிறேன் என்றும் தானே......

**வேலை 2 :** இல்லை, இல்லை.

**இறை :** எல்லாம் எனக்குத் தெரியும். பேசுங்கள்; நன்ருகப் பேசுங்கள். நான் அவற்றுக்கெல்லாம் கவலைப்படப் போவதில்லை. எனக்குத் தெரியும். எப்போது கரையை அடைப்பதென்று. நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

**வேலை 1 :** நாங்கள் உன் பங்கு அடைபடாததைப்பற்றிக் கவலைப்படவில்லை. அதற்கு நாங்கள் யார்? நீயாயிற்று அரசர் ஏவலாளர் ஆயிற்று. ஆனுல், நீ கரைக்கு மண் கொட்டாத காரணத்தால் வெள்ளம் எங்கள் பங்கெல்லாம் கூடக் கல்லிக்கொண்டு போகிறதே. அதற்கு நாங்கள் என்ன செய்வது என்றுதான் பேசிக்கொள்ளுகிருேம்.

**இறை :** எதற்கும் நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

(பிட்டைவாரி வாயில் போட்டுக் கொள்ளுகிருர்.)
இந்தாருங்கள் பிட்டைச் சாப்பிடுங்கள்.

**வேலை 1 :** ஓய்! வேலை செய்ய வந்தீரா? பிட்டுச் சாப்பிட வந்தீரா?

**இறை :** கவலை வேண்டாம். சாப்பிடுவதற்காகத்தானே ஐயா இத்தனை பாடும். நான் பின் செய்வதை முன் செய்கிறேன். மாறி ஆடுவதே எனக்கு இயல்பு ஐயா!

**வேலை 2 :** ஆமாம்; இருக்கட்டும். நீ யாருக்கு ஆளாக வந்திருக்கிருய்? உன்னை இந்த ஊரிலேயே இதுவரையில் பார்த்ததில்லையே.

**இறைவ :** இருக்கலாம். என்னைப் பார்க்காதது உன்—உங்கள் தவறே அன்றி என் தவறு அல்லவே. ஏன் அரசனே பார்த்தும் பார்க்காதவனுகத்தானே இருக்கிருன். ஆமாம்; நான் யார் ஆள் என்பது உங்கட்குத் தெரியவில்லை? இதோ பிட்டுத் தின்கின்றேனே!

**வேலை 1 :** அப்படியென்ருல் பிட்டு விற்கிருளே அந்தக் கிழவி—வந்தியின் ஆளா நீ!

**இறை :** அடடே கண்டு பிடித்துவிட்டாயே! யாரும் காணக் கூடாத—காணமுடியாத உண்மையைக் கண்டு பிடித்து விட்டாயே.

**வேலை 2 :** டேட! அவன் நம்மைக் கிண்டல் செய்கிருன் பார்த்தாயா? வா, நம் வேலையைப் பார்க்கலாம். ஐயா, நீ போ. எங்களைத் தொந்தரவு செய்யாதே!

**இறை :** நான் ஒன்றும் செய்யவில்லையே. நீங்கள்தானே என்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தீர்கள்? என்ன வென்று கேட்கவந்தால் ஏதேதோ பேசுகிறீர்கள்! உங்கட்கு என்னைப்பற்றி ஏன் கவலை? சரி சரி; உங்களோடு பேசிக் கொண்டிருப்பதைக்காட்டிலும், அதோ, அந்த மரத்தின் கீழ்ச் சென்று சற்று இளைப்பாறினுலும் நல்லது.

(சென்று, தூரத்தில் உள்ள மரத்தடியில் கூடையைத் தலையணையாக்கிப் படுத்துக்கொள்ளுகிருர். அரசன் சேவர்கள் தூரத்தே வருகிருர்கள்.)

**வேலை 1 :** அண்ணே! அவன் எவ்வளவு மதம் பிடித்தவனுக இருக்க வேண்டும். ஊரே வெள்ளத்தால் அஞ்சுகிறது. அவன் ஒன்றும் அறியாதவனைப்போல் உறங்கத் தொடங்கி விட்டானே!

**வேலை 2 :** டே, நீ அதைப்பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருக்காதே. அதோ, அரசன் ஆட்கள் வருகிருர்கள். உன் வேலையைப் பார். யாரோ அமைச்சர்கூட வருகிருர் போல் தெரிகிறதே.

**வேலை 1 :** ஆம்; ஆம். எல்லோர் வேலையும் முடிந்துவிட்டது போலும். நம்முடையதும் இந்தப்பக்க வெள்ளம் இல்லையானுல் எப்போதோ முடிந்து விட்டிருக்குமே.

(அமைச்சர் அரசன் ஆட்களுடன் அருகில் வந்து)

**அமை :** யார் இந்தப் பங்கை அடைப்பது? ஏன் இன்னும் முடியவில்லை?

**வேலை 2 :** இதோ முடித்து விடுகிறோம். இந்நேரம் முடிந்து விட்டிருக்கும். ஆனால் பக்கத்துப் பங்கு அடைபடாத தால், அந்த வெள்ளம் எங்கள் பங்கையும் கல்லிக் கொண்டே வருகிறது.

**அமை :** (சுற்றிப் பார்த்து) ஆமாம் உண்மைதான். அது யார் பங்கு? அதை அடைக்க ஆள் இல்லையா?

**கணக் :** (கணக்கைப் பார்த்து) அது வந்தி எனும் கிழவியின் பங்கு. அதற்கென ஓர் ஆள் வந்துதானே கணக்கில் குறிக்கவும் சொன்னான்.

**வேலை 1 :** ஆம் ஐயா; ஓர் ஆள் வந்தான். ஆனால் வேலை செய்யவில்லை. பிட்டினை உண்டுகொண்டே பொழுது போக்குகின்றான். ஆடுகிறான்; பாடுகிறான்; குதிக்கிறான்—என்னென்னவோ விளையாட்டைச் செய்கிறான்.

**அமை :** ஆமாம்; இப்போது எங்கே அவன்?

**வேலை 2 :** அதோ, அந்த மரத்தின் கீழே படுத்துக்கொண் டிருக்கிறான், பாருங்கள்.

**கணக் :** அட பாவி: ஊரே அலறுகிறது; அவன் உறங்குகிறான்.

**அமை :** பேச நேரமில்லை. வாருங்கள்; நாமே அவனிடம் சென்று விசாரிப்போம்.

(அனைவரும் இறைவன் படுத்திருந்த மரத்தடி யில் சென்று அவரை எழுப்ப முயல்கின்றனர். ஆனால், அவர் அசைந்து அசைந்து படுக்கிறாரே அன்றி எழுந்திருக்கவில்லை.)

**அமை :** என்ன இது கொடுமை! இப்படி வெள்ள ஆரவாரத் திடையில் கூலியாளாக வந்தவன் இப்படித் தூங்குவதா?

**கணக் :** இதோ பிரம்பு; இவனைத் தட்டி எழுப்புங்கள்.

**அமை :** ஆமாம்! அது சரி! ஆனால், அவன் முகத்தைப் பார்த்தால் அச்சமாக இருக்கின்றதே! எப்படி ஒளி வீசுகின்றது! நடக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தால், நாம் ஏன் இதில் தலையிடவேண்டும் என்றுகூடத் தோன்றுகின்றது.

**கணக் :** ஆமாம், ஆமாம்; உண்மைதான் எனக்கும் அச்சமாகத்தான் இருக்கிறது, எல்லாவற்றிற்கும் அரசரையே நேராக அழைத்துவந்துவிட்டால்...

**அமை :** ஆம், ஆம்; அது நல்லதுதான், அவர் அந்தப் பக்கத்தில் வந்துகொண்டிருக்கிறார். (காவலரை அழைத்து) உடனே ஓடிச்சென்று இந்தத் தகவலைச் சொல்லி அரசரை அழைத்து வாருங்கள்.

**காவல :** அரசர் இதோ அருகில் வரும் ஆரவாரம் கேட்கிறதே! இதோ விரைந்து அழைத்து வருகிறோம்.

(செல்கின்றனர்.)

**அமை :** நாட்டில் இதுவரை இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டிருக்கிறீரா ஐயா?

**கணக் :** ஐயா, அரசாங்க அலுவலரில் நான்தான் வயதில் மிக மூத்தவனாக இருப்பேன். இதுவரை இம்மாதிரி நிகழ்ச்சிகளை நான் கண்டதோ கேட்டதோ கிடையாது ஐயா.

(தூரத்தில் அரசர் வர.)

அதோ அரசர் பெருமானும் வந்துவிட்டார்.

(அனைவரும் அஞ்சி ஒதுங்குகின்றனர்.)

**அரசர் :** என்ன அமைச்சரே! இங்கே இப்படியே கிடக்கின்றது? வெள்ளம் எல்லை மீறுகின்றது.

(இறைவன் மெள்ள எழுந்து ஒரு கூடை மண்ணைத் தலையில் தாங்கியபடி அசைகின்றார்.)

**அமை :** அதைத்தான் தங்களிடம் சொல்லக் காவலரை அனுப்பினேன். இது வந்தியின் பகுதியாம்.

(அரசர் கணக்கனைப் பார்க்க)

**கணக் :** ஆம்; வந்தியுடையது. சற்று முன் அதோ...(திரும்புகிறார். உறங்கின இடத்தில் காணவில்லை)—(மறுபக்கம் திரும்பி) அந்த ஆள் தானே வந்து வந்தியின் ஆள் என்று கணக்கில் குறிக்கச் சொன்னான். ஆனால், வேலை செய்யவில்லை; விளையாடுகிறான். எல்லோரையும் கேளுங்கள்.

(அரசன் திரும்ப)

**அனை :** ஆம், ஆம்; அரசர் பெரும!

**அசர :** ஏன்? அவனை அழைத்துக் கேட்பதுதானே?

**அமை :** கேட்டோம். பலமுறை எழுப்பினோம். அவன் அந்த உறக்கத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அடிப்பதற்கும் அச்சமாக இருந்தது. உங்கட்குக் காவலர்வழிச் செய்தி அனுப்பினோம். இப்போதுதான் எழுந்து கூடையில் மண் எடுத்துச் செல்லுகிறான்.

**வேலை 1 :** ஆமாம் ஆமாம்; ஒழுங்காக அவன் மண் வாரிக் கொட்டி இதுவரை காணவில்லை. தாங்கள் வருவதால் தானோ என்னவோ மண்ணை வாரிக்கொண்டு ஒழுங்காகச் செல்லுகிறான்.

**அசர :** அப்படியா! அவனை அழையுங்கள். (சீற்றத்துடன்) அடே இங்கே வா!

(இறைவன் ஒடுங்கினவராகக் கூடை மண்ணுடன் அரசன் முன் வர)

நீ யார்? வந்தியின் ஆளா நீ. ஏன் இப்படி வேலை செய்யாதிருக்கிறாய்? உன்னால் எல்லா வேலையும் கெடுகின்றதே!

அனே : ஆமாம், ஆமாம்; வெள்ளம் மிகுந்து ஊரையே அழிக்கும்போலும். யார் நீங்கள்?

இறை : என்ன கேட்கிறீர்கள்? என்னைத் தெரியவில்லையா? நான் எத்தனை எத்தனை காலமாக இங்கே இந்த ஊரில் குடும்பத்தோடு தங்கியிருக்கிறேன்; என்னை யார் என்று கேட்கிறீர்களே?

அரச : ஏது பெரிய வாயாடியாய் இருப்பான்போல் தெரிகிறதே! நீ யாராகவாவது இரு. ஏன் இன்னும் கரையை அடைக்கவில்லை? கரை உடைந்து மற்றவர் கட்டியதையும் உடைப்பது உன் கண்ணுக்குத் தெரியவில்லை?

இறை : யாருக்குக் கண் தெரியவில்லை? நன்ருகப் பாருங்கள்.

அரச : என்ன? எனக்கா கண் தெரியவில்லை? வேலை செய்யவுமில்லை; எதிர்த்துப் பேசுவது வேரு?

(கையிலுள்ள பிரம்பால் இறைவன் முதுகில் ஓங்கி அடிக்கிருன். இறைவன் அந்தக் கூடை மண்ணை உடைப்பில் கொட்டி மறைகிருர்.—வெள்ளம் வற்றிப் பழையபடி ஆறு மணலாகின்றது.)

அரச : ஐயோ அடி! முதுகில் அடி தாங்க முடியவில்லையே.

அமை : ஐயோ முதுகில் அடி......

(ஒவ்வொருவரும் அவ்வாறு முதுகைத் தடவிக் கூச்சலிடுகின்றனர். ஊரில் கூச்சல் கிளம்பிவிட்டது —முதுகில் அடி—எங்கும் பேச்சு.)

அரச : இது என்ன விந்தை! ஆள் எங்கே? அடி அனைவர் மேலும் பட்டதென்ன? வெள்ளம் எங்கே? இனி என்ன விளையுமோ? சொக்கேசா? எல்லாம் உன் விளையாடலா? ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லையே—

(கதறி அழுகிருன். வானிலே இறைவன் உமை, குமரன் சூழத் தோன்றிப் பேசுகிருர்.)

வானொலி : பாண்டிமன்னா! யார் கண் தெரியவில்லை என்பதைப் பார்த்தாயா? இனியாவது விழித்துக்கொள். என் அடியவனாகிய மாணிக்கவாசகனை என்னென்ன துன்பத்துக்குள்ளாக்கினாய். அவன் பொருளால் கோயில் கட்டிப் பேரும் புகழும் பெறுவதைக் கண்டு பொறாமையால் அமைச்சர் தூபமிட அவனைச் சிறை செய்தாய். அவன் பொருட்டு நாமே நரிகளைக் குதிரைகளாக்கிக் குதிரைகளுடன் குதிரைச் சேவகனாய் வந்து, பின் நாமே அவற்றை நரிகளாக்கினோம். அப்போதும் உன் கண் திறக்கவில்லை. அமைச்சர் பேச்சில் சிக்கினாய்; அவனைத் துன்புறுத்தினாய்; வெய்யிலில் வாட்டினாய்; வையை வெள்ளம் பெருகச் செய்து வந்தியின் ஆளாய் வந்து அவளுக்கும் வீடளித்து இதோ விளையாடல் காட்டினோம். நீ என்னை அடித்த அடி அவரவர் முதுகில் மட்டும் பட்டதாக எண்ணாதே. அவரவர் செய்த கொடுமைகளுக்கேற்ப அவரவர் வாழ்வில்—வயிற்றில் மனைவி மேல்—மற்றெல்லாவற்றிலும் பட்டுள்ளது. ஆம்; அவரவர் செய்த வினையினை அவரவர் அனுபவிக்க வேண்டும். அவற்றை நீக்குதற்குரிய ஒரே வழியாகிய என்னை நினைக்க மறந்தீர்கள். உரிய தண்டனையிலிருந்து தப்ப முடியாது. அனுபவித்தே தீரவேண்டும். யார் யார் என்னென்ன தண்டனை பெற்றார்கள் என்பது இனித் தெரியும். நீயும் தப்ப முடியாது. பதவியாலும் பட்டத்தாலும் பிற உயர் நிலைகளாலும் மற்றவரை வாட்டும் யாரும் என்றும் அதற்குரிய தண்டனையிலிருந்து தப்ப முடியாது. இன்றைய நிகழ்ச்சியிலிருந்தாவது இந்த உண்மையை உணர்ந்து உலகம் திருந்துமா?

மாணிக்கவாசகரை அப் பெயர் சொல்லி அழைக்கவும் நீ கூசினாய். அவன் மணிமொழி கேட்டு யாமிட்ட பெயரது. அவன் உள்ளத் தூய்மை உடையவன். பெருந்துறைக் கோயில் அனைத்தும் அவன் பொருள் கொண்டானது. இதை உலகம் உணரட்டும். அவன்

*இனி உன் அமைச்சனல்லன்; என் அடித்தொண்டன். அவனை நீ மட்டுமல்ல; யாருமே ஒன்றும் செய்ய முடியாதென்பதை உணர்ந்து கொள். கண்ணைத் திற! திறந்து பார்! பார்! பார்!*

*(மறைகிறார்)*

அரச : சொக்கேசா! ஆண்டவா!

*(மயங்கி வீழ்கிறான். அனைவரும் தூக்கிச் செல்கின்றனர்.)*

பாண்டியன் : (தனிமொழி)

சொக்கேசா! அங்கையற்கண்ணி அம்மையே! எல்லாம் கெட்ட பிறகு அல்லவா எனக்கு உணர்வு பிறந்தது. வழிவழியாக வந்த பாண்டியர் மரபில், என்போன்ற கொடியவர் ஒருவரும் இருக்கமாட்டார்கள் போலும். அடித்தடித்து அருள்சுரந்த உங்கள் கருணையை உணராது போனேனே! அந்தோ! அந்தப் பாவிகள் சொற்கேட்டு உன்னை மறந்து உன் மெய்யடியராகிய மாணிக்கவாசகருக்கு எத்தனைக் கொடுமைகள் இழைத்தேன். ஒற்றர் சொற்படி அனைத்தும்—கோயில் கட்டிய அனைத்தும் அவர் பொருளே என அறிந்தும், அப் பாவி பெருஞ்சாத்தன் போதனையினால் மனமிழந்தேன். நீயே குதிரைச் சேவகனாய் வந்து எனக்குக் காட்சி அளித்து நின்ற அந்த நிலையிலும் நான் அறிவிழந்தேனே. ஆணவத்தின் முனைப்பினாலே—அரச பதவியின் செருக்கினாலே நல்லவரையெல்லாம் அல்லலுக்கு உள்ளாக்கினேனே! அந்தோ என்னை அவ்வப்போது தெருட்டிய நல்லமைச்சர்தம் சொற்களையும் நல்லாசிரியர்தம் அறிவுரைகளையும் மனத்தில் கொள்ளாது அற்பர்—பரத்தையர் வழிநிற்கும் அற்பர்—வாய்ச்சொற் கேட்டு வாளா கழித்தேனே. என் செருக்காலேயே எனது பரந்த நாட்டு எல்லையை—ஆட்சி எல்லையை—அதிகார எல்லையைச் சிறுகச்சிறுகப் பறிகொடுத்தேனே. ஆம்! நான் ஆட்சிக்கு வந்தபோது இருந்த எனது பரந்த நாடு சுருங்க—என் அதிகாரம் சுருங்க, அனைத்தும் அறிந்தும், அதற்கெல்லாம் காரணம் என் ஆணவமே என அறியாது போனேனே! இதோ, இந்தச் சிறுநாட்டையும் கூட இன்று ஆளக் கான்முளையும் இல்லாது—இருந்த ஒரே குலக்கொழுந்தையும் இழந்து இப்படி வருந்துகின்

றேனே! எனக்கு உய்தியே இல்லையா! என்றும் மீளாத் துயர்தானோ!

சொக்கேசா! என் மனைவி—கோப்பெருந்தேவி கனவு கண்டு, வருவதை உரைத்தபோது, அதைக் கொள்ளாது தள்ளினேனே! நீ அடித்த அடி இத்துணை பலமாக என் மீது விழும் என எண்ணவே இல்லையே! எந்தாய். என் குடிக்கு ஒரே குலவிளக்காய்—கொழுந்தாய்—வருங் காலத்தில் இப்பாண்டி நாட்டை ஆளவல்லதாய் இருந்த செல்வத்தின்மேல் பட்ட அடி, அதன் உயிரையே உடன் கொண்டு சென்று விட்டதே. அந்தோ! அரசி ஆற்று வாரற்றுத் தேசய்ந்து சாம்புகின்றாளே! பிழைக்க வழி யில்லையோ?

ஆம்! வேண்டும் எனக்கு, இதுவும் வேண்டும், இன்ன மும் வேண்டும். நான் செய்த கொடுமைகளுக்கு இந்தத் தண்டனை போதாது. ஆம்! நல்லவர்மீது பழி சுமத்தி னேன். நல்லவர் புகழ் கண்டு பொறாமை அடைந்தேன். நல்லவர் வாழ்வைப் பாழாக்கினேன். அல்லவர் உறவை விரும்பி மேற்கொண்டேன். நாட்டில் என்கீழ் உள்ள மக்களை அந்தப் பொல்லாதவர் வழியே தொல்லைக்குள் ளாக்கினேன். மாணிக்கவாசகரைப் பிரிந்த நாள் சிறிதேயாயினும் அதற்குள் நான் இழைத்த கொடுமை கள் எத்தனை? என் நாட்டைத் தீமைகளிலிருந்து விடு விக்க, எனக்கு வாழ்வில் உயர்வை கொடுக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள்தாம் எத்தனை எத்தனை? அனைத்துக்கும் பதிலுக்கு நான் செய்தது என்ன? அவர் மேல் பழி சுமத்திச் சிறையிலிட்டேன். அவரை வையைப் பெருமணலில் கொடிய வெய்யலில் ஈர்த்திட் டேன். நாட்டு மக்கள் அவ்வப்போது என்னைப் பழித்ததும் ஒற்றர்கள் வாயிலாக நான் உணர்ந்தேன். என்றாலும், அரசபோகமும் பதவி ஆணவமும் என் கண்களை மூடி விட்டன. ஆம்! அதற்குப் பயன் என் ஒரே மகனை இழந்து மதிகெட்டமை. உலகம் என்னைக் கண்டாவது

உண்மையை உணர்ந்து கொள்ளுமா? ஆம்; பெருஞ் சாத்தனும் பழநிக்கொற்றனும், அவர்கள் போன்ற கொடியவர்களும், அவர்கள் வாய்ச்சொற் கேட்கும் என்போன்ற பதவி வெறிபிடித்த பாவிகளும் இருக்கும் வரையில் உலகம் எப்படி உண்மையை உணரும்—எப்படி உய்த்து உணரும்?

எல்லாம் வல்ல இறைவனே! நீயே என் வருங்காலத் துக்கு வழிகாட்ட வேண்டும். இனி, இப் பாண்டி நாட்டை என் தாயகத்தார் யாரேனும் ஆளட்டும். எனக்கென ஒன்றும் வேண்டாம். இதோ உன் சன்ன திக்கு ஓடிவருகிறேன். மாணிக்கவாசகரும் அங்கேயே உன்முன் மணிமொழி பாடிக் கொண்டிருப்பதாகக் கூறி ஞர்களே. இதோ வந்து, உங்கள் இருவரையும் ஒருசேரக் கண்டு உய்தி பெறுவேன். உயர்ந்த தெய்வ நெறிக்கு வழிகோலுவேன். படமுடியாது இனித் துயரம் – பட்டதெல்லாம் போதும்—மற்றவரை படுத்தியதெல் லாம் போதும்—நல்லவரை நலியுறுத்தியதெல்லாம் போதும்—நாயகமே மணிவாசகரே! சொக்கேசரே! மீஞட்சியே! இதோ நான் உம் அடிமை. உம் அடி நோக்கி அலமறுகின்றேன். அஞ்சேல் என்று ஆதரியுங் கள் அண்ணல்! அந்தோ! அம்மா!

(ஓடுகிறுன்.)

**பெருஞ்சாத்தன் :** (தனிமொழி)

'தன்வினை தன்னைச் சுடும்', 'வினை விதைத்தவன் வினையை அறுப்பான்' என்பன போன்ற பழமொழிகள் என் அளவில் எப்படி உண்மையாகிவிட்டன! இனி என் வாழ்வு எதற்கு? அன்று என் காதலிக்காக உற்றாரை—மற்றாரை இழந்தேன். இன்றோ என் காதலியை இழந் தேன்—அதுமட்டுமா? அமைச்சர் பதவியும் பறி போயிற்று. நாட்டிலே என்றென்றும் கெட்ட பெயரும் உண்டாயிற்று. தெய்வத்திற்கும் மாறுபட்டேன். அறத்தைக் கைவிட்டேன். பழிக்குத் துணையானேன்; பாவத்தை வளர்த்தேன்; ஆம்! அத்தனையும் இன்று என்னையே சாகடிக்கும் நிலைக்குப் பற்றிச் செல்லுகின்றனவே. வஞ்சுளம்! என் அருமைக் காதலி வஞ்சுளம்! ஆம்; நான் எத்துணைப் பெரிய அமைச்சராக இருந் தாலும் அவளுக்கு அடக்கமாகவன்றோ இருந்தேன்! அவள் சம்பாதித்த பொருள்தான் எத்தனை! 'அத்தான், அத்தான்' என்று எப்படி வளைய வளைய வருவாள்! அந்தோ! அவள் முதுகில் அந்தப் பிரம்படி வீழ்ந்த வேகத்தில் அப்படியே மயங்கி வீழ்ந்தவள் எழுந்திருக்க வில்லையே. அந்தப் பிரம்படிதானே அந்த வாதவூரரை—இல்லை—மாணிக்கவாசகரை உலகுக்கு உயர்ந்தவராகக் காட்டிற்று. தெய்வ உண்மையினையும் அறநெறியினையும் மறைத்து விடலாமென்றல்லவா மனப்பால் குடித்தேன்! 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்ற நீதிமொழி எப்படி உண்மையாகி விட்டது! தெய்வமே! இனி உன்னிடம் புகலன்றி வேறு வழியில்லை. உன்னை இல்லை யென்று சொல்லிக் கொடுமை இழைத்தது போதும். அதனால் நாடே நலிவுற்றதே! அரசன் தன் ஒரு மைந்தனை

இழந்தான். பழநிக்கொற்றன் தன் தாயை இழந்து அலமறுகிறான் எனக் கேள்விப்பட்டேன். நானோ எனது வாழ்வின் வைப்பாகிய வஞ்சுளத்தையே இழந்தேன். தமிழ் நாடு தான் உள்ளவரை எங்கள் வாழ்வினை எண்ணித் திருந்துமா?

எத்தனை பொய்கள் சொன்னேன்! மணிவாசகர் தம் பேரும் புகழும் கண்டு எவ்வளவு உள்ளம் புழுங்கினேன்! அதனாலேயன்றோ இத்தனை கொடுமைகளை நானும் மற்றவரும் சேர்ந்து அவருக்கு இழைத்தோம்! முடிவில் என்னாயிற்று? அவர் புகழ் உலகம் உள்ளளவும் ஓங்கி வாழும். நாங்கள் குடியிழந்து, வாழ்விழந்து, வளமிழந்து இன்று நிற்பதோடு என்றென்றும் பழியேற்றல்லவா இருக்கவேண்டும். இதுவரை எனக்கென இருந்த இந்தப் பதவியும் பறிபோயிற்று. என் செய்வேன்? அந்த மாணிக்கவாசர் தம் பாதங்களைப் பணிந்து மன்னிப்புக் கேட்பதன்றி வேறு என்ன செய்ய முடியும்! ஆம்; அவர் மீனாட்சி சொக்கேசர் திருக் கோயிலில் இருக்கிறார் என்றல்லவா சொன்னார்கள்; இதோ ஓடுகிறேன். அவர் அடியில் வீழ்ந்து என் அல்லல் வாழ்வைப் போக்கிக் கொள்ளுகிறேன்.

(தூரத்தே பழநிக் கொற்றன் வாடிய முகத்தோடு வருகிறான்.)

என்ன! அதோ வருகின்றவன் பழநிக் கொற்றனல்லவா? எப்படித் தளர்ந்து விட்டான்? முகம்தான் எப்படிச் சோர்ந்து போயுள்ளது? பாவம்! அவனும் வாழ்விழந்தான். அவன் என் மைத்துனியை எண்ணி எண்ணி ஏங்கித் திருமணமும் செய்து கொள்ளாதிருந்தான். அவன் தாய் எங்கேயோ கிராமத்தில் இருந்துகொண்டு இவனால் எல்லாக் காரியங்களையும் சாதிப்பதாக சொல்லிக் கொண்டு ஊரெல்லாம் கையுறையாகப் பொருள் பறித்துக்கொண்டிருந்தாள். ஆனால் இந்தப் பிரம்படி அவள் உயிரையுமல்லவா கொண்டு சென்றுவிட்டது!

(பழநிக்கொற்றன் அருகில் வந்து விம்மி விம்மி அழுகிறான். இவன் தேற்றுகிறான்.)

தம்பி! வீணில் அழுவதில் பயனில்லை. இப் பாண்டி நாட்டு எல்லையிலிருக்கும் பழநிப்பெருமான் பெயர் கொண்டாய். ஆனால் அவனைப் போற்றும் பண்பு இல்லை. ஆகவே வந்ததைப் படவேண்டுமே! ஆமாம்; உன் தாயின் பிணத்தையாவது கண்டாயா;

பழநி : (அலறி அழுது) ஐயோ, அண்ணா! அந்தக் கொடுமையினை நினைத்தாலும் நெஞ்சம் வேகிறது. அந்தப் பிரம்படி அவள் உடலை நன்கு தாக்கியிருக்க வேண்டும். நான் இங்கே உங்கள் இழப்பெல்லாம் பார்த்துக்கொண்டு, பிறகு ஊர் செல்லச் சில நாட்களாகிவிட்டன அல்லவா? சென்று பார்க்கிறேன். அவள் உருவம் தெரியாதபடி உடல் அழுகிக்கிடந்தது. பக்கத்தில் உள்ளவர்கள் யாரோ எல்லாப் பொருள்களையும் கொள்ளை கொண்டு விட்டார்கள். நான் இனிப் பொருளுக்காகத் தொல்லைப் படப் போவதில்லை. என் தாய் என் பெயரைச் சொல்லிச் சைபூட்டாக எவ்வளவு சம்பாதித்தாள்? ஆனால் அவள் உருவைக்கூடச் சரியாகக் காணமுடியாதபடி அழுகி நாற்றமெடுத்த எலும்பும் தோலும் சேர்ந்த கூட்டுப் பிண்டத்தைக் காண நேர்ந்த ஒன்றே என்னை வாட்டுகிறது. (அழுகிறான்.)

பெருஞ் : தம்பி! அழாதே! நாம் செய்த வினை நம்மேல் பழி தீர்த்துக்கொண்டது. அவ்வளவுதான். இந்த உண்மையை உணராது என்னென்னவோ கோட்டை கட்டினோம். கோட்டை சரிந்ததோடு உலகம் உள்ளளவும் தீராப்பழியும் நேர்ந்தது. நம் பதவிகள் போயின. ஏன்? அரசன் வாழ்வும் இத்துடன் சரிதான்.

பழநி : அண்ணா; உண்மைதான், நீ கூறியது! எனக்கு உதவிய அந்தப் பெரியவருக்கு—மாணிக்கவாசருக்கு நாம் இழைத்த கொடுமைகளை எண்ணினாலும் நெஞ்சம் நடுங்குகிறது.

**பெருஞ் :** தம்பி! எண்ணிக்கொண்டிருப்பதில் பயனில்லை அவர் காலடியில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டாலன்றி இனி வேறு வழியில்லை—வா! போகலாம். அவர் கோயிலில் உள்ளதாகச் சொன்னார்கள். அங்கே சென்று காணலாம்.

(இருவரும் போகின்றனர். கோயில் வாயிலில் அரசன் எதிர்ப்படுகின்றான்.)

(இருவரும் அவனடியில் வீழ்ந்து வணங்குகின்றனர்.)

**அரச :** எங்கே இங்கும் வந்தீர்கள்? கொடியவர்களே! உங்களை நம்பி நம்பி நான் பட்டது போதும். நாடு குறைந்து, நலம் குறைந்து, பெயர் குறைந்து, புகழ் குறைந்து, இன்று என் குலக் கொழுந்தையே இழந்தேன். இன்னும் என்ன சதி செய்ய இங்கே வந்து சேர்ந்தீர்கள்? அப்பால் ஒடுங்கஇ.

(இருவரும் மறுபடியும் வணங்கி எழுகின்றனர்.)

**இருவரும் :** அரசர் பெரும! எங்கள் தவறுகளை உணர்ந்து நாங்கள் திருந்தி விட்டோம். நாங்கள் பட்டம் பதவி நாடி வரவில்லை. தங்களுக்கு ஏதும் சொல்லி மனமாற்றம் செய்ய வரவில்லை. நாங்கள் செய்த கொடுமைகளுக் கேற்ற தண்டனைகளைப் பெற்றுவிட்டோம். நான் என் மனைவியை இழந்தேன். இதோ இவன் தன் தாயை இழந்ததோடன்றி அவளை உருத்தெரியா நிலையிலேயே கண்டான். நாங்கள் இருவரும் இனி அந்த மாணிக்க வாசகரைக் கண்டு, காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கவே செல்லுகிறோம்.

**அரச :** அப்படியா? நல்லது. என்போன்றே கண் கெட்ட பிறகு சூரிய வணக்கமா? நல்லது; வாருங்கள். நானும் அவரைக் காணத்தான் போகின்றேன். அவர், இதோ, இக் கோயிலின் உள்தான் இருக்கிறார். அனைவரும் சென்று, அவர் காலில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டு உய்யலாம்.

**இருவரும் :** அப்படியே.

(அனைவரும் கோயிலுள் செல்லுகின்றனர்.)

**மாணிக்கவாசகர் :** *(இறைவன் முன் நின்று தனிமையில் தம்மை மறந்து கசிந்துருகிப் பாடிக்கொண்டிருக்கிறார். மூவரும் தொலைவில் நின்று கேட்டுக் கண்ணீர் பெருக நிற்கின்றனர்.)*

*'நரியைக் குதிரைப் பரியாக்கி*
*ஞால மெல்லாம் நிகழ்வித்துப்*
*பெரிய தென்ன மதுரையெல்லாம்*
*பிச்ச தேற்றும் பெருந்துறையாய்!*
*அரிய பொருளே அவிநாசி*
*அப்பா பாண்டி வெள்ளமே!*
*தெரிய அரிய பரஞ்சோதி*
*செய்வ தொன்றும் அறியேனே!*

*பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்*
*பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்*
*விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்*
*கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை*
*மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு*
*புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்!*

**அரசன் :** *(தூரத்தே) ஆகா! என்ன உருக்கமான பாடல் நான் செய்த கொடுமைகளையும் இழைத்துப் பாடுகின்றாரே? தம்மை மறந்த நிலையில் உள்ள அவரை அணுக வேண்டாம். நாம் சற்றுத் தள்ளியே இருப்போம்*

**இருவரும் :** *ஆ! ஆ! அதோ எங்கோ மெள்ள அக் கடம்ப மரத்தடியில் செல்லுகின்றாரே! (கடம்ப மரத்தில் ஒரு கிளையில் கிளியும் ஒன்றில் குயிலும் உள்ளன. அவற்றை நோக்கிப் பாடுகின்றார் மணிமொழியார்.)*

மாணி : சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடிகூறாய்—சாலவும்
**ஏதிலார் துண்ணென்ன** மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாங் கொடி.

அரச : ஆகா! கிளியினிடம் எப்படி மாற்றார் உள்ளம் அடைந்த 'துண்' என்ற நிலையைப் பாடிக் காட்டி விட்டார். அதோ குயிலிடம் பாடுகின்றார் போலும்.

மாணி : கீத மினிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லில்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லான்
அந்தமி லான்வரக் கூவாய்.

அரச : (தூரத்தே)—கேட்டீர்களா? ஆகா! கடவுள் தன்மையை எப்படி எப்படிக் குயிலிடம் கூறுகின்றார்? அந்தக் கிளியும் குயிலும் அவர் பாடல்களைக் கேட்டு எப்படி அசைவற்று நிற்கின்றன என்பதைக் கண்டீர்களா? என்ன? எங்கேயோ போகிறாரே! அதோ ஒரு தும்பி—வண்டு—பறக்கிறதே. அதன் அருகே போய் ஏதேதோ பாடுகிறாரே!

மாணி : பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா! என் ஆரமுதே! அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ!

அரச : எத்தனை அருமையான பாடல். உலக வாழ்வையும் அவர் விடுபட்ட நிலையினையும் எவ்வளவு தெளிவாகக்

காட்டி விட்டார். (மணிவாசகர் அருகில் வந்து அவர் திரும்பிப் பார்க்க, மூவரும் அவர் அடியில் வீழ்கின்றனர்.)

**மாணி :** இது என்ன செயல்? அரசே! எழுந்திருங்கள். நீங்கள் இவ்வாறு செய்யத் தகாது! பல அரசர் முடி வைத்து வணங்கும் அடியுடைய பாண்டி மன்னர் இப்படிச் செய்யலாமா? தங்கள் அமைச்சர்களையும் இப்படிச் செய்ய விடலாமா?

**அரச :** பெருமானே! என்னை—எங்களை மன்னியுங்கள். எங்கள் கண்ணும் உணர்வும் திறக்கப்பெற்றன. இனி நாங்கள் உங்கள் அடிமை. தங்கள் ஆணைவழி நிற்போம். நான் இதுவரை உங்கள் பெருமையினைத் தெரியாது ஏதேதோ செய்து விட்டேன். இவர்களும் தங்கள் குற்றங்களை உணர்ந்து இங்கே தங்கள் அருள்பெற வந்துள்ளார்கள்.

**மாணி :** அரசர் பெருமானே! அமைச்சர்களே! நீங்கள் ஒன்றும் எனக்குக் கொடுமை செய்யவில்லையே. நான் என் விருப்பம்போல் ஆண்டவனைப் பாடிச் செல்ல வன்றோ வாய்ப்பளித்தீர்கள்.

**அரச :** பெரும! தாங்கள் பாடிய பாடல்களைக் கேட்டு இந்தக் கிளியும், குயிலும், வண்டும், தும்பியும், விரும்பி வந்து மெய்ஞ்ஞான நாட்டமுற்று அசைவற்றுக் கடவுள் இன்பத்தில் திளைத்து மகிழ்வதைக் கண்டோம். ஆனால், மனிதர்களாகிய நாங்கள், உங்கள் பாடல்களை—அன்றே பாடிய பாடல்களை—அறியாது, ஆணவத்தால் கண்மூடி. அல்லல் பல தங்களுக்கு இழைத்த கொடுமையை எண்ண நெஞ்சம் புண்ணாகின்றதே.

**பெருஞ் :** (பாதங்களில் விழுந்து) அண்ணல்! எல்லாக் கொடுமைகளுக்கும் நான்தானே காரணமானேன். அடிமையை மன்னியுங்கள்.

**பழநி :** ஆமாம்! என்னை—எங்கோ கிடந்த என்னை—வா என்று அழைத்து, என்னால் அறியாப் பதந்தந்தீர்கள்.

யான் அது அறியாதே கெட்டு உங்களுக்கே தீங்கிழைத்தேன். எனக்கும் தங்கள் மன்னிப்புக் கிட்டுமோ!

(அழுகிறான்.)

மாணி : எழுந்திருங்கள். நீங்கள் செய்த அனைத்தும் என்னைப் பொறுத்த வரையில் எனக்கு நன்மையாக முடிந்தன. நான் இது வரையில்,

ஏழைத் தொழும்பனேன்
எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப்
பணியாதே கிடந்து விட்டேன்.

என் தவறுகண்டு ஆண்டவனே வந்து உணர்த்தினன். ஒரு வேளை நீங்களெல்லாம் இந்த நன்மைகளைச் செய்யாதிருந்தால், நான் ஒருவேளை ஆண்டவனை மறந்து மறுபடியும் அல்லல் வாழ்வில் மூழ்கி இருந்பேன். நீங்கள் செய்த அந்தச் செயல்கள்தாம் என் கண்ணைத் திறக்க வைத்தன. அது மட்டுமா? எனக்குக் காட்சி தந்து மறைந்த அந்த இறைவன், எனக்கு மிக நெருக்கமாக வர வாய்ப்பையும் உண்டாக்கினீர்கள். அதுமட்டுமா? இம் மதுரை மாநகர மக்கள் அனைவரும் அவன் ஆடல் கண்டு உருவு காண உணர்ந்து போற்ற வாய்ப்பளித்தீர்கள். எனவே நீங்கள் எனக்குச் செய்த அத்தனையும் நன்மையே அன்றித் தீமையென்று யாரே சொல்ல வல்லார்?

அரச : இதனால் தங்கள் உயர்ந்த பண்பும் இறையுள்ளமும் தெரிகின்றது. ஆனால், நாங்கள் செய்த தவறுகள் எங்கள் உள்ளங்களை வாட்டுகின்றன.

மாணி : வாடவேண்டாம். என்னை உண்மையில் வாழ வைத்தவர்கள் நீங்கள். அடிமை வாழ்வில் பட்டுழன்ற எனக்கு உரிமை வாழ்வை—விடுதலையைத் தேடித்தந்தவர்கள் நீங்கள். நான் திகைத்தேன்—தேற்றினீர்கள்—தெளிவித்தீர்கள். என்னினும் நீங்கள் உயர்ந்தவர்கள். குதிரைச் சேவகனாக வந்தபோதும், மண் கொட்ட வந்தபோதும்

அந்தப் பெருமானை—சொக்கேசனை நேரில் கண்டவர்கள் நீங்கள். உங்கள் பழி பாவம் அனைத்தும் அவன் பார்வையில் பட்டு நீறுயின. ஆம். நான் இனி விடுதலை அடைந்த பறவையாகி விட்டேன். விருப்பம் போல் யாண்டும் அவன் புகழ்பாடிச் செல்லலாம். அதுதான் அவனுடைய ஆணையும்கூட." எனக்கு இந்தப் பெருவாழ்வை—விடுதலை வாழ்வை—மெய் உணர்வின் வாழ்வை—இறை இன்ப வாழ்வை—யாருக்கும் பணியா வாழ்வை—எவருக்கும் கைகட்டா வாழ்வை—எவர் சொல்லையும் எதிர்பார்க்காத வாழ்வை—எஞ்ஞாத மெய்ஞ்ஞான வாழ்வைத் தந்த—தர வாய்ப்பாக நின்ற உங்களை நான் பாராட்டுகிறேன். சென்று வாருங்கள். ஆண்டவன் உங்கட்கு எல்லா நலமும் அருள்வான்.

அரச : அண்ணலே! தாங்கள் இனி அமைச்சர் பதவியை ஏற்று எனக்கு வழி காட்ட மாட்டீர்கள் என்பதறிவேன். ஆயினும் வெளியே எங்கும் போகாது இங்கேயே இம் மதுரைப் பெரு நகரிலேயே இருந்துகொண்டு எங்கள் வழிபாட்டினை ஏற்று எங்களை என்றென்றும் கடைக்கணித்தருள வேண்டுகின்றோம். இறைவனே!

இருவரும் : ஆமாம்! எங்கள் இருவர் வேண்டுகோளும் அதுவே. நாட்டு மக்கள் விருப்பமும் அதுவே!

மாணி : உங்கள் விருப்பம் அதுவாயின் நல்லதுதான். ஆனுல், நான் இனி விடுதலைப் பறவை. ஓரிடத்தில் ஒரு நாளைக்கு மேல் தங்கினாலும் பற்றும் பாசமும் பற்றிக் கொள்ளும். மற்றும் ஆண்டவன் நாட்டில் பல பகுதிகளில் கோயில் கொண்டுள்ளான். என்னைக் குருந்தமரத்தடியில் அடிமையாகக் கொண்ட அந்த வேளையில் அக் கொற்றவன் 'மண்மேல் என்னைப் பாடுவாயாக' எனப் பணித்தான். மற்றும் நான் இன்னும் உலகில் பல செயல்கள் செய்ய வேண்டியிருப்பதாலேயே என்னைவிட்டுச் செல்வதாகவும்

கூறினன். எனவே எனக்குத் தெரியாமலே எங்கெங்கோ என்னால் ஆற்றவேண்டிய பல பணிகள் காத்திருக்கும். பிறந்தது முதல் இதுவரை உங்களோடு—உங்கள் நாட்டில் இருந்தேன். இனி எனக்கு யாதும் ஊர்—யாவரும் கேளிர்; தீதும் நன்றும் என்னைத் தீண்டா: ஊரூர் திரிந்து எவரும் தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவது என்பதே என் எண்ணம். எனவே என்னை விட்டு விடுங்கள். நான் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி அவன் காட்டிய வழியே சென்று அன்பர் பணி செய்கின்றேன். நீங்கள் உங்கள் கடமைகளை வழுவாது செய்து சொக்கேசர் அருளுக்குப் பாத்திரமாகுங்கள். கடவுளை விட்டு நீங்கள் நெடுந்தூரம் செல்ல நினைத்தாலும் அவர் உங்களை அணைத்துக் கொள்வார். இதோ எங்கோ சென்ற நீங்கள் இன்று அவன்முன் நிற்கின்றீர்கள். இது என்றென்றும் உண்மையாகும் நியதி. உங்கள் பணி சிறப்பதாக! நான் சென்று வருகின்றேன்.

(மூவரும்—மற்றுமுள்ள பலரும் கண்ணீர் சிந்த மணிவாசகர் மெல்ல அடி எடுத்துப் புறம் போகின்றார். அவர் வாய் அமைதியாகப் பாடுகின்றது.)

☆

# அ. மு. ப.வின் நூல்கள் மொத்தம் 80

## உள்ளவை

| | | ரூ. காசு |
|---|---|---|
| காஞ்சி வாழ்க்கை | — | 5-00 |
| சமுதாயமும் பண்பாடும் | — | 10-00 |
| கவிதையும் வாழ்க்கையும் | — | 15-00 |
| தமிழக வரலாறு | — | 15-00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | — | 20-00 |
| காப்பியக் கதைகள் | — | 5-00 |
| வாழ்வுப் பாதை (நாவல்) | — | 4-00 |
| வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும் | — | 3-00 |
| இளமையின் நினைவுகள் | — | 2-50 |
| கொய்த மலர்கள் | — | 4-00 |
| துன்பச் சுழல் (நாவல்) | — | 2-00 |
| மக்கட் செல்வம் | — | 2-00 |
| பெண் | — | 1-50 |
| மனிதன் எங்கே செல்கிறான்? | — | 1-50 |
| மணி பல்லவம் | — | 1-25 |
| தொழில் வளம் | — | 5-00 |
| எல்லோரும் வாழவேண்டும் | — | 3-00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | — | 3-00 |
| வழுவிலா மணிவாசகர் | — | 7-00 |
| மலைவாழ் மக்கள் மாண்பு | — | 5-00 |
| வள்ளுவர் வகுத்த வாழ்க்கை நெறி | — | 2-50 |
| கவிதை உள்ளம் | — | 5-00 |
| சிறுவர்களுக்கு (வானொலி) | — | 2-50 |
| வானொலி வழியே | — | 3-00 |
| நாலும் இரண்டும் | — | 2-50 |
| தமிழ் உரைநடை | — | 8-00 |
| சுவையைத் தமிழ் | — | 3-50 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | — | 5-00 |
| வாய்மொழி இலக்கியம் | — | 6-00 |
| 19 நூற்றாண்டின் தமிழ் உடைநடை வளர்ச்சி | — | 7-00 |
| சாத்தனார் | — | 6-00 |
| மு. வ. தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு | — | 5-00 |
| புதிய கல்விமுறை | — | 3-00 |
| Gleanings of Tamil Culture | — | 3-50 |
| Ancient Temples ot Tamil Nadu | — | 30-00 |
| Historical Studies to Thevaram.Hymns | — | 12-00 |